
கல்கி
இரண்டு புத்தகங்கள்!
KALKI
16.4.2000
ரூ. 5.00
'கலகலா'
ஸ்பெஷல்!
எப்ரலில் ஒரு
தீபாவளி!



பட்டு
சாம்ராஜியத்தின்
வெற்றி
நிறுவனம்
பட்டுச்சேலைகளுடன்
தினசரி விரும்பி அணியும்
ஃபாஷன் பேன்ஸி
சேலை உலகம்
காஞ்சிபுரம்
S.M. சில்க்ஸ்
புரசைவாக்கம் : பிரின்ஸ் டவர்ஸ், 94, புரசைவாக்கம் நெடுஞ்சாலை ✆ 6433145
தி. நகர் : 10 நாகேஸ்வரன் சாலை, பனகல் பார்க் ✆ 4346190
வண்ணாரப்பேட்டை : 103, ஜீ.எ. ரோடு, டெலிபோன் எக்ஸ்சேன்ஜ் எதிரில் ✆ 5976589
காஞ்சிபுரம் : கப்ரீம் டவர் உட்புறம், மணிக்கூண்டு அருகில் ✆ 0424-222659
ஈரோடு : 23G, பதோத்தனி சன்னதி தெரு, ரங்கசாமி குளம் அருகில் ✆ 04112, 21342

நட்சத்திர நச்! (1)








"தீவிர ரசிகனை மதிக்கிற இயல்பு நம்ம நடிகைகளுக்கு சுத்தமா இல்லேடா!"

"விடு தாத்தா... குஷ்பூ, கல்யாண இன்விடேஷன் அனுப்பாததையே நினைச்சு எப்பப் பார்த்தாலும் புலம்பிக்கிட்டு...!"

— உ. ராஜாஜி



கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



வி.ஐ.பி. விருப்பம்

தம் நிறைவேறாத விருப்பத்தை நினைவுகூர்கிறார் விவேக்.

'கப்பலேறிய' கனவு!

"என்னோட இரண்டு விருப்பம் நிறைவேறவில்லை. இன்னும் மனத்தில் புகைந்து கொண்டே இருக்கிறது. முதல் ஆசை, பட்டாளத்தில் சேர வேண்டும் என்பது. அதற்கு முன்னோடியாக டக், டக்கென்று ஷூ போட்டுக் கொண்டு மடிப்புக் கலையாத யூனிஃபார்முடன் தலையில் தொப்பி, அதில் சிறிய இறகு என்று வைத்துக் கொண்டு அணிவகுத்துச் செல்லும் என்.சி.சி.யில் சேர வேண்டுமென்பது பள்ளியில் படிக்கும்போது என் ஆசை. அத்தோடு மிகவும் முக்கியம், அணி வகுப்பு முடிந்தவுடன் கொடுக்கப்படும் பூரி கிழங்கு சந்துணவு.

யாரோ சொன்னார்கள்; கோயமுத்தூரில் உள்ள சைனிக் பள்ளியில் சேர்ந்தால் அப்படியே மிலிட்டரிக்கு எடுத்துக் கொண்டு விடுவார்கள் என்று. உடனே சைனிக் பள்ளியில் சேர நுழைவுத் தேர்வும் எழுதி பாஸ் செய்து விட்டேன்.

ஆனால் என் பாட்டி நான் போரில் வீரமரணம் எய்து வதைக் கற்பனை செய்ய முடியாமல் 'போகாதே. போகாதே என் பேராண்டி' என்று தடுத்து விட்டார்!

அமெரிக்கன் கல்லூரியில் நான் சேர்ந்தபோது, பாட்டி சொர்க்கத்துக்குப் போய் விட்டார். எனவே தைரியமாக என்.சி.சி.யில் சேர மனுப் போட்டேன். 'நடக்கும்போது முட்டி இடிக்குது தம்பி' என்று என்னை ரிஜக்ட் செய்து விட்டார்கள்.

'அட இது என்ன சோதனை' என்று என்.சி.சி.யிலே நேவி (கப்பல் படை) பிரிவில் சேர முடியுமா என்று போராடி இடம்பெற்றேன். நான் ஒரு நலிந்த நேவி கேடட். ஷூக்களுக்கு ஒயிட் பாலீஷ் வாங்கக் கூட காசு கிடையாது. சாக் பீசைத் தண்ணீரில் கரைத்து ஷூக்களுக்குப் பாலீஷ் போடுவேன். நமக்கு நிச்சயம் நேவியில் இடம் உண்டு என்ற தன்னம்பிக்கையுடன், மதுரை தெருக்களிலேயே கனவுக் கண்களுடன் கப்பல் ஓட்டிக் கொண்டிருந்தேன். விதி எனக்குக் கண்ணாடி போட்டுவிட, அதோடு என் நேவி ஆசையும் காகித ஓடம் கடலில் போனது போல் ஆயிற்று!

நேவி ஆசை நிறைவேறாத ஆசையாகி விட்டதே என்று தற்கொலை செய்து கொள்ளாமல் வெற்றியின் படிக்கட்டாய் நினைத்து பின்னணிப் பாடகனாக வர முயன்றேன். அப்போது இளையராஜா புதுப் பின்னணிப் பாடகர்களைத் தேர்ந்தெடுக்க தமிழகம் முழுதும் தேர்வு நடத்திக் கொண்டிருந்தார்.

"போடா, போடா பொக்கே. என்னுக்காட்டுக்கு தெற்கே' என்ற பாட்டைப் பின்னணி இசையுடன் சேர்த்து பயிற்சி பெற்று கடைசியில், "ஆமா தேடி தேடி போயே உந்தன்..." என்ற பாகவதர் காலத்துப் பாட்டை பாடிக் காட்டி விட்டேன்.


'தம்பி போய் வா... தகவல் சொல்கிறோம்' என்று சொல்லி விட்டார், இளையராஜா!

ஆல் இந்தியா ரேடியோவில் நிலைய வித்வான் ஆகலாம் என்று மனு போட்டேன். அதுவும் கிடைக்கலை. எனவே நாட்டைக் காக்கும் விருப்பமும், பாட்டைக் காக்கும் விருப்பமும் எட்டாக் கனிகளாகப் போய்விட்டன. இருந்தாலும் என் வாழ்வில் விளக்கேற்றியது இளையராஜாவும், ஆல் இந்தியா ரேடியோவும்தான். இதில் ஏதாவது ஒரு வாய்ப்பு கிடைத்திருந்தால் கூட நான் நடிப்புக்கு வந்திருக்க மாட்டேனல்லவா?

— ரமா

படம் : குழலன்

விக்ரம வருஷத்து குதிரை வண்டிகள்!




இது விக்ரம ஆண்டு. அறுபது வருடங்களுக்கு முன் வந்த விக்ரம ஆண்டு எப்படி இருந்திருக்கும்? இரண்டு விக்ரம ஆண்டுகளைக் கண்ட அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமனைக் கேட்டோம்:

"அப்போது கிரிக்கெட் மோகம் கிடையாது. தெருவில் சிறுவர்கள் ஃபுட்பால் ஆடுவார்கள். மின்சார ரயில்தான் மக்கள் பயணம் செய்த முக்கிய வாகனம். ஒவ்வொரு ரயில் நிலையத்துக்கு வெளியிலும் இருபது, முப்பது குதிரை வண்டிகள் நின்று கொண்டிருக்கும். கூடவே கை ரிக்ஷாக்கள். ரயில்களில் அப்போதும் கூட்டம் நிறையவே இருக்கும். சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு 'மெட்ராஸ் அண்டு சதர்ன் மராட்டா ரயில்வே'என்று பெயர். சைதாப்பேட்டையிலிருந்து, மாம்பலத்துக்கு மாதாந்திர சீசன் டிக்கெட் ஒரு ரூபாய். சைதாப்பேட்டையில் ரிச்சர்ட்ஸ் பார்க் என்று ஒன்று இருக்கும். மாலை நேரங்களில் பொது ரேடியோ ஒலிக்கும். மக்கள் வந்து அமர்ந்து ரேடியோ கேட்பார்கள். அதே போல பனகல் பார்க்கிலும் மக்கள் திரளாக ரேடியோ கேட்பார்கள். சென்னை நகரத் தெருக்களில் டிராம் வண்டி ஓடிக் கொண்டிருந்தது!

"கடந்த அறுபது வருடங்களில், மக்கள் நெரிசல் அதிகமாகி விட்டது. சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. தமிழ் மொழி அபாரமாக வளர்ச்சி அடைந்து, ஒரு கட்டத்தில் தேக்கமும் அடைந்து விட்டது!"

— மானஸா




"கண்டுகொண்டேன்! கவிதை மாதிரி படமெடுக்கத் தெரிந்த ஒரு டைரக்டரைக் கண்டுகொண்டேன்! துளி பந்தா இல்லாத ஓர் உலக அழகியைக் கண்டுகொண்டேன்!" என்று துள்ளிக் குதிக்காத குறையாகக் குதூகலப்பட்டார் கலைப்புலி தாணு.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று வெளிவரும் படங்களிலேயே அதிக எதிர்பார்ப்பைத் தூண்டியிருக்கும் இரண்டில் ஒன்றான 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத் தயாரிப்பாளர் தாணுதான்.

'கரம் மசாலாவுக்குப் பேர் போன நீங்கள் எப்படி உஜாலாவுக்கு மாறினீர்கள்?' என்று கேட்பதற்காகத்தான் தாணுவை அணுகினோம்.

ராஜீவ்மேனன், ஐஸ்வர்யா ராய், தபு, அஜித், மம்முட்டி, அப்





ஏப்ரலில் ஒரு தீபாவளி!



• தாணு
(படம் : வெங்கடேஷ்)

பாஸ், ஏ.ஆர். ரஹ்மான் என

இந்தப் படத்தில் ஏராளமான 'ஏ சென்டர்' நட்சத்திரங்கள் இணைந்திருக்கின்றன. படத்தின் புகைப்பட ஆல்பத்தைப் பார்த்தால் 'கோடையிலே இளைப்பாறிக் கொள்ளக் கிடைத்த குளிர் தரு'வாகத்தான் இருக்கிறது.

"கதையில் கொஞ்சம் ஈரம் இருந்தால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். மசாலாக்கள் மூலமே பிரபலமானவன் என்றாலும் கிழக்குச்சீமையிலே, சிறைச்சாலை மாதிரி படங்களையும் தந்தவன்தானே நான்?" என்கிறார் தாணு.

ராஜீவ்மேனனின் முதல் படமான 'மின்சாரக் கனவி'ன் போதே ஏற்பாடான திட்டமாம் இது.

"மிகச் சுருக்கமாக ஒரு கருவைச் சொன்னார். இரு சகோதரிகளின் காதல். அவர்களது குடும்பத்தில் ஏற்படும் பிரச்னைகள். எதிர்ப்படும் ஒரு பெரிய பள்ளத்தில் விழுகிற காதல், மீண்டும் எப்படி மேலே வருகிறது என்பதுதான் விஷயம்.



"இளமை, ஜனரஞ்சகம், குடும்பப் பாங்கான திரைக்கதை. உண்மையில் இப்படியொரு படத்தை நான் தயாரித்திருப்பது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன்!" என்கிறார் தாணு.

ஒரு படம் தயாரிக்கத் தொடங்கும் போதே வானுயர விளம்பரங்களால் பிரமிப்பூட்டும் தாணு, இந்த முறை அடக்கி வாசிப்பது ஏன்?

"டைரக்டர் என் கைகளைக் கட்டிப் போட்டு விட்டார். நாம் பேசக் கூடாது; படம் பேசட்டும் என்பது அவர் கட்டளை. அதனால்தான் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன். ரிலீஸான பிறகு பாருங்கள்! ஒரு தீபாவளியே கொண்



டாடி விட மாட்டேன்!?'' என்று பயங்கரத் திட்டங்களுடன் சஸ்பென்ஸ் வைக்கிறார்.

பாடல் காட்சிகளுக்காக வாஸ்கோடகமா மாதிரி உலகம் சுற்றியிருக்கிறார்கள். சவுகார்ப்பேட்டையில் ஒரு காட்சி, ஈக்காடுதாங்கலில் இன்னொரு காட்சி என்பது போல விஜிபி கடற்கரை தொடங்கி, ஸ்காட்லாந்து; எகிப்து என திசைக்கொரு தேசமாக உலா சென்று வந்திருக்கிறார்கள்.

''இதெல்லாம் என்ன பெரிய விஷயம்? யார்தான் வெளிநாடு ஷூட்டிங் போகாமலிருக்கிறார்கள்?'' என்று கேட்கலாம்.

யாரும் செய்யாத புதுமையாக உள்ளூரிலேயே ஒரு காரியம் செய்திருக்கிறார்கள் ராஜீவும் தாணுவும்.

உடுமலைப்பேட்டையிலும் ஈரோட்டிலும் படம் வெளிவருவதற்கு முன்பே இரு ப்ரீவ்யூ காட்சிகள் ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறார்கள். பூக்காரிகள், ரிக்ஷா ஓட்டுநர்கள்; லாரி – ஆட்டோ டிரைவர்கள், கூலித் தொழிலாளர்கள் தொடங்கி டை கட்டும் ஆசாமிகள் வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூறு 'வி.ஐ.பி'கள் அக்காட்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

படம் பார்த்த 'சி சென்டர்' ரசிகர்களின் கருத்துப்படி சில முக்கியமான திருத்தங்கள் செய்யப்பட்ட பிறகே படம் இப்போது வெளியாகிறது!

''அத்தனை பேருக்கும் படம் பிடித்திருந்தது. தியேட்டரை விட்டு வெளியேறுமுன் ஒவ்வொருவரிடமும் இந்தப் படத்தின் பெயர் எழுதிய துண்டுச்சீட்டு ஒன்றை அளித்தோம். கதவுக்கு வெளியே ஜீன்ஸ், கிழக்குச் சீமையிலே, காதலுக்கு மரியாதை, ஜென்டில்மேன் மாதிரி 200 நாட்கள் ஓடிய படங்களின் பெயர்களை எழுதிப் போட்டு, 'இவற்றுள் எந்தப் படம் மாதிரி இந்தப் படம் ஓடும்?' என்று கேட்டோம். சொல்லி வைத்த மாதிரி அத்தனை பேரும் சுட்டிக்காட்டியது, காதலுக்கு மரியாதை!'' என்றார் தாணு.

எல்லாம் சரி; 'ஐஸ்' எப்படி?

''அதை ஏன் கேட்கிறீர்கள்? படு எளிமையான உலக அழகி அவர். பந்தா கிடையாது, ஈகோ பிரச்னை கிடையாது, எங்கள் யூனிட்டோடு இரண்டறக் கலந்து விட்டார். லஞ்ச் ப்ரேக் விட்டால் பஃபே மீல்ஸில் சகஜமாக வந்து கலந்து கொண்டு விடுவார். டைரக்டர் முதல் லைட் பாய் வரை ஒரே உணவுதான்! இப்படியொரு அனுபவம் மிகப் புதிது!

''ஐஸ்வர்யாராயின் அடுத்த தமிழ்ப் படமும் அநேகமாக என் தயாரிப்பாகத்தான் இருக்கும்!'' என்று சஸ்பென்ஸில் முடித்தார் தாணு.

யார் கண்டது? தீபாவளியில் ஒரு தமிழ்ப் புத்தாண்டோ என்னவோ.

— ஸ்ரீராம்

அட்டையில் : ஐஸ்வர்யா ராய்

புரட்சிகரமான ஆபரேஷன்!

கர்ப்பப் பை வாயில் புற்று நோய்! கதிரியக்கச் சிகிச்சை அளித்தால் கருமுட்டை உற்பத்தி செய்யும் ஓவரி என்னும் உறுப்புகள் பாதிக்கப்பட்டு மலட்டுத்தன்மை ஏற்படும். பார்த்தார் டாக்டர். நோயாளிப் பெண்ணின் இரண்டு ஓவரிகளையும் நீக்கி, சிறு பகுதிகளாக்கி அவரது கைப் பகுதியினுள் பொருத்தி விட்டார்!

கதிரியக்கச் சிகிச்சையின்போது கையைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டால் போதும்; ஓவரிகள் பாதிக்கப்படாமலிருக்கும்!

ப்ரூக்லின் மெதடிக்ஸ் மருத்துவமனையில் (நியூயார்க்) நடந்த இந்த அறுவைச் சிகிச்சையினால் ஓவரிகள் காப்பாற்றப்படும் என்பது உறுதியில்லை என்பதால் இம்முயற்சி கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனால் எலி, ஆடு போன்ற விலங்கினங்களின் ஓவரிகளை நீக்கி 'ஃப்ரீஸ்' செய்து வைத்து மீண்டும் பொருத்தியதில், அவை இயங்கி தங்கள் 'கடமை'யை ஆற்றியிருக்கின்றன. அதாவது எலியும் ஆடும் கருவுற்று குட்டி போட்டிருக்கின்றன! இதேமுறையில் மனித ஓவரிகளை நீக்கி ஃப்ரீஸ் செய்து, மீண்டும் பொருத்தி வெற்றிகரமாகக் கருவுறச் செய்த முயற்சிகள் இதுவரை ஏனோ வெற்றி பெறவில்லை!




இத்தனை பேர் சந்தோஷப் படறதுக்கு ஓனர் நீங்க நிறைய விலை குடுத்திருப்பீங்க இல்லையா?
ஆமாமாம்! என் பொண்ணைக் கட்டிக்கிட்டாதான் இந்த இடத்தை உனக்கு விப்பேன்னு கண்டிஷன் போட்டவர்கிட்டே-யில்லே நிலம் வாங்கியிருக்கேன்.



• ராபின்சிங்குடன் ஹம்ஸ்ராஜ்

ஹலோ, டாக்டர்!

இந்தியாவின் தலை சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் முகங்கள் நமக்குப் பரிச்சயம்.

அடையாறு காமராஜ் அவென்யுவில் இருக்கும் டாக்டர் ஹம்ஸ்ராஜுக்கோ அவர்களின் முட்டி, மூட்டு, தோள், கழுத்து தசைகள் பரிச்சயம். விளையாட்டுகள் தொடர்பான உடலியக்கப் பயிற்சி தருவதில் நிபுணரான ஹம்ஸ்ராஜ் '8ல் மருத்துவப் படிப்பு முடித்து அடுத்த ஆண்டு அமெரிக்கா போன போது கூடத் தமக்கு இப்படியெல்லாம் வாய்ப்புகள் வரும் என்று நினைத்துப் பார்த்ததில்லை.

''ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எடைதூக்கும் வீராங்கனையான சாமுண்டீஸ்வரி என்னைத் தேடி வந்தபோது எனக்கே ஆச்சரியம். ஆசிய விளையாட்டுகளில் தங்கப் பதக்கம் வென்றிருந்த நிலையில் முதுகுவலி காரணமாக என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அதற்கு முன் பல நிபுணர்களைப் பார்த்திருக்கிறார். அவர்கள் எல்லாம் தந்த ஒரே அறிவுரை : 'இனி நீங்கள் எடைதூக்க முடியாது. விட்டு விடுங்கள்.'

நான் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு சிகிச்சை அளித்தேன். ஆறே மாதங்களில் குணமானது மட்டுமல்ல. மறுபடியும் இன்னொரு தங்கம் வென்றார். தம் முந்தைய சாதனையையும் தானே முறியடித்தார்! இதுதான் எனக்கு என் மீதே நம்பிக்கை அளித்த சம்பவம்.''

இந்திய கிரிக்கெட் அணியின் மருத்துவ நிபுணர் டாக்டர் ரவீந்தர் சத்தா. ஒருநாள் டாக்டர் ஹம்ஸ்ராஜுக்கு அவரிடமிருந்து ஒரு போன்.

''டாக்டர்... சச்சின் டெண்டுல்கருக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். வாங்க.''

''நான் உண்மையில் பெருமைப்பட்டேன். நான் சச்சின் விசிறி. சச்சினுக்கு மூன்று நாள் சிகிச்சையளித்தேன். அல்டரா சவுண்ட் எடுத்தேன். கொஞ்சம் ரிஸர்வ்ட் டைப்பாக முதலில் தெரிந்தது. மூன்றாவது நாள்தான் சகஜமாகப் பேசினார். என்னைப் பற்றியும், என் கிளினிக் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டு வாழ்த்தினார்.''

''அப்படி என்னதான் உபாதை சச்சினுக்கு?''

''கங்குலியும், சச்சினும் ரன் எடுக்க ஓடியபோது கங்குலியின் பேட் சச்சின் கையில் பட்டு அந்த வலிக்குதான் நான் சிகிச்சை கொடுத்தேன்.''

டாக்டர் ஹம்ஸ்ராஜின் இன்னொரு பிரபல 'கஸ்டமர்' விஸ்வநாதன் ஆனந்த்.

''ஒருநாள் ஸ்பெயினிலிருந்து போன் வந்தது. ஆனந்தின் மனைவி என்னைக் கூப்பிட்டு, ''இன்னும் பத்து நாட்கள் கழித்து சென்னை வருகிறோம். இத்தனாம் தேதி உங்களைப் பார்க்க ஆனந்த் வருகிறார். அப்பாயின்ட்மென்ட் வேண்டும்'' என்று கேட்டபோது நான் அந்தப் பண்பு கண்டு நெகிழ்ந்து போனேன். ஆனந்த் என் சிகிச்சை, அறிவுரையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பவர்.''

''இவ்வளவு விளையாட்டு வீரர்களை சந்திக்கிறீர்களே, உங்களுக்கு விளையாட்டு ஆர்வம் உண்டா?''

''எல்லா விளையாட்டுகளுக்கும் ரசிகன். கூடைப்பந்து விளையாடுகிறேன், என் உடல் பயிற்சிக்காக.''

— ராணிமைந்தன்

தங்கச்சங்கிலி பரிசுப் போட்டி!

10 வாரங்கள் வெளி வரப் போகிற இத் தொடர் கதையை வாரம் ஒருவரென, பத்து எழுத்தாளர்கள் இணைந்து எழுதுகிறார்கள். கவனமாகப் படித்து வந்தால், இறுதி வாரத்தில் கேட்கப் போகிற கேள்விக்கு பதிலளிப்பது சுலபம்! சரியான பதிலளிப்பவருக்குக் கண்ணைப் பறிக்கும். ஒரு தங்கச் சங்கிலி பரிசு! பலர் சரியாக எழுதி விட்டால், குலுக்கலில் ஒருவர். ஓகேதானா? ஆசிரியர் தீர்ப்பே இறுதி. ரெடி? ஸ்டார்ட்!



1 ஜிகினா

தலையணை சில்லென்று கன்னத்தில் பதிந்ததும் கோவிந்து சிலுப்பிக்கொண்டு எழுந்தான். சே, கண்ணீர்!

'கேவலம், ஒரு மூக்குறிஞ்சி மூஞ்சூர்... அழவைத்திருக்கிறான்! அப்பன் பெல்ட்டை உருவி அடிச்சப்போகூட அழுததில்லை...!

கருப்பசாமித் தோட்டத்தில் மாங்காய் அடித்து மாட்டிக்கொண்டார்கள். நைனா, உண்டு - இல்லையென்று முதுகில் விளாசி விட்டார். 'நாசமாய்ப் போகிற மனுசனைத் திட்டிக்கொண்டே அம்மா அழுதபடி களிம்பு தடவினாள். சூடு போட்ட மாதிரி எரிந்தது. சகித்துக்கொண்டவன்தான் கோவிந்து.

அசோக் வந்து பார்த்துப் பதறிப் போனான்.

'நியாயத்துக்கு நான் வாங்கியிருக்க வேண்டிய அடி... கோவிந்து, கோவிந்து!'

கடைசி மாங்காய் அடிக் கையில் கருப்பசாமி பார்த்து விட்டார். திருக ஒரு காது கிடைக்கும்வரை துரத்துவார். ஓடினாலும் கூட ஊரின் நாலேமுக்கால் வீதிகளுக்குள்தான்... தப்ப முடியாது.

அசோக்கை ஓடவிட்டு நின்று அகப்பட்டுக்கொண்டான் கோவிந்து. அப்பா முன் கொண்டு நிறுத்தி அடி வாங்கித் தந்துவிட்டார்.

அசோக்தான் அழுதுவிட்டான்.

'கம்மாயிருடா! உனக்காக இந்த அடி தானா தாங்குவேன்... உசுரையே குடுப்பேன். 'இந்தா இன்னொரு உசுருன்னு சாமி போனஸா தந்துச்சுன்னா அதையும் உனக்குத்தான்டா தருவேன்...'

- பாசமலர் சிவாஜி போல பெருமை பெருமையாகப் பொங்கியது கோவிந்துவுக்கு. அசோக் அவன் தோளைக் கட்டிக்கொண்ட போது தள்ளிவிட்டான்.

'சே! அழுவாதடா! பொம்பளை புள்ளையா நீ...?'

அந்த கோவிந்து, இப்போ தன்னையறியாமல் அழுதிருக்கிறான். சுவரில் மடோனா போஸ்டர் இவனைத்தான் பார்த்துச் சிரிப்பது போலிருக்கிறது.

நம்ப முடியாமல் தலையணையைத் தொட்டுப் பார்த்தான். ஈரம்தான்! தூக்கி வீசியபோது, மேஜையிலிருந்து இங்க் புட்டியை 'சிலிங்'கென்று தட்டி விட்டது.



• 'ராஜகாளியம்ம'னில் கௌசல்யா

பட்டுக்கோட்டை பிரபாகர்

உடைந்து கொட்டிய மையைத் தலையணையின் ஒரு முனை வேக வேகமாக உறிஞ்சிக்கொண்டிருந்தது.

கோவிந்து தலையில் அடித்துக்கொண்டு எழுந்தான். நெஞ்சைக் கிழித்துக்கொண்டு வந்த ஆத்திரம் சட்டைக்குத் தீ வைத்துவிடும் போலிருந்தது. அவசரமாக அதைக் கழற்றி சுருட்டி வீசினான்.

"ஹௌ ஸாட்!"





• சந்திரசேகருடன் ரஜினி

சிம்பிள் ஸ்டார்!

“விருது வாங்க வந்திருந்த எல்லோரும் வயதைக் குறைத்துக் காட்டும் விதமாக அமர்க்களமாக டிரெஸ் செய்து கொண்டு வந்திருந்தார்கள். ஆனால் ரஜினி மிகவும் ஸிம்பிள்! வெள்ளைச் சட்டை, குர்தா, நெற்றியில் விபூதிப் பட்டை, தாடி என்று எந்தவிதமான பந்தாவுமில்லாமல் தனக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று

ஒற்றைக் கையால் சட்டையைக் கேட்ச் பிடித்தபடி அறைக்குள் நுழைந்தான் அசோக்.

"சே! நாத்தம்..."

அலட்சியமாய் விசிறப்பட்ட வெளிர் நீலச் சட்டை மைக்குளத்தில் போய் விழுந்தது. தலையணையுடன் போட்டி போட்டுக்கொண்டு ராயல் ப்ளூ இங்க்கை உறிஞ்சி யது.

"ஆமாண்டா! மல்லிப்பூ வாசனைல மயங்கிட்டே இல்லே... என் சட்டை நாத்தம்தான்; நானும் நாத்தம்தான் இனிமே..."

"ஐயோ! இங்க்கு! ஏண்டா, இங்க் புட்டி உடைஞ்சுடுச் சுன்னு சொல்ல மாட்டே... இப்போ நான் எப்படி எழு தறது...?"

"பெரிய பெர்னார்ட் ஷா இவரு! இங்க்குல தோச்சு தோச்சு எழுதுனாத்தான் கவிதை வருமாக்கும்!"

"பெர்னார்ட் ஷா கவிதை எழுதலே, நாடகம்தான். ஆனா என்ன இங்க் யூஸ் பண்ணார்னு தெரியாது. எனக்கு ராயல் ப்ளூதான் பிடிக்கும். யார் ரூம்லயாச்சும் இருந்தா வாங்கி யாறேன்..."

"போ! திரும்பியே வராதே! ராயல் ப்ளூ இங்க்கு வாங்கி அதுலயே குளி! அப்படியே போய் அவ முந்தானையைப் புடிச்சுக்கிட்டு சுத்து... கவிதை எழுது. தாடி வளர்த்துக்கோ, வீணா போ! ஒழி...!" – சொல்லவில்லை; நினைத்துக் கொண்டான் கோவிந்து.

சொல்லியிருந்தாலும் அசோக்குக்கு உறைத்திருக்காது. அசோக் 'அச்சோ'க் 'அச்சச்சோ'க்காக உருமாறி, திருமாறி, கருமாறிப் போய் ஒரு மாதம் போலாகியிருந்தது. அன்புச் செல்வியிடம் அவன் கொண்ட மோகம் அவனது சகல புலன்களையும் வியாபித்து, கொப்பளித்துப் பொங்கி, மூளை யைக் குளிப்பாட்டியிருந்தது.

அவன் இப்போதுதான் முதல் வருஷம் பி.காம். அடுத்த இரண்டு வருஷங்களும் அவன் விழிக் குளத்தில் அவன் நீந்திக் களிக்க வேண்டுமானால் மரியாதையான மார்க்குடன் பி.காம் பைனல் இயர் பாஸாகித் தீர வேண்டும். அப்போதுதான் எம்.காம் அட்மிஷன் கிடைக்கும்.

இப்போதே அப்பா ரப்சர் பண்ணுகிறார். எம்.ஒ ஸ்லிப்பில் அடைத்து, நிரப்பி எழுதுகிறார்: 'இங்கே ஊரில் யாவாரத் தைப் பார்க்க உன்னை விட்டால் ஆளில்லை. ஒழுங்காக டிகிரி எடுத்து அதோடு நிறுத்திக் கொள்.'

அம்மா இன்னும் மோசம். 'உனக்கு மட்டும் முன்னாலே பரீட்சை நடத்தச் சொல்லி எழுதிட்டு வந்துடு. உன் நட்சத்திரத் துக்கு கல்லால உட்கார தை மாசத்துல நல்ல நாள் ஜோசியர் குறிச்சிருக்காரு. மாமா வேற நல்ல ஜாதகம் கொண்டாந்து குடுத் திருக்காரு. குளிச்சதும் மறக்காம திருநீறு பூசு...'

அச்சடித்து வைத்துக் கொண்ட மாதிரி அதே விஷயத்தை வாரா வாரம் தபால் கார்டில் எழுது கிறாள்.

அசோக்குக்கு எதுவுமே பிடிக்கவில்லை – அன்புச் செல்வியைத் தவிர.

அவளை மட்டும் கொள்ளை கொள்ளை யாகப் பிடித்திருக்கிறது!

உட்கார்ந்து கொண்டார். நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம்.

துவக்க காலத்தில் ஜர்தா பீடா உபயோகித்து ரஜினியின் உடல்நிலை பாதித்தது. அப்போது அவர் வாங்கிய கடையில் பல ஜர்தா பீடாக்களை வாங்கி சோதனை செய்து அதில் போதைப் பொருள் கலந்திருந்ததைக் கண்டுபிடித்துச் சொல்லியிருந்தேன். அதை ஞாபகம் வைத்திருந்தார்!

'அன்புள்ள ரஜினிகாந்த்' படப்பிடிப்புக்கு சாந்தோம் பள்ளி மற்றும் சர்ச் வளாகத்தில் பிஷப்பிடம் பேசி பர்மிஷன் வாங்கித் தந்ததையும் நினைவு படுத்தினேன்.

விருது வாங்குபவர்களுக்கெல்லாம், 'எப்படிச் சென்று எப்படி ஜனாதிபதியிடம் வாங்குவது' என்று முதல்நாள் பயிற்சி கொடுத்தார்கள். அதற்கு ரஜினி வரவில்லை.

''அவருக்கு எதற்குப் பயிற்சி? அவர் 27வது நபராகத்தான் பரிசு வாங்கப் போகிறார். முதல் இரண்டு பேர் வாங்குவதைப் பார்த்தாலே போதும்... ஒரே டேக்கில் ஓ.கே.'' என்று நான் தமாஷாகச் சொல்லிக் கொண்டிருந்தேன்!

மற்றவர்கள் யாரும் தன்னிடம் பேசாதபோது ஆன்மிகப் புத்தகத்தைப் படிப்பதில் மூழ்கினார் ரஜினி. விருது கொடுத்து முடித்த பின் அனைவரும் படம் எடுத்துக் கொண்டோம். அவர் நினைத்திருந்தால் முதல் வரிசையில் ஜனாதிபதி, பிரதமரோடு அமர்ந்து போஸ் கொடுத்திருக்கலாம். ஆனால் அமைதியாக வந்து மூன்றாவது வரிசையில் என்னுடன் பெஞ்சில் நின்று கொண்டார். அவர் சூப்பர் ஸ்டார் மட்டுமல்ல; சிம்பிள் ஸ்டாரும் கூட!''

(பத்மபூஷன் விருது பெற்ற தடய அறிவியல் வல்லுநர் பி. சந்திரசேகரன் சொன்னது)

– சௌமி

அவள் மேட்டு நெற்றியைப் பிடித்திருக்கிறது. தேய்த்து வைத்த வெண்ணீர் அண்டா போன்ற அவள் மினுக்கும் நிறமும் பிடித்திருக்கிறது. வெந்நீர் அண்டாவின் விளிம்பில் காணும் சப்பட்டை நசுங்கல் போன்ற அவள் தட்டை மூக்கும்கூட ரொம்ப ரொம்பப் பிடித்திருக்கிறது.

கம்பெனி லா லெக்சர் முடிந்து காலரி ரூமை விட்டு இவர்கள் வெளியேறும் நேரம், பி.காம் முதல் வருட ஜுஜுபிக்கள் உள்ளே வருவதற்கு, பவ்யமாகக் காத்து நிற்பார்கள். முதல் ஆளாக, பச்சை பாவடை தாவணியில் அன்புச்செல்வி நிற்பாள். மற்ற குரங்குகளெல்லாம் பஞ்சாபி டிரெஸ் மீது மேலாக்கை அலட்சியமாய்ப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும். இவள் மட்டும்... ஐயோ! என்ன பதவிசு! தாவணி மடிப்பைப் பார்த்தால், அம்மா திருத்தமாக வாழைக்காய் அரிவது ஞாபகம் வரும் அவனுக்கு. தினமும் அதே திருத்தம். தினமும் அதே இடத்தில் நிற்பாள்.

"என்ன? முதல் ரோவுல இடம் பிடிக்கணுமா?" – ஒரு சுபயோக சுப தினத்தில் அசோக் காதலை மறைக்க முடியாமல் மறைத்துக்கொண்டு கேட்டான். வலியப் புகுத்திய அலட்சியம் எக்ஸ்ட்ரா லார்ஜ் சட்டையாகக் குரலில் ஒட்டாமல் தொங்கியது.

செல்போன் மணி போல் சிரித்தான்; "அய்யே! இல்ல, லாஸ்ட் ரோ!"

'அட, நம்ம கட்சி!' கடைசி வரிசையின் இடது மூலையில் அவள் போய் உட்காரும்வரை நின்று பார்த்தான். அவன் உட்காரும் அதே இடம்!

சரியாயிருந்த தாவணியைத் திருத்திக் கொண்டு, பக்கத்துப் பெண்ணிடம் கண் விரியப் பேசிச் சிரித்து அவள் அமர, அவன் இதயம் ரோலர் கோஸ்டரில் ஏறி இறங்கிக் குப்புற விழுந்தது.

'பச்சை தாவணி உங்களுக்கு அழகாக இருக்கிறது – அசோக்'

'தேங்க்ஸ். நீங்க எழுத யூஸ் பண்ணியிருக்கிற ராயல் ப்ளூ எனக்குப் பிடிச்ச கலர் – அன்புச்செல்வி'

கடைசி பெஞ்சில் ஒட்ட வைத்த இந்தத் துண்டுச் சீட்டுகள்தான் ஆரம்பம்...

இப்போது ராயல் ப்ளூ இங்க்கைத் தேடி ஹாஸ்டலில் ரூம் ரூமாக அலைகிறான் அசோக்.

முத்துக்குமாரிடம் ராயல் ப்ளூ இங்க் இருந்தது.

"பேனாவை நிரப்பிட்டுப் போ..."

"பாட்டிலோட எடுத்துக்கறேன் முத்து. நாளைக்கு வேறே வாங்கித் தந்துடறேன்..." – தூக்கி வந்துவிட்டான். வெராண்டாவில் நடக்கையில் அந்திச் சூரியனின் ஆரஞ்சுக் குழம்பு, வானத்தில் வழிந்தோடியது.



ஆலாபனை

மூன்று ரூபாய்
மூங்கில் கட்டை
மூச்சடக்கி மெள்ள விடுவித்தால்
உறங்கும் ஸ்வரங்கள்
உயிர்பெற்றுப் பொங்கும்.

வீதியோரம்
விளையாட்டுப் பொம்மை
விரல்கள் கருத்துடன் ஸ்பரிசித்தால்
சிறைப்பட்ட சங்கீதம்
சீர்ப்பட்டு ஒலிக்கும்

மாலி, ரமணிபோல்
மேதை இல்லைநான்
மொத்த சரக்கும் விலைபோனால்
அடுப்படி ஊதுகுழல்
ஆலாபனை இசைக்கும்.

– மலர்

படம்: வெங்கடேஷ்

அசோக்கிடமிருந்து ஏக்கப் பெருமூச் சொன்று புறப்பட்டு, அதை வேடிக்கைப் பார்த்து நின்ற பஞ்சு மேகங்களை ஊதித் தள்ளியது.

கிராஃபிக்ஸ் ஜாலமெல்லாம் இல்லை.... ஆரஞ்சுக் குழம்பிடையே அசோக் அன்புச் செல்வி தோள்தொட உட்கார்ந்து கொண் டான். ஆரஞ்சு குழம்பு ஒரு ராட்சத ஃபான்டா பாட்டில். இரண்டு ஸ்ட்ராக்கள் போட்டு இரு ஜோடி உதடுகள் உறிஞ்ச உறிஞ்ச...உறிஞ்ச உறிஞ்சத் தீராத ஃபான்டா பாட்டில்!

ராயல் ப்ளூ இங்க்கை நெஞ்சோடு அழுத்திக்கொண்டான்.

கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது... என்று திக்குமுக்காடியது நினைவுக்கு வந்தது. அன் புள்ள அன்பு, அன்பே அன்பு, அன்புக்குரிய அன்பு... சே! எதுவும் அவன் அன்பை முழு சாய்க் காட்டுவதாக இல்லை. அவளிடமே கேட்கலாம் என்றால் நாலு மணிக்குப் பிறகு அவரவர் ஹாஸ்டல்களில் சிறைவாசம்!

என்ன கழிசடை காலேஜ் இது! சினிமா வில் அவனவனும் எவ்வளவு சுலபமாகக் காதலிக்கிறான்! நினைத்த நேரத்தில் நினைத்த பெண்ணோடு டூயட்...

'அன்பே அன்புச் செல்வி... அன்புள்ள அன்புச் செல்வி...ஆங்! கிடைத்துவிட்டது! என் உயிரினும் மேலான அன்புச்செல்வி! சே! வேண்டாம், அரசியல்வாதி மாதிரி! எனக்கே எனக்கான வாக்கியம் வேண்டும். முதலில் ரஃப் தாளில் எழுதிப் பார்த்து... அய்யோ! அதே! **எனக்கே எனக்கான அன்புச்செல்வி,** – அதுதான் ஆரம்பம்.

வேகமாக அறையினுள் நுழைந்து காகிதம் தேடினான். அவசரத்துக்கு ஒரு தாள்கூடக் கிடைக்கவில்லை. சுவரில் சிரித்த மடோனா போஸ்டரை ஓரமாகப் பிய்த்துப் பார்த்தான். பின் பக்கக் கொள்ளை!


8X15 போஸ்டர், உரித்தெடுத்து, மடித்துக் கிழித்து, 'எனக்கே எனக்கான அன்புச் செல்வி...' ராயல் ப்ளூவிலேயே ரிஹர்சல் பார்ப்பது படு நிறைவாயிருந்தது.

"டேய்!" தூக்கி வாரிப்போட்டது.

"ஏண்டா ரூமே பழைய பிரின்ட் படம் மாதிரி டல்லடிக்குது! ஐயோ! மடோனா போஸ்டர் எங்கே..?" – கோவிந்து நம்ப முடியாத அதிர்ச்சியுடன் காலி சுவரைப் பார்த்தான்.

"கிழிச்சுட்டேன்" தலை தூக்காமல் பதில் சொன்னவனை சுக்கு நூறாகக் கிழிக்கும் ஆத்திரம் வந்தது கோவிந்துவுக்கு.

(தொடரும்)





2000 ஏப்ரல் 16
விக்ரம சித்திரை 4
மலர் : 58
இதழ் : 38

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அத்வானி உடைத்தால் மண்கலம்; லாலு உடைத்தால் பொன்கலம்!

பீஹார் முதல்வரும் அவர் கணவரும் நீதிமன்றத்தில் சரணடைய, ராப்ரிதேவி மட்டும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார்! ராப்ரிதேவி மீண்டும் முதல்வராவதற்காகக் காத்திருந்தது போல், சிபிஐ இருவர் பேரிலும் அவசர அவசரமாகக் குற்றச்சாட்டுப் பதிவுசெய்து தனிநீதிபதியிடம் கைதாணை பெற்றது! 1998இல் பதிவாகிய வழக்கு கிடப்பில் கிடந்துவிட்டு திடீரென்று உயிர்பெற்றிருக்கிறது. இதன் விளைவாக, தார்மிகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டியவர்கள், மத்திய அரசை நோக்கித் தார்மிகக் கேள்விகள் எழுப்புகிறார்கள்!

'பாப்ரி மஸ்ஜித் வழக்கில் அத்வானி, ஜோஷி பேரில் குற்றப் பத்திரிகை பதிவாகியுள்ளதே; அவர்கள் மட்டும் பதவியில் நீடிக்கலாமா? அவர்களுக்கொரு நியாயம், ராப்ரிக்கு ஒரு நியாயமா?' என்று கேட்கிறார் லாலுபிரசாத் யாதவ்.

மத்திய அரசு சார்பில் யாராலும் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை!

லாலுவின் வாதம் நியாயமானதல்ல. ஒரு தவறைக் கொண்டு மற்றொரு தவறை நியாயப்படுத்த முடியாது என்பது ஆதார உண்மை. ஆனால் கூசாமல் கோடிக்கணக்கில் ஊழல் புரிந்துவிட்டு, வருமானத்துக்குப் பொருந்தாத சொத்தைக் குவித்த பிறகும் மக்களின்



ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்திருப்பவர் லாலு பிரசாத் யாதவ். (அவர் மனைவி பெயரளவில்தான் முதல்வர் என்பது உலகறிந்த ரகசியம்) அந்த மக்கள் ஆதரவும் தமது பேரில் நடவடிக்கை எடுப்போரின் தார்மிக பலமின்மையும்தான் லாலு பிரசாதுக்கு இவ்வாறு வாதாடும் துணிவைத் தந்துள்ளன.


லாலு பிரசாத்தும் ராப்ரி தேவியும் ராஜினாமா செய்துவிட்டு, வழக்கு முடிகிற வரை அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பதுதான் நியாயம். ஆனால் அத்வானியும் ஜோஷியும் மத்திய அமைச்சர் பதவிகளைத் துறந்து பாப்ரி மஸ்ஜித் வழக்கைச் சந்தித்து மீண்டாலன்றி முன்னதும் நிச்சயமாக நடைபெறாது.

இதைச் சாக்கிட்டேனும் பிரதமர் பாப்ரி மஸ்ஜித் வழக்கைத் துரிதப்படுத்தலாம். வழக்கைச் சந்தித்து, தீர்ப்பை அறியும் வரை இரண்டு பி.ஜே.பி. தலைவர்களையும் பதவி விலகச் செய்யலாம்.

அவ்வாறு செய்வதில் இரண்டு மிகப் பெரிய ஆதாயங்கள் கிட்டும்.

முதலாவதாக, பீஹார் முதல்வரும் வேறுவழியின்றி ராஜினாமா செய்ய வேண்டி வரும். மத்திய அரசுக்கு இதில் அரசியல் ஆதாயம். பீஹார் மக்களுக்கோ சிறந்த ஜனநாயகப் பாடமாக அது அமையும்.

இரண்டாவது ஆதாயம் : பி.ஜே.பிக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருகிற பாப்ரி மஸ்ஜித் வழக்கு துரிதமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்ப்பு வெளியாகும். தீர்ப்பு எவ்விதமாய் அமைந்தாலும் அது பி.ஜே.பியின் முஸ்லிம் விரோத 'இமேஜ்'க்கு முற்றுப்புள்ளி வைக்கும். பாப்ரி மஸ்ஜித் தகர்ப்பு, விசாரணைக்குரிய ஒரு குற்றம் என்பதை 'ஹிந்து அடிப்படைவாத' ஆட்சி அங்கீகரிக்கும்போது நாட்டின் சூழ்நிலையே மாறிப் போகும்.



ஆனால், பீஹார் முதல்வரின் ராஜினாமாவைக் கோரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியினருள் யாருமே பாப்ரி மஸ்ஜித் வழக்கு பற்றி மூச்சுவிடவில்லை!

ராஷ்ட்ரீய ஜனதா தளத்தை ஆதரித்து, பீஹார் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கூட, 'சட்டம் தன் கடமையை ஆற்றட்டும்' என்றதுடன் சரி. கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டுமே மத்திய அரசின் பேரிலும் குற்றமிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகக்கூடி, ஊழல் வழக்கானாலும் சரி, பாப்ரி மஸ்ஜித் வழக்கு போன்று வேறு கிரிமினல் வழக்கானாலும் சரி, அதில் சம்பந்தப்பட்டவர்கள் பேரில் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பதென்பது அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தே சாத்தியமாகிறது! ஊழல் அல்லது வேறு குற்றம் புரிந்த தலைவர்களைத் தெரியாத்தனமாகப் பதவியில் அமர்த்திவிட்ட அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைப்பதேயில்லை!

குற்றப்பத்திரிகை தாக்கலாகியிருப்பவர்களும் கிரிமினல் வழக்குகளில் தொடர்புடையவர்களும் தேர்தலில் நிற்பதைத் தடைசெய்யும்வண்ணம் தேர்தல் சீர்திருத்தம் கொண்டு வந்தால் இந்நிலைமை மாறும். ஆனால், பூனைக்கு யார் மணி கட்டுவது? அப்படி ஒரு திருத்தம் கொண்டுவர எந்தக் கட்சிக்குமே இன்று துணிவில்லை.

அது ஒருபுறமிருந்தாலும், பாப்ரி மஸ்ஜித் வழக்கைத் துரிதப்படுத்தி நடத்துவது பி.ஜே.பி. முக்கிய அங்கம் வகிக்கும் மத்திய அரசின் கையில்தானிருக்கிறது. அதற்குப் பாராளுமன்றம் போக வேண்டாம்; பிரதமர் மனம் வைத்தால் போதுமானது.

வாஜ்பாய் நியாய உணர்வுடன் செயல்பட்டால் நாட்டுக்கு நற்கதி பிறக்கும்; பீஹாருக்கு உயர்கதி உண்டாகும். ஆனால் அதற்குப் பிரதமர் தம்மை ஆட்டிப் படைக்கும் ரிமோட் கன்ட்ரோல்களை உதறித் தள்ளத் தயாராக வேண்டுமே? துணிவாரா? ○



காச்மூச!

குமுறியெழக் ஆகாடி காரணம்!

— கவிஞர் மு. மேத்தா

உலகமே கவனித்துக் கொண்டிருக்கும் உன்னத வேளையில் பாராளுமன்றத்தில் இந்தியப் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதி முன்பு இந்தியில் பேசுகிறார். அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேரலாம் என்று காந்தி பிறந்த மாநிலம் சட்டம் போடுகிறது. அதை



ஆதரித்தும் எதிர்த்தும், வேறு வேலையே இல்லாதது போல் ஐந்தாறு நாட்கள் பாராளுமன்றத்தில் அதற்கு பஜனை நடக்கிறது. ஒட்டிய வயிரோடு உலாவுகிறானே ஏழை, அவன் கட்டிய வரிப் பணம் இதற்காகக் கொட்டி இறைக்கப்படுகிறது!

ஒரு வேளைக்குமேல் வீடுகளில் சமைக்க்க் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு, சிலிண்டர் விலையும், மண்ணெண்ணெய் விலையும் ஒரேயடியாக உயர்த்தப்பட்டு ஒரே நாளில் உத்தரவிடப்படுகிறது.

கடவுள்களை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்று கவலைப்படும் மனித பயில்வான்களின் அயோத்தி அறிக்கைகள் அன்றாடம் அச்சுறுத்துகின்றன.

உச்சநீதிமன்றம் ஊழலுக்கு தண்டனை விதித்தால், அதற்காகவும் கலவரம் நடத்தும் கண்ணியவான்கள் இங்கே இருக்கிறார்கள்.

உள்ளம் பதறாமல், உடல் நடுங்காமல் உல்லாசமாகவும், உற்சாகமாகவும் பிள்ளை மலர்களாம் மல்லிகைப் பூக்களைப் பேருந்தோடு கொளுத்தும் பெருந்தகையாளர்கள் இங்கே பவனி வருகிறார்கள். குருதி துடிக்காமல் அதிலும் சிலர் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில்,

தமிழக அரசு ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் படிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தால், அதற்கும்கூட எதிராக ஆங்கிலப் பள்ளி வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். ஆட்டு மந்தைகளாய் அதற்கும் சிலர் காட்டுக் குரல் கொடுக்கிறார்கள்.

இப்படி ஒன்றா இரண்டா? கோபத்தோடு குமுறியெழ எத்தனை எத்தனையோ காரணங்கள் இங்கே.

இந்தியாவின் அதிசயம் தாஜ்மகால் அல்ல. எது நடந்தாலும் தாங்கிக் கொண்டு உயிரோடு உலவுகிறார்களே, இந்த இந்திய மக்கள்தான் இந்தியாவின் அதிசயம். இந்தியாவோ-உலகத்தின் அதிசயம்!

சந்திப்பு: **ராணிமைந்தன்**

படம்: **வெங்கடேஷ்**



ஸ்ரீ காயத்ரி தேவியை நம:

நன்றி

திருநெல்வேலி மாவட்டம், ராஜாக்கள் மங்கலம்
கிராமம், ஸ்ரீ கி.சங்கரய்யர் பௌத்திரனும்,
திரு. ஆர்.எஸ். கிருஷ்ண ஸ்வாமி அய்யர் சகோதரனும்,
எனது குமாரனுமாகிய
சிரஞ்சீவி **G. ஹரிஹர சுப்ரமணியன் என்கிற ஸ்ரீகாந்துக்கும்**
சென்னை, ஸ்ரீ தாணு சுப்ரமணிய அய்யரின்
பௌத்ரியும் சென்னை, ஆழ்வார் திருநகர்,
திரு. எஸ். எச். பத்ரிநாத்தின் ஜேஷ்டகுமாரியுமான
சௌபாக்யவதி **சித்ராவுக்கும்**
சென்னை, ஆழ்வார்திருநகர், சாந்தி ரோட்டிலிருக்கும் **G.R.K. திருமண மண்டபத்தில் பகவான் ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகள்** அருள் முன்னிலையில், அண்மையில், மிகவும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீ காயத்ரி அருள் சித்தர், பகவான் ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகளுக்கும், கலந்து கொண்டு ஆசீர்வதித்த அனைவர்க்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள்
ஆர்.எஸ். வெங்கட்ராமன்

பி.1/3, அனுபம் நகர், முதல் ப்ளோர்.
முபாரத்ரோடு, கல்யாண் (மேற்கு) தானே மாவட்டம். மகாராஷ்டிரா - 421301.

வட்டமேஜை

தீர்ந்ததா?

வெறும் ஒன்றரை அடி அகலக் குறுகல் சந்து என்றால் எப்படி அழைப்பது என்று வினா எழுப்பியிருக்கிறார் ரம்யா. தூத்துக்குடி பகுதியில் இதை 'முடுக்கு' என்று அழைப்பார்கள். சந்தேகம் தீர்ந்ததா?

பெங்களூர் – 8, ப.க. வைத்தியநாதன்.

சிந்திப்போம்!

அரசியல் கட்சிகள் தத்தம் சுயலாபங் கருதிக் கூடு விட்டுக் கூடு பாயும் குருட்டு – வெறிக் கவிழ்ப்பு அநியாயத்தை உணர்த்தி த.மா.கா., அ.தி.மு.க., காங்கிரஸ் ஒவ்வாச் சேர்க்கையைக் கண்டிக்கின்ற தங்கள் தலையங்கம் சிந்திப்பதற்குரியது!

இனாம்மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

இதுதான் சரியா?

குருட்டு வெறியில் கவிழ்ப்பு நாடகம் என்ற தலையங்கம் நடப்பு நிகழ்வுகளை விளக்கினாலும் மூப்பனார் ஜனநாயக ரீதியில் செயல்படவில்லை எனக் கூறியிருக்கிறீர்கள். இந்திய அரசியல் வரலாற்றில் இப்படியொரு ஜனநாயக மோசடியைக் கண்டதில்லை என்பது போல எழுதியிருக்கிறீர்கள். தி.மு.க. பா.ஜ.க.வுடன் சேர்ந்ததுதான் சுத்தமான ஜனநாயகமா?

நாமக்கல், எஸ்.பி. சண்முகம்.

உதைக்கலாமா?

இருக்குறளுக்கு சாலமன் பாப்பையா எழுதியிருக்கும் உரைக்கு தமிழண்ணல் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருப்பது ஆரோக்கியமானதொரு சர்ச்சையே. திருக்குறளை எளிமைப்படுத்துவதென்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், குறளின் கட்டமைப்பை சிதைப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.



எரிச்சல் ஏன்?

வியோனியின் பட்டிமன்றங்களைக் கேட்டால் எரிச்சல் வருகிறது என்கிறார் தமிழண்ணல். அவருக்கு வேண்டுமானால் இருக்கலாம். பெரும்பாலானோர் வியோனியின் பேச்சை விரும்பிக் கேட்கிறார்கள். அவர் வெளியிடும் காசெட்டுகள் இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

ஆலங்குளம், ரா. சாலமோன்.

ஹை–கிளாஸ்!

குத்தம்பாக்கம் பஞ்சாயத்துத் தலைவர் இளங்கோவின் சமுதாய நோக்கும் செயலாக்கமும் ஹைடெக் மட்டுமல்ல; ஹைகிளாஸும் கூட! மாடல் பஞ்சாயத்துத் தலைவரான இவர் போலவே மற்ற தலைவர்களும் இருந்தால்...! என்று எதிர்பார்க்க வைத்து விட்டார்!

நெய்வேலி, எஸ். ஸ்ரீகாந்த்.

வாழ்க!

மறைந்த லீலாவதியின் மகள்கள் மூவரின் ஆவேசமான லட்சியப் பாதை, அரசியல் என்று படித்தவுடன், ஒரு நிமிடம் சிலிர்த்தது. பாராட்டுகள்! வெற்றி பெறட்டும்!

சாத்தியாகுளம், பாக்யமலர்.

சுவை

படம் வெளி வராததற்கு முன்னமே நீர் மெனக்கெட்டுத் இரட்டிய 'அலை பாயும் அனுபவங்கள்' சுவையாக இருந்தன.

விஜயவாடா – 1,
தெனாலி ராஜன்.

நெகிழ்ச்சி

"சைவ ரம்ஜானும் ஒரு சன்மார்க்கப் புரட்சியும்" என்ற தலைப்பில் மதுரை வள்ளலார் பக்தர் அன்பானந்தம் ஆற்றிவரும் பணியைப் பற்றியும், மத நல்லிணக்கம் பற்றியும் எடுத்துக் கூறிய கட்டுரை மனதை நெகிழச் செய்தது.

சென்னை – 78,
'லயன்' எம்.எஸ்.கோபு.

இந்தக் கதையைக் கேளுங்கள். படிக்கிற உங்களுக்குத்தான் இது கதையே தவிர, எழுதுகிற எனக்கல்ல. ரசனை இல்லாதவர்கள் சம்பவம் என்றும் கொஞ்சம் காவிய வாசனை உள்ளவர்கள் சரித்திரம் என்றும் கூறக்கூடும். காதலல்லவா?

மேலும் ஓர் எழுத்தாளனின் காதல். சொல்வதற்கு வெட்கமென்ன? பத்திரிகைக் காகிதங்களின் பக்கங்களில் எழுதிக் குவிக்கிறபோது எத்தனையோ சுகமாகத் தான் இருக்கிறது. நிஜத்தில் ஒரு காதல் கடிதம் எழுத வக்கில்லாமல் வெட்டியாக நாட்களைக் கொன்று கொண்டிருக்கிறேன். 'எழுத்தாள ஜாதி என்றைக்கு உருப்படியாக ஒரு காரியத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறது?' என்று என் தம்பி ஜகந்நாதன் கேட்கிறான்.

ஸுநாதனிக்கொரு

வார்த்தைகளில் என் பதிலை வீணாக்க விருப்பமில்லை. தீர்ப்புக் கூறும் பொறுப்பை, என்னை நன்கறிந்த உங்களிடமே விட்டு விட்டு, விஷயத்துக்கு வருகிறேன்.

அவள் பெயர் ஸுநாதனி. லா. ச. ராமாமிருதத்தின் 'த்வனி'யில் குரலை மட்டும் காட்டி விட்டு, கடைசி வரை கண்ணில் படாமலே ஓடிப் போனாளே, அதே ஸுநாதனி.

உலகெல்லாம் சஞ்சரித்துவிட்டுக் கடைசியில், கல்லின்மேல் கால்பட்டு உதித்தவள் போல் என் பக்கத்து வீட்டில் ஒரு நாள் காணத் தென்பட்டாள்.

ராமாமிருதத்தின் கதையை நூறு முறை உருப்போட்டதில், அவள் குரல் எனக்கு ரொம்பவுமே பரிச்சயமாகியிருந்தது. அதனால், அடுத்த வீட்டில் அதே குரல் கேட்கவும், மந்திரித்து விட்டவன் மாதிரி நேரே போய்க் கதவைத் தட்டி, "எக்ஸ்க்யூஸ் மீ. நீங்கள் ஸுநாதனிதானே?" என்று தடாலடியாகக் கேட்டேன்.

■ பா. ராகவன் ■

முன் பின் என்னை அவள் பார்த்ததில்லை. என் பெயர், ஊர், உத்தியோகம் எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை. அவளையும் நான் அந்த விநாடிக்கு முன் பார்த்ததில்லை. 'ஸுநாதனியுமில்லை, சுந்தராம்பாளுமில்லை' என்று முகத்தில் கதவை அடித்தால் எங்கே போய் முட்டிக் கொள்வது என்று ஒரு சிறு தடுமாற்றம்? ம்ஹும். ஐ'ம் ஷ்யூர். அவள் ஸுநாதனியேதான். ஆகவேதான் கேட்டேன் : "நீங்கள் ஸுநாதனிதானே?"

இதெல்லாமென்ன வியக்கிற விஷயம்? என்னைத் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிற மாதிரி அவள் சொன்ன பதிலைப் பாருங்கள் :

"ஹலோ ராகவன்! நைஸ் டு மீட் யு!"

எப்படியிருக்கிறது சமாசாரம்? ராமாமிருதத்தின் கதையில் நான் அவளை உருகி உருகி ரசித்ததை அவள் விரும்பி விரும்பி அனுபவித்தாளாம்.

"என்றாவது ஒரு நாள் உங்களை சந்திப்பேன் என்று தெரியும். நான் நிரந்தர கவி வியோ கட்சிக்காரி" என்றான் ஸுநாதனி.

"பாவம், அந்த ஸாலிக் ராமனை அப்படி அலைக்கழித்து விட்டீர்களே?" என்று கேட்டேன்.

ஸாலிக்ராம், அந்த லா.ச.ரா. கதையில் வரும் நாயகன். இந்தக் கிராதகி, கதை முழுக்க அவனுக்கு போன் செய்து, போன் செய்து குழையக் குழையப் பேசிவிட்டு, கடைசியில் முகத்தைக் காட்டாமலே போய் விடுவாள்.

இன்றைக்கு, பார்க்காமலே காதல், கேட்காமலே காதல், பழகாமலே காதல் என்றெல்லாம் ஜல்லியடித்துக் கொண்டிருக்கிறார்களே, இதற்கெல்லாம் சூத்திரதாரி இந்த ஸுநாதனி. அவள்தான் என்னிடம் வசமாக மாட்டிக் கொண்டாள்.

நான் அவளைப் பார்த்து விட்டேன். பேசி விட்டேன். ஓரிரு வாரப் பழக்கமும் ஆகிவிட்டது. ராமாமிருதம் மாதிரி நானும் சொற்களை சூளையில் வேகவைத்



காதல் கடிதம்

துப் பதம்பார்த்துக் கோக்கிற எழுத்தாளன் என்பதைத் தெரிந்து கொண்டதும் மிக சிநேகமாகி விட்டான் – எழுதும்போது கொறிக்கக் கைமுறுக்கு கொண்டு தருகிற அளவுக்கு.

"ஸுநாதனி! நான் எழுதும் போது ஏதும் கொறிக்கிற வழக்கமில்லை. ஒரு பொட்டலம் பான்பராகை அடக்கிக் கொண்டால் பத்துப் பக்கம் விறுவிறுவென்று ஓடி விடும்!'' என்றேன் சிரித்துக் கொண்டே.

"Bad habit!'' என்றாள் செல்லமான கோபமுடன்.

என் திட்டம் கொஞ்சம் கொஞ்சமாக மனத்துக்குள் மொட்டு விட்டுக் கொண்டிருந்தது. ஸாலிக்ராம் ஒரு குறியீடு மட்டுமே. எத்தனையோ பேரை மயக்க நிலைக்குக் கொண்டு போய், சட்டென்று காணாமல் போனவளல்லவா இவள்? இந்த வருணனையைப் பாருங்கள்! 'கண்ணாடி தம்ளரின் அடியில் உருளும் கரையாத ஐஸ் கட்டி மாதிரி அடக்கிய அவுட்டுச் சிரிப்பு.' – ராட்சஸனய்யா அந்த எழுத்தாளன். அரிசியில் தாஜ்மஹால் கட்டுகிற லாகவத்திலல்லவா, வந்து விழுந்திருக்



• டோனி ப்ளேர்

அப்பப்பா, அப்பா பிரச்னை!

நான்காவது முறையாக அப்பாவாகவிருக்கும் பிரிட்டிஷ் பிரதமர் டோனி ப்ளேருக்கு ஒரு பெரிய பிரச்னை! சமீபத்தில்தான் பிரிட்டனில் 'படர்னிடி விடுப்பு' சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. (சம்பளம் கிடையாது; ஆனால் குழந்தையின் ஐந்தாவது வயதுவரை 13 வாரங்கள் அப்பா லீவ் எடுத்துக் கொள்ளலாம்!) பிரிட்டிஷ் பெண்ணிய இயக்கங்கள், பிரதமர் ஒரு மாதம் லீவ் போட்டுவிட்டு 'உலுலாயி' பாடும் முன்னுதாரணமாக விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். எதிர்க்கட்சியினரோ எகத்தாளமாகச் சிரிக்கிறார்கள்! 'ஒரு மாதம் லீவ் போட்டால் நாடு என்னாகிறது?' என்கிறார் பிரதமர். எதிர்க்கட்சியினரோ, 'நீங்கள் இருக்கும்போது மட்டும் என்ன வாழ்கிறது; லீவில் போனால் குடிமுழுகிவிடாது' என்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பிள்ளையில்லா வரம் பெற்றவர்!

இன்றன சொற்கள்?

தீர்மானமே செய்து விட்டேன். அதே மாதிரிக் காதல் அவஸ்தையை இவளுக்குக் கொடுத்துவிட்டு நான் காணாமல் போய்விடப் போகிறேன். பார்க்கலாம், எப்படித் தவிக்கிறாள் என்று. அவுட்டுச் சிரிப்பு அப்போதும் உண்டா? அதையும் பார்க்கலாம்.

பேர், அட்ரஸ் இல்லாமல் தினம் ஒரு காதல் கடிதம் அனுப்பலாம் என்று முடிவு செய்தேன். என் இயல்புக்கு மாறான சினிமாத்தனம் இதில் இருப்பினும், என் மொழியின் ஆளுமையால் அவளை வசப்படுத்தி, கிறுகிறுக்கச் செய்துவிட முடியும் என்று தோன்றியது. என்னவொரு யோசனை!

இதிலே ஒரு சங்கடம் உண்டு. எழுத்தாளர்களுக்கே உரித்தான சங்கடம். ஒவ்வொரு எழுத்தாளருக்கும் அவரவர் பிரத்தியேக நடையை நிர்ணயிக்கச் சில சொற்பிரயோகங்கள் உண்டு. செந்தமிழில் எழுதினாலும் சரி, சென்னைத் தமிழில் எழுதினாலும் சரி – அந்தப் பிரத்தியேகச் சொற்களை ரகசியமாக மூலைக்கொன்றென ஒளித்து வைப்பதன் மூலம் பிரதிக்கொரு ஆதார ஸ்ருதி கூட்டுகிற வழக்கம். 'என்ன நடைய்யா!' என்று வாசகன் வியப்பான். எல்லாம் நாலைந்து பிரயோகங்களின் கலவை செய்கிற ரசாயனமன்றி வேறல்ல.

இந்தச் சில நாட்களில் ஸுநாதனிக்கு என் கதைகளுடனும் நல்ல பரிச்சயம் ஏற்பட்டிருந்தது.

"நீங்கள் நிறைய 'அதானே' போடுகிறீர்கள். எல்லோரும் 'புன்னகைத்தாள்' என்று எழுதும்போது நீங்கள் மட்டும்தான் 'புன்னகை செய்தாள்' என்று பிழையில்லாமல் கையாள்கிறீர்கள். தவிர, 'ஆகும்' 'போலும்' 'நிஜம்' மாதிரி சொற்களை வலிந்து தவிர்த்துவிட்டு வேறு சொற்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்!" என்றாள் ஒருமுறை.

'அடேயப்பா!' என்று போலியாக மயங்கி விழுந்தேன். உண்மையில், எனக்கு இத்தனை கூர்மையாகக் கூட வாசிக்க ஆள் இருக்கிறதா என்று வியப்பாக இருந்தது.

ஆகவே, ஸுநாதனிக்கு எழுதும் கடிதத்தில் என்னை ஒளித்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

என் பிரத்தியேக ஸ்ருதியைக் கூட்டாமல் பொதுவான நடையில் அவளுக்கொரு கடிதம் எழுதினேன். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வல்லுநர்கள் மிகவும் விரும்பக்கூடிய நடையிலான அக்கடிதம் இது:

'ஸுநாதனி, மனிதனின் ஆதார உணர்ச்சிகள் மூன்று. அவையாவன: பசி, தூக்கம், காதல். தற்சமயம் உன்னால் மூன்றாவது உணர்ச்சி தூண்டப்பட்டு, இராப்போதுகளில் இரண்டாவது உணர்ச்சியற்றும் பகல் வேளைகளில் முதல் உணர்ச்சியற்றும் கிட்டத்தட்ட நடைபிணமாயுள்ளேன்.

பகுதிக்கு நீ குடிவந்த நாளாக, நீயறியாமல் உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். கானமயிலாடுவது போன்ற உன் அசைவுகளும் மோனக் குயில் பாடுவது போன்றதுன் மொழியும் என் சித்தம் கலக்கி விட்டன.

நான் யார் என்று – இதைப் படித்துக் கொண்டிருக்கும்போதே – சன்னல் வழியாகப் பார்வையை ஓட்டுகிறாயா? ஓட்டு! நீ தொலைபேசிக் கழுத்தறுப்பவனென்றால், நான் கடிதமெழுதிக் காதல் சொல்பவன்.

அன்புள்ள ஸுநாதனி,

உன் பெயரை எழுதும்போது என் பேனா வெட்கத்தில் சிவந்து போகிறது...'

இவ்வாறாக எழுதி வரும்போதே எனக்கொரு சந்தேகம் உண்டாகிவிட்டது. தெருவில் வசிக்கிற பள்ளிப் பையன்களின் மீது அவள் கவனம் திரும்பி விடுமோ என்பதுதான் அது. மேலும் இயல்புக்கு மாறான என் உரைநடை என் மீதே எனக்கு அவநம்பிக்கை உண்டாக்கிவிடும் போலிருந்தது.

இந்த வம்பே வேண்டாம் என்று கவிதையில் முயற்சி செய்யலாம் என்று முடிவெடுத்தேன். இலக்கணம் அப்படியிப்படி நகர்ந்தாலும் எனக்குச் சுலபமாக வெண்பாவின் மீட்டர் அகப்பட்டு விடும். ஆகவே -

'அன்பே எனச்சொல்லி
ஆனந்தப்பெருவெளியில்
உன்பேர் உருப்போட்டு நானிருந்தேன்
- மண்மேல்
நாமிருவர் கூடி நற்காதல் புரிவதற்கு
வானவர்தம் வாழ்த்துண்டு வா.'

என்று எழுதிவிட்டு ஐந்து நிமிடம் ஆறப்போட்டு, திரும்பப் படித்துப் பார்த்தேன்.

ஒரு கலைமாமணி விருதுபெறத் தகுதி வாய்ந்த, பழம்பெரும் தமிழாசான் 'வரைந்த' கவிமடல் மாதிரி இருப்பதாகப்பட்டது.

ஸுநாதனியின் புத்திக் கூர்மை சாதாரணமானதல்ல என்பது 'த்வனி' படித்தவர்களுக்குத் தெரியும். சராசரிக்கு அப்பாற்பட்ட புத்திசாலித்தனத்துடனும் எதிராளியை மடக்கும் லாகவத்தில் ஒருவித சாணக்கியத்துவமுடனும் கனவுகளில் சல்லாத் துணி நெய்தாலும் யதார்த்தத்தின் விளிம்பை விடாமல் பேசுவதிலும் அவளிடம் ஒரு லயம் உண்டு. மனத்தில் ஒரு மீட்டலை உண்டாக்கி, அதிர்வலைகளை மணிக்கணக்கில் வியாபிக்கச் செய்வதில் பெரிய ஆள்.

ஆனால், அப்படிப்பட்ட அறிவுஜீவியை மயக்கும்விதமாகவா நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்? கடவுளே, என்ன ஒரு சுத்துகுட்டித்தனம் அல்லது கையாலாகாத்தனம்!

கேவலம், ஒரு நல்ல காதல் கடிதம் எழுதத் தெரியாமல் நான் என்ன பெரிய எழுத்தாளன்? பேர் சொல்ல மூன்று புத்தகங்கள் - வெத்துக்கு.

இவ்வாறான நிலையில் வீட்டில் எனக்குப் பெண் பார்க்க ஆரம்பித்தார்கள். நீ கதையெழுதி நாசமாய்ப் போனது போதும்; உருப்படியாகப் பிழைக்கிற வழியைப் பார் என்று அட்சதையும் போட்டார்கள்.

கல்யாணம் எனக்குச் சம்மதமே. எழுந்து கசந்தால் மனைவி; மனைவி கசக்கும்போது

பிளஸ்டு முடித்துவிட்டு, மருத்துவ-இஞ்சினியரிங் நுழைவுத் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு உதவ www.entranceguru.com என்றொரு புதிய வெப்சைட் திறந்திருக்கிறார்கள். பாட வாரியாக விளக்கங்கள், வினா-விடைகள், சந்தேகங்களுக்கு பதில்கள், மாதிரித் தேர்வுகள் என இது ஒரு 'நெட்' கோச்சிங் சென்டர்! இலவசமாக யாரும் இந்த 'சைட்'டுக்குப் போய்வரலாம்.



எழுத்து என்று திட்டமெல்லாம் தயார். வெளியூரில் உத்தியோகம், தனியே ஒரு குடித்தனம் என்று ஏற்பாடுகளெல்லாம் பிரமாதம்.

அதற்கு முன்... அதற்கு முன் ஒரு முயற்சி. ஸ்ரீநாதனி! தவிப்பின் பூரண தகிப்பை அவள் உணர்ந்தாக வேண்டும் - எல்லாவற்றுக்கும் மேலாக. தொலைபேசியில் கூப்பிட்டுத் தேனொழுகப் பேசிவிட்டு இவள் போயே விடுவானாம். அதை நினைத்துக் கொண்டே வாழ்நாள் முழுவதும் ஆண்கள், கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா என்று பாடிக் கொண்டு நாசமாய்ப் போக வேண்டுமாம். ராட்சஸியின் குணமல்லவா இது! எத்தனை குரூரம் ஒளிந்திருக்கிறது, இதற்குள்ளாக? பெரிய அலகிலா விளையாட்டுக்காரி.

இப்படியெல்லாம் கோபம் உண்டானாலும் கடிதம் மட்டும் கடைசி வரை எழுத வரவில்லை.

என்னை அடையாளம் கண்டுகொண்டால் பரவாயில்லை என்றால், விஷயம், வேறு விதமாகியிருக்கும். ஒரு கடிதமென்ன, காவியமே படைத்திருக்கக்கூடும். சுண்டியிழுக்கும் என் எழுத்து நடை இதுகாறும் பெற்றுத் தந்திருக்கும் வாசக ரசிகைகளைப் பட்டியலிட்டால், சக எழுத்தாளர்களின் சாபத்துக்கு இலக்காகி விடுவேன்.

ஆனால் நான் ராகவன். ஒளிந்திருந்து அம்பெய்வதன் பின்னால் ஆயிரம் நியாயங்கள் ஒளித்து வைத்திருப்பவன்.

ஆனால் பாருங்கள், ஊர் புகழும் என் நடையே எனக்குச் சத்ருவாகிவிடும் போலிருந்தது. எத்தனையோ விதமாக எழுதிப் பார்த்தும் என் முதல் கடிதத்தைக் கூட அனுப்பத் திருப்தி வராமல் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் என் தம்பி சொன்னான்: "நீதான் என்று தெரிய வந்தால் - ஒருவேளை காதல் சீக்கிரம் வந்து விடலாமல்லவா? உனக்கே தெரிந்தவள். உன் கதைகளை ரசிப்பவளும் கூட என்பதால்-"

ஓரிரவு முழுதும் யோசித்துவிட்டு, அதுவே சரி என்று தீர்மானித்தேன்.

என் பத்தாண்டுகால எழுத்தனுபவத்தின் சாறாக - சரியாகச் சேர்ந்திருந்தன சொற்கள். 'அதானே' இருந்தது. 'ஆகும்' தவிர்த்திருந்தேன். 'நிஜங்'கள் 'மெய்'யாகியிருந்தன. இறுதியில் புன்னகையும் செய்திருந்தேன்.

படித்துப் பார்த்தபோது மிகுந்த நிறைவேற்பட்டது. வெறும் காதல் கடிதம்! ஒரு சூழ்நிலைப் பின்னணியும் புனைந்துரைக்கப்பட்டதொரு கடைசி வரியும் சேர்ந்தால், சிறுகதையாகிவிடும் போல அத்தனைக் கச்சிதமாக வந்திருந்தது.

ஒருகணம் சபலமேற்பட்டது. ஸ்ரீநாதனிக்கு மானசிகமாக ஒரு நன்றி தெரிவித்துவிட்டு, அதற்கு உரிய முன் பாரா, பின் பாரா சேர்த்து, பத்திரிகைக்கு அனுப்பி விட்டேன்.

பிறகு ஏனோ அப்படியொரு கடிதமெழுதத் தோன்றாமலே போய்விட்டது.

சில வருஷங்கள் கழித்து, இப்போது தோன்றுகிறது, எழுதலாமா என்று.

எழுதலாந்தான். ஆனால் பத்திரிகை ஆசிரியர்கள் சொல்கிறார்கள், இப்போதெல்லாம் என் காதல் கதைகளே கூட இளமை தொலைத்து, சோகம் படர்ந்து இருக்கின்றன என்று. ○

"கேடி கபாலி டி.வி. பார்த்து கெட்டுப் போயிட்டான்!"
"ஏன்?"
"அதிரடி வியாழன்ல மட்டும்தான் திருட்டுத் தொழிலுக்குப் போவானாம். அதுதான் ராசி யான நாளாம்!"

— அம்பை தேவா



இது அநேகமாக லட்சத்தி ஒன்றாவது கபாலி ஜோக்காக இருக்கலாம். கேடிகளின் பெய ரெல்லாம் கபாலி மட்டுந்தானா? உண்மையில் காவல் நிலைய குற்றவாளிகள் பட்டியலில் கபாலிகள் உண்டா...? என அறிய, சில காவல் நிலையங்களில் நாம் செய்த

ஹாய், கபாலி!

'ரெய்டு' இதோ :

• க. ஜெயராமன் : (இன்ஸ்பெக்டர் – பாண்டிபஜார் காவல் நிலையம்)

இந்த ஸ்டேஷன்ல கபாலின்னு எந்த கிரிமினலும் இல்லை. கபாலிங்கிற பேரு ரொம்பப் பிரபலமானதுக்குக் காரணம் சினிமாதான். பழைய படங்கள்லேயும் சரி, இப்போ வர்ற படங்கள்லேயும் சரி -- பேட்டை ரவுடி 'கபாலி'யாத்தான் இருக்கணும்னு முடிவு பண்ணிட றாங்க! அப்புறம் பெரிய தாதான்னா, சாம்ராஜ், சக்கரவர்த்தின்னு ஒரு 'மாடர்ன் டச்' கொடுத்துடறாங்க... பார்வதியோட இன்னொரு பேரு காளி. ஆனா காளின்னு சொல்லும் போது பத்து கை; தொங்கின நாக்கு, ரத்த சிவப்பா விழின்னு எப்படி ஞாபகம் வருதோ, அதே மாதிரி கபாலின்னு சொன்னதும்... முகத்துல வெட்டுக்காயம், கடா மீசை தூக்கிக் கட்டுன கைலி, இடுப்புல பட்டை பெல்ட்டு, கழுத்துல இறுக்கிக் கட்டின கைக்குட்டை, இதுதான் ஞாபகத்துக்கு வரும்..." என்று கபாலி புராணம் சொன்ன இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்று, வெளியே வந்த போது, கூடவே ஓர் உருவம் நம்மைப் பின்தொடர, உதறல் எடுத்தது!



• கபாலீஸ்வரன்



• தனசேகரன்

காவல் துறையின் கணக்கில் வராத ஏதேனும் ஒரு கபாலியாக இருக்குமோ என்று நடுங்கிக் கொண்டிருந்தபோது... பின்தொடர்ந்து வந்த உருவம் நம் தோளில் கைவைத்து நிறுத்தியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால் மப்டியில் ஒரு கடமை தவறாத காவல்காரர்!

"இப்போ இருக்கிற இன்ஸ்பெக்டர் இங்க வந்து கொஞ்ச நாள்தான் ஆச்சு. அவருக்கு விஷயம் தெரிய நியாயமில்லை. தேனாம்பேட்டை, ஆலயம்மன் கோவில் ஏரியாவுல க்பாலின்னு ஒரு பெரிய ராபின்ஹுட் எட்டு வருஷத்துக்கு முன்னாடி ரொம்பப் பிரபலம்... ஆட்டோ டிரைவராக இருந்த கபாலி அந்த ஏரியா மக்களுக்கு மலையூர் மம்பட்டியான் மாதிரி. அரசியல்வாதிகள்கிட்டேயிருந்து, (குறிப்பா தேர்தல் நேரத்துல) சலுகைகள் வாங்கிக் கொடுக்கிறது... கமிஷன் பேசில்ல கட்டப் பஞ்சாயத்து பண்றதுன்னு ஒரு குட்டி சாம்ராஜ்யமே நடத்தின ஆளு! அவனும் அவன் பிரண்டும் ஒரு லாரி விபத்துல இறந்துட்டாங்க. ஆலையம்மன் கோவில் போனா போஸ்டர் ஒட்டியிருக்கும். நினைவுச் சின்னம்லாம் இருக்கு. வால்டர் வெற்றிவேல் படத்துல இந்தக் கபாலியை வெச்சுத்தான் வில்லன் கேரக்டரையே உருவாக்கினாங்க..." என்று தகவல் கொடுத்த மப்டி மனிதர் திடீரென மறைந்து போனார். அவர் சொன்னது உண்மை என்பது போல ஆலையம்மன் கோவில் பகுதியில் இருந்த எல்லா வீட்டிலும் கலர் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. நினைவுச் சின்னத்திற்கு மாலை போட்டிருந்தார்கள்!



• 'கபாலி'க்கு நினைவுப் பலகை!

தனசேகரன் – (தலைமைக் காவலர் – மேற்கு மாம்பலம் காவல் நிலையம்)

கபாலிங்கிற பேர் தென்சென்னையிலதான் ரொம்பப் பிரபலம். அதுக்குக் காரணம், மயிலை கபாலீஸ்வரர் கோயில்தான். கபாலம்னா மண்டை. ஈஸ்வரன் சுடுகாட்டுக்குப் போயி அங்கே இருக்கிற மண்டையோடுகளை எடுத்து மாலையாகப் போட்டுக்கிட்டார். அதனாலதான் அவருக்குக் கபாலீஸ்வரர்னு பேர் வந்தது. பெயரை வெச்சு ரவுடிகள் உருவாகிறது இல்லே. எனக்குத் தெரிஞ்சு 'கொரகிருஷ்ணன்னு' ஒரு ரவுடி பதினைஞ்சு வருஷத்துக்கு முன்பு தேனாம்பேட்டை, நுங்கம்பாக்கம்





• ஜெயராமன்



• நடராஜன்



ஆறரை ரூபா கோல்ட்!

பெங்களூரில் உள்ள 'கிருஷ்ணய்ய செட்டி ஜுவல்லர்ஸ்' என்ற நிறுவனம், தமது 130-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பழைய கஸ்டமர்களைக் கண்டுபிடிக்க வித்தியாசமான திட்டமொன்றை அறிவித்தது.

1949-ஆம் ஆண்டிற்கு முன் இவர்களிடத்தில் நகை வாங்கியவர்கள் அப்படியே வைத்திருந்தாலும் சரி, அல்லது அணிந்து கொண்டிருக்கும் நபரின் புகைப்படம் இருந்தாலும் சரி – கொண்டு வந்து கொடுத்தால் 'வின்டேஜ் கார்' ஒன்றைப் பரிசாகப் பெறலாம் என்பது அந்தத் திட்டம். ஒருவேளை நகையைத் தொலைத்துவிட்டிருந்தாலோ, உருக்கி வேறொரு நகையாகச் செய்திருந்தாலோ வாங்கியபோது கொடுத்த ரசீதைக் கொண்டு வந்து கொடுப்பவர்கள்கூடப் போட்டியில் பங்கு பெறலாம். இவர்களுக்கு ஆறுதல் பரிசாக பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்!

இந்த அறிவிப்பு வெளியிட்ட தினத்திலிருந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதில் ஒருவர் 1929-ஆம் ஆண்டு இவர்களிடத்தில் நகை வாங்கிய ரசீதை சமர்ப்பித்திருக்கிறார். வாங்கியபோது அந்த நகையின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? ஆறு ரூபாய் ஐம்பது பைசா!

— மகேந்திரன்

ஏரியாவையே கலக்கினவன். இப்போ அது மாதிரி ரவுடிகளோட பல்லை யெல்லாம் பிடுங்கியாச்சு. சென்னையைத் தவிர நீங்க வேற எங்கேயும் கபாலிங்கிற பேரைப் பார்க்க முடியாது. இந்த கபாலி இமேஜ் ஏரியாவுக்கு ஏரியா மாறும். கிரி, பக்கிரி, இதெல்லாம் இதே மாதிரி பேருங்கதான். நம்ம ஸ்டேஷன்ல கபாலிங்கற பேர்ல கிரிமினல் யாருமில்லை. நீங்க மயிலாப்பூர் ஸ்டேஷனை டிரை பண்ணுங்க!''

நடராஜன் (தலைமைக் காவலர் – மயிலை காவல் நிலையம்)

இங்கே நூத்துக்கு அஞ்சு பேருக்கு 'கபாலி' பேர் வெச்சுருப்பாங்க. பொம்பளைகளுக்குக் கூட கபாலியம்மா, கபாலியம்மைன்னு பெயர் இருக்கு. அவ்வளவு ஏன் சார்? நம்ம ஸ்டேஷன்லேயே 'கபாலி'ன்னு கான்ஸ்டபிள் இருக்கார். என்ன ஒண்ணு, அடிக்கடி லீவு போட்டுடுவார். இதோ அவரே வந்துட்டார்'' என்று கான்ஸ்டபிள் கபாலியை நமக்குக் காட்டினார்.

"எங்க அம்மாவுக்குத் தொடர்ந்து மூணு குழந்தை பிறந்து இறந்துடுச்சு. நாலாவது குழந்தையும் இறந்துடக்கூடாதேன்னு மயிலாப்பூர் கபாலீஸ்வரர் சாமிக்கு வேண்டிக்கிட்டாங்க. அப்புறம்தான் நான் பொறந்திருக்கேன். அதனாலதான் எனக்கு கபாலீஸ்வரன்னு பெயர் வெச்சாங்க'' என்றார்.

அதற்குள் 'கபாலி சார்' என்று உள்ளேயிருந்து அழைப்பு வர, ஒரு காவல் நிலையத்தில் 'கபாலி' என்ற பெயர் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறதே என்ற சந்தோஷம் நம் நெஞ்சை(!) நிறைத்தது.

— ஜெயந்தன்

படங்கள் : வெங்கடேஷ்



சிவாஜி புரொடக்ஷன்ஸ்
வெற்றிப்பாதையில்...
திங்கள் முதல்
வெள்ளி வரை
உங்கள்
SUN TV யில்
பகல் 12 மணிக்கு
மெகா தொடரை
காணதவறாதீர்கள்.
கோகிலா
எங்கே போகிறாள்...
C.V. ராஜேந்திரன்
தயாரிப்பு
பிரபு
Designs Sridhar

"இந்தியா என் இரண்டாவது தாய்நாடு!"



• நவாஸ் ஷெரீஃப்



• பிரியங்கா

அஃப்தாப் உசைன், பாகிஸ்தானில் வசிக்கும் உருது பேராசிரியர். பேராசிரியரின் போதாத காலம், அவர் நமது பிரதமர் வாஜ்பாயின் இந்தி கவிதைகளின் உருது மொழி பெயர்ப்பை அங்கே வெளியிட்டு விட்டார்.

அங்குள்ள முஷாரஃபின் ராணுவ ஆட்சி, பேராசிரியரை உண்டு இல்லை என வாட்டி விட்டது. 'நவாஸ் ஷெரீஃப்தான் மொழி பெயர்த்து வெளியிட ஏற்பாடு செய்தார்' என்பது போல் சாட்சியம் வழங்க வற்புறுத்தியதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு பலாக்காய் அடிக்க முயற்சி செய்கிற அளவு நிலைமை தீவிரமாகவே, ரகசியமாகப் புறப்பட்டு அடைக்கலம் தேடி தில்லி வந்து விட்டார்!

"ஈரானுக்கோ, துபாய் போன்ற பிற முஸ்லிம் நாடுகளுக்கோ போகாமல் இந்தியாவுக்கு வர என்ன காரணம்?"

"பூகோள ரீதியில் இந்தியாவும் பாகிஸ்தானும் தனித்தனி தேசமாக இருப்பினும் கலாசார ரீதியில் என்னால் அப்படி வேறுபடுத்திப் பார்க்க இயலவில்லை. இந்தியா என் இரண்டாவது தாய்நாடு!" என்கிறார் உசைன்.

உண்மையில், அக்கவிதைகள் பாகிஸ்தானில் வெளியாவதற்குத்தான் உசேன் உதவியிருக்கிறாரே தவிர மொழி பெயர்த்தது அவரல்ல. ஜமீல் அக்தர் என்கிற நம் நாட்டில் வசிக்கிற உருது கவிஞரின் கைங்கர்யம்தான் அது.

"முதலில் எந்த பதிப்பாளரும் பாகிஸ்தானில் இதை வெளியிட முன்வரவில்லை. ஆனால் வாஜ்பாய் பஸ்ஸில் வந்து போனாரே, அப்போது நிலைமை சற்று சுமுகமானது. நூலை நல்லபடியாக வெளியிட்டு, லாகூர் ஆளுநர் மாளிகையில் வாஜ்பேயை சந்தித்து அவருக்கும் ஒரு பிரதி அளித்தேன்.

"ஆனால், ஷெரீஃப்பை நீக்கிவிட்டு ராணுவம் ஆட்சியைப் பிடித்தபோது என்னை வாட்டியெடுத்து விட்டார்கள். வீட்டைச் சூறையாடினார்கள். தேசத்துரோகக் குற்றம்சாட்டுவது அவர்களது திட்டம். ஆனால், அதற்குரிய ஆவணங்கள் ஏதும் அகப்படாததால், ஷெரீஃப்புக்கு எதிராக அப்ரூவர் ஆக வற்புறுத்தினார்கள். மனச்சாட்சி அதற்கு இடம் தராததால் தில்லிக்குத் தப்பி வந்துவிட்டேன்" என்கிறார் பேராசிரியர் உசைன்.



• உசைன்

இந்தச் சூழ்நிலையில்தான், பயங்கரவாதத்தில் ஈடுபட்டதற்காகவும் விமானத்தைக் கடத்தியதற்காகவும் பாக். சிறப்பு நீதிமன்றம் நவாஸ் ஷரீஃபுக்கு ஆயுள் தண்டனை வழங்கியிருக்கிறது. தீர்ப்புக்கு முக்கிய சாட்சியாகக் கொள்ளப்பட்டது அமினுல்லா சௌத்ரியின் வாக்குமூலம். இவர் உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறையின் முன்னாள் தலைவர். வழக்கில் அப்ருவராக மாறி சாட்சி சொன்னவர்!

அப்ருவராக மாறும்படி தம்மை வற்புறுத்தியதாக கவிஞர் உசைன் சொல்வதைப் பார்க்கும்போது, முஷரஃப் ராணுவ அரசின் நடுநிலைமை குறித்த சந்தேகம் வலுப்படுகிறது.

அஃப்தாப் உசைனுக்கு வயது 38. எழுத்தாளராகவும் கவிஞராகவும் (பாக்.) பஞ்சாப்

பகைமையால் ஈர்க்கும் 'ஈர'பாண்டி!

அர்ஜுன், மனிஷா ஆட்டம் (முதல்வன்) நடைபெற்ற கிராமம் வீரபாண்டி. இங்குள்ள கௌமாரியம்மன் ஆலயத்தில் இரண்டு 'களஞ்சியத் தொட்டிகள்' வைத்திருக்கிறார்கள். கம்பம் பகுதி பாசன



விவசாயிகள் தங்கள் மகசூலில் ஒரு சிறு பகுதியையாவது இங்கே காணிக்கையாக்குவது வழக்கம். அறுவடைக் காலத்தில் ஒரு தொட்டியில் காப்பிக் கொட்டையும் மற்றொன்றில் நெல்லுமாக நிரம்பி வழியும்!

தேனியிலிருந்து நான்கு கி.மீ தூரத்தில் இருக்கிறது வீரபாண்டி. கோயிலருகேயே சலசலத்தபடி ஆறு ஓடுகிறது. சற்றுத் தள்ளிப் போனால், தண்ணீர் இரைச்சலோடு மதகுகளின் தடுப்புகளில் வழிந்தோடுகிறது. பாரதிராஜாவுக்குப் பிடித்த லொகேஷன் என்பது இவ்வூருக்குக் கூடுதல் பெருமை.

— த. இராஜவேல்

பல்கலைக் கழக வளாகத்தில் சிறப்பு அந்தஸ்து பெற்றவர்.

இந்தியாவுக்கு இவர் தப்பி வந்து விட்டாலும் குடும்பம் இன்னும் பாகிஸ்தானிலேயேதான் இருக்கிறது என்பதால் ரொம்பவே பயப்படுகிறார், உசைன். "அவர்களுக்கு ஏதும் ஆபத்து நேராமல் இருக்க வேண்டும்."

இதற்கிடையில் பாக் - இந்தியா இடையே ஓடும் சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்த வேண்டும் என்று பாகிஸ்தானில் கடும் கூக்குரல் எழுந்திருக்கிறது. பேராசிரியர் இந்த ரயில் மூலம்தான் தப்பித்து வந்தார்.

ஒரு விஷயம் –

'சம்ஜௌதா' என்றால், 'புரிந்து கொள்ளுதல்' என்று அர்த்தம்!

• • •

ராஜ்யசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, இரண்டு அவசர முடிவுகள் எடுத்திருக்கிறார்கள்.

1. மம்தா பானர்ஜியுடன் இணைந்து மே. வங்கத்தில், புதிய - புரட்சி(ர)க் கூட்டணி.
2. பிரியங்காவின் தீவிர கட்சிப் பிரவேசம்.

மே. வங்கத்தில், காங்கிரஸின் அதிகார பூர்வ வேட்பாளர், (மமதா ஆசி பெற்ற) ஒரு சுயேட்சையால் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக, சென்ற வாரம் வங்காள காங்கிரஸ் பெருந்தலைகள் அலறியடித்துக் கொண்டு தில்லிக்கு ஓடி வந்தன. 'மம்தாவுடன் பழம் விடாத பட்சத்தில் அங்கே காங்கிரஸுக்கு சமாதி உறுதி' என்று எடுத்துக் கூற, சோனியா சம்மதித்திருக்கிறார்.

ஆனால், மம்தாவின் த்ருணமூல் காங்கிரஸ், மத்திய பா.ஜ.கவுடன் கூட்டணியில் இருக்கிற நிலையில் இதெப்படி சாத்தியம்?

சாத்தியம்தான். மாநில அளவில் காங்கிரஸ் கூட்டு; மத்திய அளவில் பா.ஜ.க கூட்டு என்று த்ருணமூல் இரண்டு குதிரை வண்டி ஓட்டப் போகிறது.

ஒரே ஒரு கண்டிஷன். மே. வங்கத்தில் பா.ஜ.க. பலமாக உள்ள சில இடங்களில் மட்டும் காங்கிரஸ் தன் வேட்பாளர்களை நிறுத்தக் கூடாது என்பதுதான் அம்மணியின் கண்டிஷன்.

அதே மாதிரி த்ருணமூல் – காங். கூட்டணி ஆட்கள் 'நிற்கிற' பகுதிகளில் பா.ஜ.க. 'அனுசரித்து'ப் போகும்!

மம்தாவைக் கழற்றிவிட முடியாத நிலையில் பா.ஜ.கவும் இதை ஒப்புக்கொண்ட மாதிரிதான்!

இது இவ்வாறிருக்க, பிரியங்கா, மறுபுறம் தீவிர கட்சிப் பணிக்கு வந்து விட்டார்.

சதீஷ் சர்மாவின் இல்லம் பிரியங்காவின் அலுவலகமாக மாற்றப்பட்டிருக்கிறது.

முற்றிலும் கம்ப்யூட்டர் மயமான தகவல்கள், தொடர்பு சாதனங்களுடன் தினம் சுமார் 10 மணி நேரம் தீவிர கட்சிப் பணியாற்றும் பிரியங்காவின் பிரதான வேலை, சோனியாவின் உட்கட்சித் தலைவலி நபர்களைச் சமாளிப்பது!

ஆனால், தொண்டர்களைச் சந்திப்பதுதான் பிரதான பணி என்று பிரியங்கா அறிவித்திருப்பதால் கட்சி வட்டாரத்தில் உற்சாகம் துளிர்த்திருக்கிறது.


அன்னைக்கு சொற்பொழிவுகள் தயாரித்துத் தருவது, நலப்பணிகளை கவனிப்பது, தொகுதிகள் விசிட் என கலக்கப் போகிறார் பிரியங்கா.

பிரியங்காவின் பிரவேசம் புரட்சிகர மாறுதல்களுக்கு வித்திடுமா என்பது இப்போது தெரியாது.

ஆனால் 'கோமா' நிலைக்குப் போய் விட்ட காங்கிரஸுக்குக் குறைந்தபட்சம் ஆக்ஸிஜன் சிலிண்டராகவாவது இந்த ஏற்பாடு அமையும் என்கிறார்கள் தில்லி ராஜதந்திரிகள்.

— வெங்கட்

வங்கியின் லாக்கர் வசதி
உங்கள் இல்லத்திலேயே இருக்கவேண்டுமா?



- உங்கள் இல்லத்திலேயே பாங்க் லாக்கர் போன்ற வசதிகள்.
- ஒருமுறை மட்டுமே பணம் செலவழித்தால் போதும்.
- Caution Deposit செலுத்தத் தேவையில்லை.

- லாக்கர் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாது.
- லாக்கரைத் திறக்கும் விதம் திருடர்களுக்கு தெரியாது.
- திருடர்களால் உடைக்கவோ அல்லது மாற்று சாவி போட்டு திறக்கவோ முடியாது.
- திண்டுக்கல் Automatic Lock/Unpickable dual control lock with master keys பொருத்தப்பட்டது.
- உங்கள் ஒரிஜினல் சாவிகள் காணாமல் போனால் கூட, திண்டுக்கல் மாஸ்டர் சாவிகள் உங்களுக்கு உதவும். தொலைந்து போன ஒரிஜினல் சாவிகளை வேறு யாரும் உபயோகிக்க முடியாது.
- வருடாந்திர வாடகை கிடையாது.
- வங்கி லாக்கர் இன்று விடுமுறை என்ற கவலை இனி இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.
- மூன்று வகையான மாடல்களில் கிடைக்கிறது.

Model	Small	Medium	Large
Dimensions Outside Weight Amount	H W D 10"x14"x8" 20Kg. Rs. 3,250	H W D 12"x15"x10" 24Kg. Rs. 4000	H W D 12"x18"x12" 32Kg. Rs.5000

- 3 ஸ்டாண்டர்டு மாடல்கள் தவிரவும், தங்களின் தேவைக்கேற்ற அளவுகளின்படி சப்ளை செய்கிறோம். தங்களின் தேவைக்கு சரியான மாடலை குறிப்பிட்டு 50% அட்வான்சுடன் **UMA & CO.** என்ற பெயருக்கு **Account payee cheque/draft (Payable at Chennai)** அனுப்பினால் லாக்கர் **TVS** லாரி மூலம் அனுப்பி வைக்கப்படும்.
- நகைக்கடைகள், பெட்ரோல் பங்குகள், Pawn Brokers, அலுவலகம், கோவில்கள், வியாபார ஸ்தலங்களுக்கு பெரிய அளவுகளில் இரும்புப் பெட்டிகள் சப்ளை செய்கிறோம்.
- 45 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்.

பீரோ என்பது ஆடைகள் வைப்பதற்கு மட்டுமே. பணம் மற்றும் நகைகளை பாதுகாக்க அல்ல.

தங்கள் தேவைக்கு அணுகவும்

UMA & CO.

274, LINGHI CHETTY STREET, CHENNAI - 600 001.
PHONE: 5244511, MOBILE: 9840034334
PAGER: 9632707295
E-Mail: umasafechennai@Yahoo.com visit us at:www-chennaionnet/umasafe.htm

Dealer: ALFA AGENCIES, Tuticorin. Phone: 330982, 330983

லாக்கர் பொருத்தும் இடம், உபயோகிக்கும் விதம் மற்றும் பல முக்கிய குறிப்புகள் பாதுகாப்பை முன்னிட்டு லாக்கர் வாங்குபவர்களுக்கு மட்டுமே தெரிவிக்கப்படும்.

DEALERSHIP ENQUIRIES SOLICITED

அசத்தல் (alias) அம்பானி!


• அம்பானியுடன் கிளின்டன்


• அம்பானி

ஆறு குழந்தைகளைப் பெற்ற பள்ளி வாத்தியார் அப்பாவால், மூத்த மகனுக்குக் கனவுகளைத் தவிர பெரிய சொத்தாக வேறு எதையும் தந்திருக்க முடியாது! ஆனால், குஜராத்திலுள்ள சோர்வட் கிராமத்தைச் சேர்ந்த அந்தச் சிறுவனால், இந்தச் சொத்தை வைத்துக் கொண்டே ஒரு சாம்ராஜ்யத்தை அமைக்க முடிந்திருக்கிறது!

தமது 17வது வயதில் ஏடனுக்கு ஓடிச் சென்று, (ஷெல்) பெட்ரோல் பம்ப்பில் ஊழியனாகப் பணிபுரிந்து, 26 வது வயதில் 25,000 ரூபாயுடன் இந்தியா திரும்பி, நைலான், ரேயான், மிளகு, ஏலக்காய் என்று வியாபாரம் துவங்கி, தொழில் முதலைகளாலும் பெரிய வங்கிகளாலும் ஏளனப் படுத்தப்பட்டதால் சிறு முதலீட்டாளர்களை வளைத்துப் பிடித்தார்.

கல்வி, செல்வம், தொழில் பாரம்பரியம் போன்ற எதுவுமே இல்லாமல், தன்னம்பிக்கை என்ற ஒரே கவசத்துடன் தான் ஆரம்பித்த தொழிலுக்கும் அதே பெயரையிட்டு, இன்று ஆறு மில்லியன் ஷேர் ஹோல்டர்களை வைத்துக்

இன்று தமது 64வது வயதில், பெட்ரோ கெமிகல்ஸில் பெரிய பிஸினஸ் எம்பயரையே அந்தச் சிறுவனால் நிறுவ முடிந்திருக்கிறது!

அதுவும் பொதுவாக, இதுபோன்ற சக்ரவர்த்திகளுக்குப் பக்கபலமாய் நிற்கும்



கின்னஸ் மற்றும் லிம்கா புக் ஆப் ரிக்கார்ட்ஸில் இடம் பெற வேண்டும் என்பதற்காக நானு சகாதேவ் படேல் எனும் எஸ்.எஸ். எல்.சி. பயிலும் மாணவர், கர்நாடக மாநில ஹூப்ளியிலிருந்து கார்வார் பகுதிக்கு 165கி.மீ, கால்களில் சக்கரத்தைக் கட்டிக் கொண்டு 'ஸ்கேட்டிங்' சென்று சாதனை படைத்துள்ளார்.

வழிகாட்டியாகச் சென்றிருக்கிறார் அவருடைய குரு ஜரீஷ் கடப்பா.

இதில் என்ன சாதனை?

நானுவிற்குப் பிறவியிலேயே கண்பார்வை கிடையாது.

ஆதாரம்: தி ஹிந்து

தகவல்: கோவி. இராஜேந்திரன்

கொண்டு, எல்லோரும் 'ரிஸஷன்' என்று அழுத காலத்திலும் பெருத்த லாபத்தை ஈட்ட முடிந்திருக்கிறதென்றால்...

அந்த தீரஜ்லால் என்ற திருபாய் அம்பானியை கௌரவிக்காமல் இருக்க முடியுமா?

அமெரிக்கர்களின் தொழில்நுட்பத்தையும், ஜப்பானியர்களின் டெக்னாலஜியையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, 'என்னுடைய போட்டியாளர்கள் ட்யூபாண்ட், ஐசிஐ, ஷெல் போன்றோர்தான்' என்று சொல்லக் கூடிய ஓர் உலகளாவிய தொழில் வல்லுனரை கௌரவிக்க, உலகின் மிகப் பெரிய ஜனநாயக தேசத்தின் மிகப் பிரபல தலைவர் வருகை தரும் தருணத்தைக் காட்டிலும் சிறந்த தருணம் எதுவாக இருக்க முடியும்?

எந்த ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் இவரது ரிலையன்ஸ் கம்பெனியின் ஷேர்கள் கொடி கட்டிப் பறந்திருக்கின்றனவோ, அதே இடத்தில் நடந்த விழாவில், FICCI இவருக்கு "Indian Entrepreneur of the 20th Century" விருதை அளித்திருக்கிறார்கள்.

மார்ச் 24 அன்று, மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சே விழாக்கோலம் பூண்டிருக்கையில் (அம்பானி விழா அலங்கரிப்புகளுக்கென்றே ஒரு கோடி கொடுத்தாராமே?) அமெரிக்கப் பாதுகாவலர்கள் படு டென்ஷனுடன் கண்காணித்துக் கொண்டிருக்கையில், அம்பானிக்கு வில்லியம் டேவிட் சிறப்புப் பரிசை அளித்து கௌரவித்தார். பிரசிடெண்ட் கிளிண்டன் அம்பானியின் சாதனைகளைப் பலபடப் புகழ்ந்தது மும்பை மக்களைப் புல்லரிக்க வைத்தது!

FICCI யின் பிரசிடெண்ட் ஜி.பி. கோயங்கா, அம்பானியின் தொலைநோக்கு, சிந்தனைச் செறிவு, ஊக்குவிக்கும் திறன் முதலியவற்றை விவரித்து, உலகின் தலைசிறந்தவற்றுடன் போட்டியிடக்கூடிய அளவுக்கு இந்தியாவை உயர்த்தியிருப்பதில் அம்பானி ஆற்றியிருக்கும் அரிய தொண்டை மனம் நெகிழ்ந்து பாராட்டினார்.

புதிய மிலெனியத்தில் தைரியத்துடன் இந்தியா காலெடுத்து வைக்க உதவியிருக்கும் இந்த நம்பிக்கை நட்சத்திரத்தை குமாரமங்கலம், பிரமோத் மகாஜன் போன்றோர் வானளாவப் புகழ்ந்து தீர்த்தனர்.

எல்லாவற்றையும் சிலிர்ப்புடன் ஏற்றுக் கொண்ட திருபாய் அம்பானி, "இது எனக்குக் கிடைத்த பரிசல்ல; என் ரிலையன்ஸ் குடும்பத்துக்குக் கிடைத்த பரிசு! இதில் வேலை செய்பவர்கள், முதலீடு செய்திருப்பவர்கள், எங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள், அனைவருக்குமே கிடைத்த கௌரவமாகத்தான் இதைக் கருதுகிறேன். இந்தியா திறமைகளின் உறைவிடம். அயர்ச்சி இன்றி முயற்சி செய்தால், இப்படிப்பட்ட கௌரவத்தைப் பெற இன்னும் ஆயிரம் தகுதியாளர்களை உருவாக்கிவிட முடியும்" என்று நன்றியுரையில் நவின்றார்.

தேசிய அளவில் அவார்டுகளைப் பெறுவது அம்பானிக்கு அலுத்தே போயிருக்கும்! சர்வதேச அளவிலும் குறிப்பிடத்தக்க அளவு பெற்றிருக்கிறார் என்பது பெருமைக்குரிய விஷயம்தான். அதுவும் ஏஷியா வீக்கின் "Business Hall of Fame"ல் இடம்பெற்ற ஒரே இந்தியர் இவர்தான்!

கிளிண்டன், அம்பானியின் மகன்கள் முகேஷ், அனில் முதலியோருடனும் அளவளாவிக் கொண்டிருந்தார். டின்னரின் போதும் 'ஹெல்த் கேர்', 'சுற்றுச்சூழல்', 'ராஜஸ்தானிய மாடல் கிராமம்' போன்றவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாராம். அம்பானிகள் தரப்பில் மரத்தாலான தங்க முலாம் பூசப்பட்ட பேழை ஒன்று பரிசாக வழங்கப்பட்டதாகவும் (பல லட்சங்கள் பெருமானம்!) அதை அவர் மிகவும் ரசித்ததாகவும் சொல்லப்படுகிறது.

— ஜெயஸ்ரீ ராஜ்

● எம். மகேந்திரமுருகன்,
எடுத்தனூர்.

? அ.தி.மு.க. நிர்வாகிகளை ஜெ மாற்றியிருப்பது எதைக் காட்டுகிறது?

! களையெடுப்பதாக நினைத்து, சிலர் பயிரையே பிடுங்கி விடுவார்கள். 'ஜெ'யோ களையெடுத்து விட்டு வேறு களைகளை நடுகிறார்!

● இரா. வளையாபதி,
தோட்டக்குறிச்சி.

? மோசமான ரசனைகளை வளர்ப்பது பத்திரிகைகள்தாம் என்ற இயக்குனர் பாலுமகேந்திராவின் வாதம் சரியா?

! சில பத்திரிகைகளும் எல்லா சினிமாக்களும் என்பதே சரி.

● ம. தாமோதரன், கானூர்.

? இன்றைய அரசியல்வாதிகள் ஏதேனும் ஒரு குறளின்படியாவது நடந்து கொள்கிறார்களா...?

! ஓ எஸ்! அதிகாரம் 89, 108, 28, 83, 56 முதலியவற்றில் இடம்பெற்றுள்ள குறள்களின்படி நடந்து கொள்ளத்தான் செய்கிறார்கள்!

● கு. கணேசன்,
பனங்கோட்டூர்.

? ராஜ்ய சபா தேர்தலில் எம்.எல்.ஏக்கள் கட்சி மாறி வோட்டுப் போடும் கலாசாரம் வளர்ந்து வருவது குறித்து...?

! கட்சித் தலைவர்கள் கொள்கை அடிப்படையில் அன்றி வெற்றி வாய்ப்பு மட்டுமே கருதி சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை அமைக்கும் போது, எம்.எல்.ஏக்களும் பணம் பண்ணும் சந்தர்ப்பத்தை இழக்க விரும்பாததில் வியப்பென்ன?






• முதியோர் அணி!

❑ ரூ 50 பரிசு பெறுபவர்:
அஜூர்,
117, எல்டாம் சாலை,
சென்னை - 600 018.

• ரூ. 25 பரிசு பெறுபவர்:
மு. அப்துலஜீஸ்,
164, பச்சைவாழியம்மன் நகர்,
வானூர் - 605 109.
விழுப்புரம் மா.வ.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? இந்திய கிரிக்கெட் அணிக்கு ஷார்ஜா தந்துள்ள பட்டம்?

! வீட்ல புலி; வெளியில எலி!

● வீரமுத்து அருணாசலம், ஈரமங்கலம்.

? மானியம் மானியம் என்று சொல்லி மக்களை மயக்கி விட்டு இப்போது மானியங்களைப் படிப்படியாகக் குறைக்கப் போகிறோம் என்று மத்திய அரசு சொல்வது சரியா?

! மானியங்களைக் குறைக்க வேண்டும் என்ற முடிவு சரிதான். ஆனால் 'எந்த மானியங்களை' என்று முடிவு செய்வதில் கவனம் தேவை. ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான மானியத்தைக் குறைப்பது, அவர்கள் வயிற்றில் அடிப்பது போன்ற செயல்.

● நாஞ்சில் க. நாகராஜன், பரமக்குடி.

? டெல்லியில் புதிதாக உருவாகியுள்ள வி.பி.சிங், கௌடா, சந்திரசேகர், குஜ்ரால்



• 'புரட்சி' விவசாயி!

– நால்வர் அணி பற்றி...?

! வயதான காலத்தில் கூடியிருந்து குளிரலாமே தவிர, உருப்படியாக ஏதும் செய்வார்களென்று தோன்றவில்லை.

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.

? 'வாழ்நாள் முழுதும் அ.தி.மு.க. எதிரி என சாசனம் எழுதிக் கொடுத்தோமா?' என்று புதுவை அமைச்சர் கண்ணன் கேட்கிறாரே?

! வாழ்நாள் முழுதும் ஊழலை எதிர்ப்போம் என்று சொன்னார்களே!

● என். உஷாதேவி, மதுரை.

? கிருஷ்ணா நீர் வரத் தாமதமாகிறது என்பதற்காக, 'கிருஷ்ணா நீர் திட்டத்தைக் கொண்டு வந்தது தி.மு.க. அல்ல...' என்று முதல்வர் சமாளிப்பது சரியாகுமா?


! கிருஷ்ணா நதி நீர்த் 'திட்டமே உருப்படியானதல்ல' என்ற விமர்சனத்துக்குப் பதில் சொல்லும் முகமாக முதல்வர் அளித்த விளக்கம் என்பதால் அது சரியான வாதம். ஆனால், சென்னையில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு என்ற நிலைமை நிஜமாக இருக்கிறதே! கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் கிருஷ்ணா நீரைப் பெறத் திட்டமிட்டிருந்தால் இவ்வளவு கொடுமையாயிருந்திராது என்பதும் நிஜமே!



• கிருஷ்ணா, கிருஷ்ணா!



• வாழ்நாள் வாதம்



• பழி ஓரிடம்...

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை – 84.

? மத்திய அரசின் புதிய ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையில், 714 பொருட்கள் இறக்குமதிப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனவே – இதனால் வருங்காலத்தில் உள்நாட்டு நிறுவனங்களின் நிலை எவ்வாறு இருக்கும்? காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்டு கட்சிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனவே...?

! சர்வதேசத் தரத்துக்கு நமது தயாரிப்புகள் அனைத்தும் உயரவேண்டும் என்பது ஒன்று. நமது ஏற்றுமதியாளர்கள் உலகச் சந்தையிலே போட்டா போட்டிகளைச் சமாளித்து, சுறுசுறுப்புடன் இயங்க வேண்டும் என்பது இரண்டாவது. இதை கம்யூனிஸ்டுகள் எதிர்ப்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்த காங்கிரஸே எதிர்ப்பதைத்தான் ஜீரணிக்க முடியவில்லை.

● மு. அப்துலஜீஸ், வாணூர்.

? சமத்துவபுரங்கள் சமத்துவத்தை வளர்க்கின்றனவா...?

! சேலம் மாவட்டம் சங்கரி அருகே கத்தேரி என்ற இடத்திலுள்ள சமத்துவபுரத்தில் குடியேறிய ஆறு குடும்பங்களை அவர்களது சொந்த கிராமமான தொட்டிப்பாளையம் மக்கள் விலக்கி வைத்து விட்டனர் என்ற செய்தி அதிர்ச்சி தந்தது. இந்தப் பக்கம் சாண் ஏறினால், அந்தப் பக்கம் முழம் சறுக்குகிறதே!

● தி. மா. தமிழழகன், திருச்சி – 8.

? அடுத்த முதல்வர் ஜெயலலிதாவா?

! ஏனய்யா, ஆறு கோடி தமிழர்களையும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சட்டமன்றத்தில் மிரட்டியது போதாதென்று நீர்வேறு பயமுறுத்த வேணுமா...? (பி.கு: கலைஞரிடம் கடன் வாங்கிய பதில்.)

● அஜார், சென்னை – 18. ❑

? கட்சி அமைப்புகளில் மாற்றங்கள் செய்கிறபோது கட்சித் தலைமை மட்டும் மாறாமுகமாகவே இருக்கின்ற கேட்டினை கவனித்தீர்களா?

! எந்தக் கட்சிக்கும் தலைமை என்பது நீடித்த, பலமான தலைமையாகத்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் கட்சியை வளர்க்க முடியும். ஆனால், கூடவே இரண்டாம் நிலைத் தலைவர்களையும் கவனமாக, பாரபட்சமின்றி வளர்ப்பதும் மிகவும் முக்கியம். இதில்தான் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் தவறுகிறார்கள் அல்லது சறுக்குகிறார்கள்.

ஐயர் ரெடி!

தாலிகட்டும் நேரத்தில் மாப்பிள்ளை மிஸ்ஸாகி விடுவதும், மணப்பெண் ஜன்னல் வழியாக, கல்யாணப் புடைவையை ஏணியாக்கி எஸ்கேப்பாகிவிடுவதும் தமிழ் சினிமாவில் நிரம்ப சகஜம்.

''யதார்த்த வாழ்க்கையிலும் எங்கேனும் இப்படி நடந்திருக்கலாம்! மாப்பிள்ளை, மணப்பெண் மட்டுமல்ல; சரியான நேரத்துக்கு வரவேண்டிய ஐயர் வராவிட்டாலும், திருமணம் தாமதமாகி, பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்திவிடும். இந்த வலியை என் அனுபவத்தில் நேரடியாக உணர்ந்தேன். அதில் தோன்றிய எண்ணம்தான் 'ஹலோ ஐயர்' திட்டம்!'' என்கிறார் புரோகிதராகவும், ஆலய குருக்களாகவும் இருந்துவரும் குமார சிவாச்சாரியார்.

''பங்குனி மாசத்தில் வந்த பிஸியான முகூர்த்த நாள் அது. காலை எட்டரையிலேர்ந்து ஒன்பதரைக்குள்ளே தாம்பரத்துல ஒரு கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டிருந்தேன். அதே நாள் குரோம்பேட்டையில என்னோட குடும்ப நண்பருக்குக் கல்யாணம்.

நல்லவேளையாக முகூர்த்த நேரம் அதிகாலை அஞ்சரையிலேர்ந்து ஆறரை.

நண்பர் கல்யாணத்துக்குப் போயிட்டு, ரயில்ல தாம்பரம் போயிடலாம்னு பிளான்.

நான் போய்ச் சேர்ந்தபோது அஞ்சேகால். எல்லோரும் ரொம்ப பதற்றமா இருந்தாங்க. விஷயத்தைக் கேட்டேன். அட்வான்ஸ் வாங்கின ஐயர் வரலேன்னு சொன்னாங்க. ஒரு புரோகிதர் என்ற முறையில் எனக்குக் கஷ்டமா இருந்தது. ஐயர் வரலைங்கிறது கொஞ்ச நேரத்தில் மணப்பெண் 'ராசி'யா உருமாறிடிச்சு. பெண்ணோட அதிர்ஷ்டம் கல்யாணத்தன்னிக்கே பிச்சுகிட்டு அடிக்கிறதுன்னு என் காது படவே ஒரு பெண் பேசினாங்க... உடனே சுறுசுறுப்பாயிட்டேன். கல்யாணத்துக்கு வந்த உறவினர் ஒருத்தர்கிட்டேயிருந்து மோட்டார் சைக்கிள் எடுத்துகிட்டு, குரோம்பேட்டையில எனக்குத் தெரிஞ்ச குருக்கள் வீட்டுக்குப் போனேன். நல்லவேளை, அன்றைக்கு அவர் ஒன்பது மணிக்குதான் கமிட் ஆகி இருந்தார். அவரை கையோட அழைச்சிட்டு வந்து, மந்திரத்தை சுருக்கமா சொல்லி முகூர்த்த நேரத்துக்குள்ளே கல்யாணத்தை முடிச்சேன்! அதை இப்போ நினைச்சாலும் த்ரில்லா இருக்கு.



''அன்றைக்கு முடிவு செஞ்சேன், ஒவ்வொரு ஏரியாவுலேயும் உள்ள தெரிஞ்ச புரோகிதர்களை 'ஹலோ அய்யர்' திட்டம் மூலம் ஒருங்கிணைச்சுட்டேன். இப்போ வீட்ல நடக்கிற கல்யாணம், கணபதி ஹோமம் இப்படி எந்த விசேஷமா இருந்தாலும் கடைசி நேரத்துல ஐயர் வரலேன்னா கவலைப்பட வேண்டியதில்லை! ஒரு போன் போட்டா போதும், உங்க ஏரியா புரோகிதர் டாண்ணு வந்து நிப்பார்! கட்டணமும் ரொம்ப நியாயமா வாங்குவார்'' என்கிறார் குமார சிவாச்சாரியார்.

இவரது 'ஹலோ' : 2388716

— வியோ

ஷூட்டிங் ஸ்பாட்

ஏவி.எம். ஸ்டுடியோவில் 'தாய் மேல் ஆணை வீடு' என்று ஒரு வீடு இருக்கிறது. 'தாய் மேல் ஆணை' படத்துக்காகக் கட்டப்பட்ட நிரந்தர லோயர் மிடில் கிளாஸ் வீடு செட். பழைய கயிற்றுக் கட்டில், விசிறி, தகரப் பெட்டிகள், பானை அதனை மூடிய தட்டு மீது தம்ளர், பழைய பீரோ, பழைய காலத்து மாடலில் ஒரு டேபிள் ஃபேன், (எமர்ஜென்சிக்கு) ஒரு லாந்தர் லைட்.

இவை நடுவே சோகம் பொங்க பானுப்ரியா, அப்பாவி அப்பாவாக கோவை அனுராதா!

ஒரு போலீஸ்காரர் வீட்டு வாசலில் சைக்கிளில் வந்து இறங்கி சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு மணி அடித்து, 'சார்! சார்!' என்று உரக்கக் குரல் கொடுக்க, கோவை அனுராதாவும், பானுப்ரியாவும் வெளியே வருகிறார்கள்.

'கட்' சொல்லுகிறார் டைரக்டர் வெங்கட். "சைக்கிள் மணி அடித்து விட்டு, 'சார்' என்று குரல் கொடுத்தால், போலீஸ்காரர் மாதிரி இல்லை; போஸ்ட்மேன் போல இருக்கிறது. அதனால், மணி அடிக்காமல் சற்று அதட்டலான குரலில் 'சார்' என்று அழைத்தால் போதும்'' என்று திருத்துகிறார்.

மணி அடிப்பது நீக்கப்பட்டு, மறுபடி கான்ஸ்டபின் வருகை. துர்கா என்ற பெண்ணைப் பற்றி விசாரிக்கிறார்.

''ஐயோ! அவளுக்கு ஒண்ணுமில்லையே! என் பொண்ணுதான் அவ. நேத்தியிலிருந்து அவளைக் காணோம். தேடிக்கிட்டிருக்கோம்'' என்று அப்பா பதற, அவரை சமாதானப்படுத்திவிட்டு, கான்ஸ்டபிளிடம் சோகமான குரலில் மேலும் விசாரிக்கிறார் பானுப்ரியா.

ஒத்திகை முடிந்து, காட்சியும் ஓ.கே. ஆனபின், பானுப்ரியாவுக்கு ஹலோ சொன்னோம். பக்கத்திலேயே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு

பய்த்து உதறுகிறார் பானுப்ரியா!



• பானுப்ரியா



• படப்பிடிப்பில்...

உட்கார்ந்துகொண்டார் டைரக்டர் வெங்கட்.

ஏவி.எம். நிறுவனம்.. நிம்மதி உங்கள் சாய்ஸ் முதல் பாகம் எடுத்தபோது (இயக்குனர் - எஸ்.பி. முத்துராமன்) ரைட்டராக ஏவி.எம். காம்பவுண்டுக்குள் நுழைந்தவர் வெங்கட்.

மௌலி, விசு ஆகியோருடன் தமிழ் நாடக மேடையை ஒரு காலத்தில் கலக்கிக் கொண்டிருந்தவர் ஐம்பது நாடகங்கள் எழுதியிருக்கிறார். சினிமாவில் நுழைந்து எட்டுப் படங்கள் இயக்கியிருக்கிறார். இப்போது சின்னத் திரையின் முன்னணி இயக்குனர்களுள் ஒருவர்!



• வெங்கட

'வாழ்க்கை' – இது ஏவி.எம். தயாரித்துக் கொண்டிருக்கும் மெகா டீ.வி தொடர். மே மாதம் முதல் சன் டீ.வி.யில் (இப்போது 'குலவிளக்கு' ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் நேரத்தில்) ஒளிபரப்பாகவுள்ளது. பானுப்ரியாதான் பிரதான பாத்திரத்தில் நடிக்கிறார். படப்பிடிப்பு வெகு சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

"நூறு படங்களுக்கு மேல் நடித்துவிட்டு, இப்போது டீ.வி. சீரியலில் நடிப்பது மனதுக்கு சங்கடமாக இல்லையா?" என்று கேள்வியைப் போட்டதுதான் தாமதம். அகல விரிந்த பானுப்ரியாவின் கண்கள் முதலில் பேசின. அதன்பின் படபட வென்று அவர் பேசினார்.

"நான் முதன்முதலில் சக்தி தொடரில் நடிக்க வாய்ப்பு வந்தபோது, டீ.வி என்றால், ஒரு மாற்றுக் குறைவு என்றுதான் நினைத்தேன். ஆனால் என் எண்ணம் தவறு என்று சீக்கிரமே புரிந்து போனது. நூறு படங்களில் எனக்குக் கிடைக்காத பேரும், புகழும் அங்கீகாரமும் சக்தி தொடர் மூலம் எனக்குக் கிடைத்தது. என் திருமணம் காரணமாக, அமெரிக்காவுக்குப் போக வேண்டி இருந்தாலும், என் சம்பந்தப்பட்ட காட்சிகளை முடித்துக் கொடுத்து விட்டுத்தான் போனேன். நான் போன பின், இங்கே சீரியலில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டுவிட்டது. கதையில் சில மாற்றங்கள் காரணமாக மேலும் கால்ஷீட் தேவை என்றார்கள். என்னால் உடனடியாக வர முடியாத சூழ்நிலை. அப்புறம் சுகன்யா கேரக்டர் அறிமுகமானது தனிக்கதை. அதைப் பற்றி விவரமாகக் கூற விரும்பவில்லை! மொத்தத்தில் 'சக்தி' மூலம்தான் எனக்கு ஒரு பிரேக் கிடைத்தது.

"டீ.வி. சீரியலில் நடித்துக் கொண்டே நாலு படங்களிலும் நடித்தேன்! இன்னும் எத்தனை நாளைக்கு மிடி, டாப்ஸ், ஜீன்ஸ் மாட்டிக் கொண்டு டூயட் பாடிட்டிருக்க முடியும்? ஆகவே, எனக்கு ஏற்ற மீடியமாக இப்போது டீ.வி இருக்கிறது."

"வைஜயந்தி மாலாவை வைத்து ஏவி.எம். எடுத்த படம் வாழ்க்கை. அதே பெயரில் இந்த டீ.வி சீரியல் எடுக்கப்படுகிறது. கதை என்ன?"

"குடும்ப சென்டிமென்ட் கதைதான்! சிவசங்கரியின் மூன்று நாவல்களை மிக்ஸ் பண்ணி, பிரமாதமாக ஒரு கதை உருவாகியுள்ளது. எதையும் வெளிப்படையாகப் பேசி விடுகிற நல்ல பெண் கேரக்டர். அதுதான் பானுப்ரியாவுக்கு. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற குணம் என்றாலும், அடுத்தவர் மனம் நோகாமல், மென்மையாக, பாசிடிவ் ஆக கட்டிக் காட்டுவதுதான், இந்த கேரக்டரின் ஸ்பெஷாலிடி! அற்புதமான நடிப்புக்கு ஸ்கோப் உள்ள ரோல். பிய்த்து உதறிக் கொண்டிருக்கிறார் பானுப்ரியா" என்று வெங்கட் சொல்கிறபோது பானுப்ரியாவின் பெரிய கண்களில் வெட்கம், பெருமை, நன்றி உணர்வு!

"ஸ்டேட் பாங்கில் பார்த்த வேலையை உதறி விட்டு, சினிமா, சின்னத் திரைக்கு வந்தீர்களே! வருத்தமுண்டா வெங்கட்?"

"ஸ்டேட் பாங்க் முன்னை விட இப்போது அமோகமாக வளர்ந்திருக்கிறது. நானும் அப்படியே! இரண்டு தரப்புக்கும் வருத்தமில்லை!"

ஸ்கிரிப்ட்: **கௌதம் ராம்**
கேமரா: **வெங்கடேஷ்**



"இன்னும் ஆறு மாசத்துக்கு புடைவை வாங்க மாட்டேன்னு நேத்திக்குத்தானே சொன்னே...?"

"இது ஒரு வருஷத் தவணையாச்சே!"

"ஆறு மாசம் முந்தி இதே கலர்ல இதே டிசைன்ல புடைவை வாங்கினே!"

"நல்லா பாருங்க, வித்தியாசமிருக்கு...!"

"என்ன வித்தியாசம்?"

"அதைவிட இது நூத்திப் பத்து ரூபா விலை ஜாஸ்தி!"

"கடையில மூவாயிரம் புடைவை பார்த்திருக்கியே, ஒண்ணுகூட பிடிக்கலியா...?"

"மூவாயிரமும் பிடிச்சிருக்கு, அதான் பிராப்ளம்."

"இந்த ஆறு புடைவையையும் வெட்டி அம்முக்கு சுடிதார் தைச்சு..."

"ஏதேது! உனக்கெப்படி மனசு வந்தது...?"

"தைச்சுட்டு, நான் பத்து புதுப் புடைவை வாங்கிக்கப் போறேன்."

"இப்படி நீ புடைவை வாங்கினா நான் ஓடித்தான் போகணும்."

"கொஞ்சம் இருங்க, ஸாரி சேஞ்ச் பண்ணிட்டு வந்து அனுப்பி வைக்கிறேன்."

"கல்கத்தாலேருந்து அரை டஜன் பெங்கால் காட்டன் ஸாரி வாங்கிட்டு வாங்க..."

"இங்கே வியாபாரம் பண்ணப் போறியா?"


"ஆமாம்! பிளாஸ்டிக் வாளிக்காரன்கிட்டே..."

மலர்



ஸ்ரீ சாஸ்தா வீரப்பன் துணை

நூதன கிருஹப்பிரவேச பத்திரிகை



மகா... ள....ள....ஸ்ரீ.............. அவர்களுக்கு

ஸ்ரீ நவசக்தி விநாயகர், ஸ்ரீபூர்ணா புஷ்கலாம்பா சமேத ஸ்ரீ தர்மசாஸ்தா ஸ்ரீ வீரப்பன் ஸ்ரீ பூமி நீளா சமேத ஸ்ரீ ரெங்கநாத ஸ்வாமி, ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர், ஸ்ரீ மகா காளியம்மன், ஸ்ரீ பிடாரியார் அம்மன் ஆகிய தெய்வங்களின் பரிபூர்ண அனுக்கிரகத்துடனும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆசிர்வாதங்களுடனும் பெரியோர்களுடைய ஸ்வஸ்தி வசனங்களுடனும் நிச்சயிக்கப்பட்டு நிகழும் விக்ரம வருஷம், சித்திரை மாதம் 11-ம் தேதி (23.4.2000) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண பஞ்சமி திதி, மூலா நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை உதயாதி நாழிகை 9.23க்கு மேல் நாழிகை 10.00க்குள் (9.45 a.m to 10.00 a.m.) மிதுன லக்னத்தில்

மன்னார்குடி தாலுகா, ரெங்கநாதபுரத்தில் கட்டப்பட்டிருக்கும்

நூதன ஸ்ரீ சாஸ்தா வீரப்பன் மணி மண்டப விருந்தினர் விடுதிக்கு

வாஸ்து சாந்தி, கிருஹப் பிரவேசம் ஆகியன நடக்க இருக்கிறபடியால், தாங்கள் பந்து மித்ர ஜனங்களுடன் வந்து கலந்துகொண்டு சிறப்பித்து எங்களையும் கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

ரெங்கநாதபுரம் ஆதிச்சபுரம் போஸ்ட் இப்படிக்கு
மன்னார்குடி தாலுக்கா 614717 (19.3.2000) **ஸ்ரீ சாஸ்தா வீரப்பன் சேவா சங்கம்** நிர்வாகக்குழு

மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகள் மடம் ஆறாவது பீடாதிபதி ஸ்ரீகுரு கோதண்டராம ஸ்வாமிகள் அவர்களுடைய சீடர்களால் 23.4.2000 மாலை 7.30 மணியிலிருந்து திவ்யநாம சங்கீர்த்தனம் மணி மண்டபத்தில் நடைபெறும்.

மன்னார்குடியிலிருந்து 12 கி.மீ தொலைவிலும், மன்னார்குடி - தேவதானம் மற்றும் தட்டாங்கோயில் - கோட்டூர் பேருந்து மார்க்கங்களுக்கு இடையிலும் ரெங்கநாதபுரம் கிராமம் இருக்கிறது.

Those desirous of contributing for the above said expenses may send their remittances by Cheque/DD payable at Chennai in the name of Sri Sastha Veerappan Seva Sangham, Ranganathapuram to Sri A. Ramaswamy.

Old No.6, New No 7, Second Link Street, Karpagam Gardens, Adyar, Chennai 600 020 Phone No. 4900738



• 'சலாம் பாம்பே' படத்தில் சஃபிக் சையது.

சலாம் சினிமா!

அநாதை இல்லத்திலிருந்து சென்று 'சலாம் பாம்பே' படத்தில் நடித்த 'சஃபிக் சையது' என்ற சிறுவனின் நிலைமை இன்றைக்கு என்ன தெரியுமா?

பத்தாண்டுகளுக்கு முன்பு மீரா நாயர் 'சலாம் பாம்பே' என்ற திரைப்படத்தை எடுத்தார். அதில் நடிப்பதற்காக துடிப்பான சிறுவனொருவனைத் தேடியபோது கிடைத்தவர்தான் சஃபிக் சையது. பெங்களூரிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட சையது, மும்பையில் சர்ச் கேட் குடிசைப் பகுதியில் வசிக்கும் தெருவோரச் சிறுவனாக நடித்ததோடு உலகம் முழுவதும் பாராட்டுகளைப் பெற்ற அந்தப் படத்தின் மூலம் அந்த ஆண்டுக்கான சிறந்த குழந்தை நட்சத்திரம் என்ற விருதையும் தேசிய அளவில் பெற்றான். படம் ஏற்படுத்திய பரபரப்பினால் தெருவோரச் சிறுவர்கள் நலவாழ்வுக்காக ஓர் அறக்கட்டளை கூட அமைக்கப்பட்டது. தொடர்ந்து கவுதம் போஸ் தயாரித்த 'பதங்' என்ற படத்தில் நடிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. மேலும் படங்கள் வருமென்று எதிர்பார்த்த சையதுக்கு கிடைத்ததென்னவோ ஏமாற்றம்தான். பலவிதமான ஆசைக் கனவுகளை வளர்த்துக் கொண்டவனின் வாழ்க்கை திசைமாறத் தொடங்கியது. கல்கத்தா விழாவில் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்காக வழங்கப்பட்ட பாராட்டிதழையும் தொலைத்து விட்டான். பெங்களூருக்கே திரும்ப வந்தான்.

ஆட்டோ ஓட்டியாவது பிழைப்பை நடத்தலாமென்று கருதியவரை மீண்டும் விதி துரத்தியது. கனகபுரா சாலையில் எதிர்பாராதவிதமாக குறுக்கே வந்த பெண்மணியொருவர் இவருடைய ஆட்டோவில் மோதி அடிபட்டு இறந்து போக, சையது கைது செய்யப்பட்டார். ஆட்டோவும் பறிமுதல் செய்யப்பட்டது. ஓட்டிக் கொண்டிருந்த ஆட்டோவும் சொந்தமல்ல. வாடகை வண்டி. அந்த வண்டியை மீட்க உரிமையாளர் யாரும் வராததால் இவரை ஜாமீனில் எடுக்கவும் முடியவில்லை. ஏற்கெனவே அந்த ஆட்டோ இரண்டு கை மாறியிருந்த போதிலும் முறைப்படி பதிவு செய்யப்படாததால் ஆட்டோவை விடுவிக்க போலீஸ் மறுத்துவிட்டது. இருந்தாலும் அப்போதைய உரிமையாளர் இவருடைய வீட்டிற்குச் சென்று ஆட்டோவை மீட்டுத்தரும்படி குடும்பத்தினரை மிரட்டினார். மேலும் சையதிடம் இருந்தது டூவீலர் லைசன்ஸ் மட்டுமே. ஆட்டோ ஓட்டுவதற்கான லைசன்ஸும் இல்லை. வழக்கு மேலும் சிக்கல் ஆயிற்று. ஏறக்குறைய ஐந்து மாதங்களாக சிறைக்குள்ளேயே இருந்த சையது ஜாமீனில் வெளியே வந்திருந்த போதிலும் இன்னும் அவர் மீதான வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.



• இன்றைய சஃபிக் சையது

"இனி சினிமா ஆசையும் வேண்டாம். மறந்தும் கூட ஆட்டோவையும் ஓட்ட மாட்டேன்" என்று கூறும் சையதுக்கு இப்போது 25 வயதாகிறது. திருமணமாகி இரண்டு வயதில் ஓர் ஆண் குழந்தையும் இருக்கிறது.

"எவ்வளவு சீக்கிரம் புகழ் கிடைத்ததோ அதற்கு மேலேயே துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்று விதி இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிக் கண் கலங்குகிறார் சையதின் தாயார்!

— மகேந்திரன்

திருச்சியிலிருந்து 10 கி. மீட்டர் தொலைவிலுள்ள வயலூருக்குச் சென்று அருணகிரி நாதரைப் பதினைந்தாம் நூற்றாண்டிலும், கிருபானந்த வாரியாரை இருபதாம் நூற்றாண்டிலும் ஆட்கொண்ட முருகப் பெருமானைத் தரிசிக்கிறோம்.


வயலூரில் உள்ள கோவில் தனி முருகன் கோவில் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். அங்கு சென்ற பிறகுதான் தன் தாய் தந்தையரை தனயனான குமரன் தன் மனைவியருடன் பூஜித்த தலம் குமார வயலூர் என்பதை அறிந்தேன்.

குமரன் தம்பதியாகப் பூஜித்த ஈசனுடைய திருநாமம் அக்னீச்வரர். இவருக்குக் குமார பூஜிதர் என்றும், ஆதிநாதர் என்றும், மறப்பிலி நாதர் என்றும் பல நாமங்கள். அடியார்களை மறக்கவே மாட்டாராம். அதனால் மறப்பிலி நாதர்! கல்வெட்டில் பொறித்த பெயர் இது.

அம்பாளின் பெயர் ஆதி நாயகி, பூர்வஸ்திதி நாயகி, குமார பூஜித நாயகி என்றெல்லாம் தல வரலாற்றில் காணப்படுகிறது. அகிலத்தைப் படைப்பதற்கு முன்னாலேயே இருந்த நாயகி ஆதிபராத்பரி, ஆதிசக்தி.

மாங்கனியை அண்ணனுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று கோபித்துக் கொண்டு ஆண்டி வேடம் பூண்டு பழனி மலையில் போய் நின்றாரல்லவா முருகன்? இப்போது மனைவியருடன் பெற்றோருக்குப் பூஜை செய்துவிட்டார்! சிவபெருமானின் குடும்பமும் நம்முடைய குடும்பம் போலத்தான் இருக்கிறது என்பதில் ஒரு ஆறுதல் ஏற்படுகிறது!





கோவில் நல்ல நிலையில் இருக்கிறது. சக்தி தீர்த்தம் கோபுர வாசலுக்கு எதிரே நீர் நிரம்பி இருக்கிறது. குமாரனால் செய்யப்பட்ட திருக்குளம். அளவற்ற வலிமை தரும் தீர்த்தம். வாசலில் உள்ள விநாயகப் பெருமானை வணங்கி கோபுர வாயில் வழியாக முன் மண்டபத்தை அடைகிறோம். இடது பக்கம் வன்னிமரம். 200 வயதாகிறதாம் இதற்கு. இப்படிப்பட்ட மரத்தைச் சுற்றி எரு போட்டுக் கொத்தி விட்டு அதைக் காப்பாற்ற வேண்டாமோ? சுற்றிலும் மேடை கட்டி வைத்திருக்கிறது! மரத்தின் மேல் பாகமும் கிளைகளும் கான்க்ரீட் மண்டபத்துக் கூரைக்கு மேலே நீட்டிக் கொண்டிருக்கின்றன. அதனால் தெரியவில்லை.

நேரே கோபுர வாயிலிருந்து அக்னீச்வரர் சந்நிதி தெரிகிறது. கன்னத்தில் போட்டுக்கொண்டே அர்த்தமண்டபத்துக்குச் சென்றால் பல அபூர்வமான உற்சவமூர்த்திகள் கவனத்தைக் கவருகிறார்கள்.


தெய்வ தரிசனம் — 24

ராஜகம்ரே

"மறப்பிலிநாதரே! நான் வந்ததை மறவாமல் நினைவு வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவரிடம் அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்து விட்டுப் பிரசாதம் வாங்கிக் கொள்கிறோம்.

தெற்கு நோக்கி நின்று சுடர்களின் ஒளியில் ஜொலிக்கிறாள் குமாரபூஜித நாயகி. மருமகள்களுடன் மகன் பூஜிக்க பெருமிதம், நிற்கும் நிலையிலேயே தெரிகிறது. அப்படி ஒரு கம்





பீரம். விஷ்ணு, இந்திரன், அக்னி, சூரியன், சந்திரன், இந்திராணி, ஸரஸ்வதி, லக்ஷ்மி எல்லாரும் இங்கே வந்து மகன் பூஜித்த பெற்றோரை வழிபட்டு நல்ல பதவிகளை அடைந்திருக்கிறார்கள்.

திருச்சுற்றில் வலம் வரும்போது தல விநாயகரைத் தரிசிக்கிறோம். இவருக்குப் பொய்யாக் கணபதி என்று ஒரு பெயர். கையில் இவர் வைத்திருப்பது விளாம் பழமாம்!

கணபதிக்கு அருகில் அருணகிரி நாதர் ஸந்நிதி இருக்கிறது. குமார வயலூர் முருகப் பெருமானுக்குப் புகழ் சேர்த்தவர் அருணகிரிநாதர். கையில் விளாம்பழம் ஏந்தி கணபதி அமர்ந்திருப்பதால்தான் "கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி" என்று அவர் பாடினாரோ என்னமோ!

அருணகிரிநாதரை வயலூருக்கு வரச் சொல்லி தரிசனம் தந்த பெருமான் இங்கே அக்னீச்வரருக்குப் பின்னால் நின்று வள்ளி தெய்வயானை சமேதராக நமக்குக் காட்சி தருகிறார்.

"விராலி – மாமலையில் நிற்ப நீகருதி
யுற்று
வாவென அழைத்தென் மனதாசை
மாசினை அறுத்து ஞானமு தளித்த
வாரமினி நித்த மறவேனே."

என்று வயலூர்த் திருப்புகழில் பாடிப் பரவுகிறார் அருணகிரிநாதர். தாழம்பூவின் மணம் நிறைந்த பொழிலாக விளங்கியிருக்கிறது வயலூர். இந்த ஊரில் பதினெட்டுப் பாடல்கள் பாடியிருக்கிறாராம் அருணகிரியார். இன்னும் பல தலங்களில் அருணகிரிநாதர் பாடியபோதும் "வயலூரா" என்று முருகனை மறக்காமல் அழைத்துப் பாடியிருக்கிறார்.

உற்சவ மூர்த்தியான முத்துக் குமாரசாமி இங்கே மயில் மீது வீற்றிருக்கிறார்.

சுப்ரமண்யர் சந்நிதியில் ஆறு சுடர் விளக்குகள் அமைதியாக ஒளிபரப்புகின்றன.

நாயகன்!

■ ஆனந்தி

ஆறு சுடர்கள் என்பது கார்த்திகைப் பெண்களையும், ஆறுமுகங்களையும் அறுகோண சக்கரத்தையும் நினைவூட்டுகின்றன. ஆறு விளக்குகள் எரிவது தற்செயலோ அல்லது முகத்துக்கொன்று என்று யோசித்துத்தான் ஏற்றியிருக்கிறார்களோ? சுப்ரமண்ய சுவாமியின் திருக்கோலத்தை அவருடைய சீதள வாரிஜ பாதத்தையும், வேதமந்த்ர சொரூபத்தையும், நாகபந்த மயூரத்தையும், வல்லீ தேவஸேனா ரமணனாகக் காட்சி தரும் ஆனந்த வடிவத்தையும் அந்த மென்மையான சுடர்களின் ஒளியில் கண்டு வியக்கிறோம். புத்தகங்களில் இந்த முருகனுக்குத் தனிப்பெயர் காணப்படவில்லை. கோவில் அர்ச்சகர், "சிங்கார வேலன்" என்று சொன்னார். எல்லாக் கோவில்களிலும் இவர் சிங்கார வேலன்தான்; அதில் என்ன சந்தேகம்? கப மருள் சுந்தர வடிவம்!


திக்கது மதிக்கவரும் குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியும் முற்றிய பனிரு தோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே!

என்றும்,

வேறு ஒரு ஊர்த் திருப்புகழில்
"வயலி நகரியில் அருள்பெற ஒருவிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வசை மலரடி கனவிலும் நனவிலும்
மறவேனே" என்றும் பாடியிருக்கிறார்.

அருணகிரிநாதர் மறவேனே மறவேனே என்று திரும்பத் திரும்பப் பாடுகிறார். அவருடைய மனம் எவ்வளவு நெகிழ்ந்திருந்தது என்பது இந்தத் திருப்புகழைப் படிக்கும்போது தெரிகிறது. வெறும் தாளமும் சந்தமும் சொற்களுமாக எனக்குப் பாடமாகியிருந்த திருப்புகழ் இன்று உணர்ச்சிமயமாகப் புரிந்தது.

வாரியார் சுவாமிகள் எழுதியுள்ள நூலில் அருணையில் மயில்வாகனனை அருணகிரிநாதர் தரிசித்ததாகவும் முருகப் பெருமான் "முத்தைத் தரு" என்று அடி எடுத்துக் கொடுத்ததாகவும் கூறுகிறார். பாடி விட்டு நிஷ்டையில் ஆழ்ந்த அருணகிரியை, "வயலூருக்கு வா" என்று அழைத்தாராம். வயலூரில்தான அருணகிரிநாதருக்குக் கந்தன் அருளும், திருப்புகழ் பாடச் சந்தமும் கிடைத்தது. இருபானந்த வாரியார் சுவாமிகள் நண்பர்களுடன் தலயாத்திரை செய்து கொண்டு வயலூருக்கு வந்து சேர்ந்தாராம். அன்று வெள்ளி அங்கி சாத்தி அலங்காரம் செய்திருந்தார்களாம். குருக்களின் அர்ச்சனைத் தட்டில் எட்டு அணா காசு வைத்து விட்டுத் திருப்புகழ் பாராயணம் செய்தாராம். (1930களில் நடந்த சம்பவம் இது.)



அன்றிரவு வயலூர்க் கோவில் அறங்காவலர் ராதாகிருஷ்ணன் செட்டியாருடைய கனவில் முருகப்பெருமான் ருத்ராக்ஷ மாலையும் காவி உடையுமாக வந்து, "என் பக்தனிடமிருந்து எட்டணா வாங்கிக் கொண்டாயே. வயலூர் கோபுரம் கட்டி முடியுமா?" என்று அதட்டிக் கேட்டாராம்.

பதறிப் போன செட்டியார் காலையில் மாட்டு வண்டியில் வயலூர் போனார். "நேற்று யார் வந்தார்கள்?" என்று விசாரித்தார். "திருப்புகழ் சபையிலிருந்து வந்தார்கள்" என்று சொன்னார்கள். கடைசியில் அர்ச்சனை செய்த இளைஞரிடம், "யாராவது எட்டணா கொடுத்தார்களா?" என்று கேட்க, "ஆமாம்" என்றார் அர்ச்சகர். செட்டியார் அந்த எட்டணாவை வாங்கி வாரியாருக்கு மணியார்டர் அனுப்பி விட்டார்.

"முருகன் உத்தரவுப்படி அனுப்பியிருக்கிறேன்" என்ற மணியார்டர் கூப்பனைக் கண்டு திகைத்தாராம் வாரியார்.

பிறகு, மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் வயலூருக்குச் சென்றார் வாரியார். திருச்சியில் சொற்பொழிவு முடிந்து போயிருக்கிறார். அறங்காவலரான ராதாகிருஷ்ணன் செட்டியார் வாரியாரை வரவேற்று உபசரித்து கனவில் முருகப் பெருமான் வந்ததையும், "ராஜகோபுரம் கட்டுவாயா" என்று கேட்டதையும் கூறி, "உங்கள் பெயர், விலாசம் கோவில் விசிட்டர் புத்தகத்தில் இருந்ததால் எட்டு அணாவை மணியார்டர் செய்தேன். நீங்கள்தான் இந்தக் கோவிலுக்கு ராஜ கோபுரத் திருப்பணி செய்ய வேண்டும்" என்றாராம்.

"நான் எப்படிச் செய்ய முடியும்?" என்றே பதில் சொல்லியிருக்கிறார் வாரியார். மறுபடியும் திருச்சி சென்றபோது மூன்று நண்பர்கள் வந்து வற்புறுத்தினார்கள். வாரியார் சுவாமிகள் ஒப்புக்கொண்டு விட்டார்! பந்தக்கால் நட்ட அன்று துரைசாமி நாடார் என்பவர் வந்திருந்தாராம். அவரை முன்பின் தெரியாது வாரியாருக்கு. ஆனாலும், "நீங்கள்தான் சுண்ணாம்பு

முழுவதுக்கும் பொறுப்பு'' என்று சொன்னாராம். அவர் மறு பேச்சில்லாமல் ஒப்புக்கொண்டாராம்!

பல இடங்களில் மைக் உதவி இல்லாமல் மூன்று நாட்கள், பத்து நாட்கள் என்று விரிவுரைகள் நிகழ்த்தி நிகழ்ச்சிக்கு வந்தவர்களிடம் பணம் வசூலித்து 21 மாதங்களில் ராஜகோபுரத் திருப்பணியைச் செய்து சாதனை செய்தார் திருமுருகக் கிருபானந்த வாரியார்.

அந்தக் காலத்தில் வயலூர் எங்கிருக்கிறதென்றே யாருக்கும் தெரியாது. அப்படிப்பட்ட கோவிலுக்குத் திருப்பணிகள் செய்து சிறப்பாக மகாகும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள் (1936). ஒரு அன்பர் சிறிய கோபுரம் கட்டிக் கொடுத்தார். திருச்சி அமிர்தம்மாள் தம் உபயமாக அருணகிரி நாதருடைய சிலையைச் செய்து கொடுத்தார். பொய்யாக் கணபதிக்கு அருகில் அருணகிரி நாதரையும் பிரதிஷ்டை செய்தார்கள். எட்டு அணாக் காக எவ்வளவு பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது!

அதன் பிறகு, குமார வயலூரின் மகிமையும் பெருமையும் முருகபக்தர்களுக்கெல்லாம் தெரியலாயிற்று.

இரண்டு தடவை வாரியார் வயலூரில் திருக்குட நந்நீராட்டு விழா நடத்தியிருக்கிறார்கள்.

இப்போது வைகாசி பிரும்மோத்ஸவம் சிறப்பாக நடந்து வருகிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம், கந்தசஷ்டி முதலிய விழாக்களுக்கு அடியார்கள் வந்து குவிகிறார்கள்.

கல்வெட்டுக்கள் பல இருக்கின்றன. சிறு வயதில் தமிழ்ப்பாடப் புத்தகத்தில் படித்த 'கல்வெட்டு' இங்கே உள்ள கல்வெட்டு என்று தெரிந்து அதிசயப்பட்டேன்.

''திருமகள் போல பெருநிலச் செல்வி மையூண்டமை மனக்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி, வேங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் தடிகைபாடியும் குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்'' - இது ராஜராஜசோழன் மெய்க்கீர்த்தி.

ராஜராஜனுடைய 24 ஆவது ஆண்டில் இந்தக் கோவிலில் திருப்பதிகம் பாடுவோருக்கு ஊரார் நிலம் கொடுத்தது என்பது செய்தி.

வயலூர் மகாதேவர்க்கு இரவும் பகலும் ஒரு நந்தா விளக்கெரிக்கவும், அக்னீச்வரமுடை மகாதேவர்க்கு விளக்கெரிக்கவும் நிலம் தானமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு கல்வெட்டில் இருக்கும் ஆதாரத்தின்படி, ஏழு நாழி நெய் கொடுக்க நிலம் தந்திருக்கிறார் ஒருவர். ''இவ் விளக்கு ரக்ஷித்தார் பாத தூளி என் தலை மேலன'' என்று உருக்கமாகப் பரமபக்தியுடன் சொல்லியிருக்கிறார்.

அருணகிரிநாதர் வயலூரில் பல காலம் தங்கி வழிபட்டுக் கொண்டிருந்தபோது, ''பெரிய திருப்புகழ் பாடு'' என்று முருகன் கட்டளையிட்டாராம்.

ஏழ்தலம்புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜகெம்பீர நாடாளு நாயக வயலூரா...

என்று சோழ மண்டல மன்னனாகவே முருகனைப் பாடினார் அந்த பக்தர்.

இங்கே கந்தசஷ்டி பதினோரு நாட்கள் நடக்கும். அருணகிரியாருக்கும் நான்கு நாட்கள் விழா உண்டு.

ஏதலும் பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர் பாத சேவையும் மறவாத

வயலூரில் அருணகிரிநாதருக்கு விழா எடுப்பது எவ்வளவு பொருத்தம்! ●

சேவகன் அல்ல!

ராம நாமம் கோடானு கோடி மனிதர்களின் இதயத்துப் பொக்கிஷமாக காலங்காலமாக இருந்து வருகிறது. ரா,ம என்ற எழுத்துக்கள் முறையே அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷர மந்திரங்களில் இடம் பெறும் ஜீவ அக்ஷரங்கள். அவ்வெழுத்துக்களை அம் மந்திரங்களிலிருந்து நீக்கினால் அனர்த்தமாக மாறிவிடும்.

ராம நாமத்தைச் சொல்பவனுக்குள்ளே அற்புதமான மாற்றங்கள் நிகழ்கின்றன. நரம்பு மண்டலம் சீர்ப்பட்டு லயத்துடன் இசைவுடன் இயங்குகிறது. அதனால் மனம் அமைதிப்பட்டு பரம்பொருளுடன் ஒன்றுகிறது.

ஆனால் ராம நாமத்தை மோக்ஷ மந்திரமாக மட்டுமே கருதி உச்சரிக்க வேண்டும். பளபளப்பான, பகட்டான உலக இன்பங்களைக் கொண்டு சேர்க்கும் சேவகனாக ராம நாமத்தை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம்.

(12.04.2000 ஸ்ரீ ராம நவமி)

— சுவாமி சிவானந்தா





காதுல பூ சுத்தறவங்களைப் பார்த்திருப்பீங்க. (நாமே கூட சுத்தியிருப்போம்.) கையில பூ? இங்க பாருங்க. கலகல ஸ்பெஷலுக்காக நாம அடிச்ச கூத்து இது. படு டென்ஷனோட கவுண்ட்டர்கள்ல காசு வாங்கிப் போடற ஜோலி பார்க்கற சிலரை வசம்மா மடக்கினோம்.

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன். ரயில் டிக்கெட்டுகளுக்கான முன்பதிவு அலுவலகம், முதல் மூன்று தளங்களில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. முதல் தளத்தில் நெருக்கித் தள்ளிக் கொண்டிருந்த, ஐம்பத்தியிரண்டாவது கவுண்டர் க்யூவில் இடையில் புகுந்து பார்க்கலாமே என முயற்சித்தபோது... எல்லா பயணிகளும் ஒரே குரலில், "ஹோ...ய்" என்று வீர ஒலி எழுப்பியதில், நடுநடுங்கிப் போனோம். வேறுவழியில்லாமல், முறைப்படி க்யூவில் நிற்க வேண்டியிருந்தது.

க்யூ மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. பேண்ட் பாக்கெட்டுக்குள் ஒளித்து வைத்திருந்த ஒற்றை ரோஜா எங்கே வாடிப் போய்விடுமோ என்ற கவலை ஒருபுறமும், மத்திய அரசின் ரயில்வே கவுண்டரில் 'இது மாதிரி' பரிசோதனை முயற்சிகளில் இறங்கினால், கூடியிருக்கும் பயணிகள் 'தர்மமாக' எதையேனும் கொடுத்து அனுப்பி விட்டால் என்ன செய்வது என்ற உதறல் ஒருபுறமும் வாட்டியெடுக்க, வியர்வையை ஒத்தி முடித்து விட்டு கவுண்டரைப் பார்த்தால் நமக்கு முன்னால் ஒருவர் மட்டும்!

'நெக்ஸ்ட்' என்ற அவசரக் குரலில் திடுக்கிட்டு, படாரென்று ரோஜாப் பூவை நீட்டினோம்.

கவுண்டருக்கு உள்ளே இருந்த ஊழியர் ஒருகணம் திகைத்து, பூவையும் நம் முகத்தையும் பயத்துடன் பார்க்க, பின் ஏதோ ஒரு தைரியத்தில் பூவைக் கைநீட்டி வாங்கினார்...

பதினைந்து வினாடி மாபெரும் மௌனம். நாம் ஏதாவது பேசுவோம் என்று அவரும் அவர் ஏதாவது பேசுவார் என்று நாமும் காத்திருக்க, 'யார் நீங்க...' என்று படபடப்பாகக் கேட்டு முந்திக் கொண்ட

வரின் பெயர் சாக்கோ. முன்பதிவு அலுவலர்.

"இதுக்கு முன்னாடி என் நண்பி ஒருத்தங்க என் பிறந்த நாளுக்கு கவுண்ட்டர் வழியா ரோஸ் குடுத்துருக்காங்க... அவங்க தெரிஞ்சவங்களா இருந்ததால சர்பிரைஸ் இல்லை... ஆனா முன்பின் தெரியாத ஒருத்தர் பூவை நீட்டினதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டுடுச்சி! குறிப்பா நீங்க முழிச்ச முழி உங்களுக்கு மனநிலை சரியில்லையோன்னு (ஹூம்! முழிராசி!) நினைக்க வெச்சுடுச்சி! ஸாரி! எனிவே... இயந்திரமா வேலை பார்க்கிறபோது ஒரு ரோஸ் கொடுத்ததுக்கு நன்றி" என்றவரிடம் கைகுலுக்கிவிட்டு, ரோஜாவைத் தரமுடியுமா என்று அசடுவழிந்ததும், "பெஸ்ட். விஷஸ்(!)" என்று திருப்பித் தந்தார்.

அடுத்தது, தந்தி அலுவலகம். இருந்த மூன்று கவுண்ட்டர்களிலும் ஒருசிலர் மட்டுமே நின்று கொண்டிருந்தனர். நாம் தேர்வு செய்தது மூன்றாவது கவுண்ட்டர். நமக்கு முன்பு தந்தி கொடுத்த நபரிடம் உள்ளே இருந்த ஊழியர், "பத்து ரூபா ஐம்பது பைசா சில்லரையாகக் கொடுங்க" என்றார்.

தந்தி கொடுத்தவர் சென்று விட, நம்மைப் பார்த்து 'ஃபார்ம் குடுங்க' என்றார்.

பூவை கவுண்ட்டர் வழியாக நீட்டியதும் ஒருகணம் பயந்து நடுங்கி, பூவை வாங்கிய அடுத்தகணம்... அதைத் தூரமாகத் தூக்கி எறிந்து, துள்ளிக் குதித்து எழுந்து விட்டார்! ரொம்பவும் பதற்றமானார்!

அதற்குள் சக ஊழியர்கள் கூடி விட..... இதற்கு மேல் மறைப்பது நல்லதல்ல என்று விஷயத்தை உடைத்தோம்.

ஒட்டுமொத்த ஊழியர்களும் 'ஹஹா...' என்று சிரித்து வைத்தார்கள்! பூவைத்



கையில பூ!



தூக்கியடித்த முருகேசன், செக்ஷன் சூப்பர வைசர்...

"எனக்கு வெடிகுண்டுதான் சார் முதல்லே ஞாபகம் வந்தது! அதனாலதான் தூக்கி எறிஞ்சேன். ஏற்கெனவே இரண்டு மாசத்துக்கு முன்னாடி ஒரு ஆள் தந்தி கொடுக்க வந்தான். மணலிக்குப் பக்கத்துல ஒரு சின்ன ஊர். அங்கே தந்தி லேட்டாதான் போகும். மணலிலேர்ந்து போகணும், டெத்

• லட்சுமி நரசிம்மன்

மெசேஜ். இரவு பதினோரு மணிக்கு வந்து தந்தி கொடுத்தான். நாளைக்குக் காலையில பத்து மணிக்கு மேலத்தான் போய்ச் சேரும்; சம்மதமான்னு கேட்டேன். உடனே அவனுக்கு வந்துதே கோபம்! டக்குன்னு சின்ன பேனா கத்தியை எடுத்து கவுண்ட்டர் வழியா உள்ளே நீட்டிட்டான்! 'எங்கிட்டியே ஏமாத்துறியான்னு' ஒரே கலாட்டா... போலீசைக் கூப்பிடுவேன்னு சொன்னேன். எங்கே கூப்பிடு பார்ப்போம்னு தகராறு பண்ணத் தொடங்கிட்டான். போலீசைக் கூப்பிட்ட பிறகுதான் அங்கேயிருந்து நகர்ந்தான். இப்படிப் பல அனுபவம்! இப்போ இந்த அனுபவம் ரொம்பவே பயமுறுத்திடுச்சி" என்று படபடத்தவர், போட்டோவுக்காக நாம் மீண்டும் தோழைமையோடு பூ கொடுக்க, சிரித்தபடி வாங்கிக் கொண்டார்.

அடுத்த இடம், அசோக் நகர் இந்தியன் வங்கி. வங்கியின் வேலை நேரம் முடிவதற்குள் உடனடிப் பணப்பட்டுவாடா நடக்கும் டெல்லர் கவுண்ட்டரில் பூவை நீட்டுவது என்ற முடிவுடன், வங்கியின் உள்ளே நுழைந்த நமக்கு, ஒவ்வொரு கவுண்ட்டர் முன்பும் நின்ற கூட்டத்தைக் கண்டு பிரமை பிடித்தது!

டெல்லர் கவுண்ட்டரில் இருந்த 'டென்ஷனை'க் கண்டபிறகு அந்தப் பக்கம் போனால் விபரீதம் நடக்கும் என உணர்ந்து, கூட்டம் இல்லாத சிறு சேமிப்புக் கவுண்ட்டருக்குப் போனோம். உள்ளேயிருந்த ஊழியர் 'சொல்லுங்க சார்' என்றார்.

மறைத்து வைத்திருந்த ரோஜாவை தடாலடியாக அவரிடம் நீட்டினோம். மறுப்பேதும் சொல்லாமல் வாங்கிக் கொண்ட அவர், அரை நிமிடம் சிரித்து முடித்துவிட்டு, 'பத்திரிகையா?' என்றார்.

நமக்குத் தூக்கிவாரிப் போட்டது. பலே கில்லாடியாக இருப்பார் போலிருக்கிறதே என ஆச்சர்யப்பட்டு முடிப்பதற்குள் அவரே பேசினார்.

"இப்போ எனக்குப் பிறந்தநாளோ, திருமண நாளோ எதுவும் இல்லியே, அப்படியே வாழ்த்து சொல்றவங்க கவுண்ட்டர் வழியா சொல்வாங்களா? அதான் நீங்க பத்திரிகையாத்தான் இருக்கணும்னு முடிவு பண்ணினேன். நான் நினைச்சது சரியாயிட்டுது!" என்ற திறமைசாலி, சீனியர் க்ளார்க் லட்சுமி நரசிம்மன்.

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள் : வெங்கடேஷ்

அடுத்த இதழில்...

விவேகானந்தா கல்வி நிலைய இயக்குநர்

வி. ராஜகோபாலன்

எழுதும்

ஆங்கிலமே அருகில் வா!





ஆங்கிலத்தில் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட வார்த்தைகள் உள்ளன. அப்படியென்றால் இந்த ஆறு லட்சம் வார்த்தைகளும் நமக்குத் தெரிந்தால்தான் ஆங்கிலத்தில் பேச முடியும் என்று நினைத்து விடாதீர்கள்! குறைந்தபட்சம் 1500 வார்த்தைகள் மட்டும் தெரிந்தால் போதும். நம்மால் ஆங்கிலத்தில் சகஜமாகப் பேச முடியும். ஆம்! நமது அன்றாட உரையாடலில் வெறும் 1500 வார்த்தைகள் மட்டுமே அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இந்த 1500 வார்த்தைகளில் பாதிக்கு மேற்பட்டவை ஏற்கெனவே தெரிந்த வார்த்தைகள்தான். என்ன... ஆச்சரியமாக இருக்கிறதா?

உபயோகமான 'ஃப்ரண்ட்லி' தொடர் ஆரம்பம்!


Don't miss it!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



யூரோக்ளீன் புதுமை!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka





கல்கி
இலவச இணைப்பு
கலா+கலா=கலகல
கலா+கலா=கலகல
KALKI
16.4.200


EASTERN
TURMERIC POWDER
FLAVOUR LOCK
Rs. 6.50
EASTERN
CHILLI POWDER
FLAVOUR LOCK
Rs. 6.50

நட்சத்திர நச்! (2)







"வேர்ல்ட் இஸ் நாட் எனஃப், என்ட் ஆஃப் தி டேஸ் படங்களையெல்லாம் தமிழ்லே எடுத்துட்டாங்களே..."

"ஆமா..."

"ஹே ராம் படத்தை தமிழ்லே எப்ப எடுப்பாங்க?"

– தஞ்சை தாமு



பெயர் அறிந்திருக்க மாட்டீர்கள். ஆனாலும் கோடம்பாக்கத்தை வலம்வரும் நகைச்சுவை நடிகர்கள் இவர்கள்.

அபிநய குமரகுரு:


எனக்கு சொந்த ஊர் தஞ்சாவூர் பக்கத்துல இருக்கிற கொரடாச்சேரிதான். அப்பா, மாட்டு வைத்தியர். எப்பவும், 'எருமையே எங்க போய் சுத்திட்டு வர்றே'ம்பார். நான் எருமை மாட்டு பாஷையில் 'ஒய்ங்ங்....ஒய்ங்ங்'ன்னு சவுண்ட் குடுப்பேன். சிரிச்சுகிட்டே போயிடுவார். அதெல்லாம் சுகமான காலம்.

சென்னை வந்ததும் தங்கக் கூட இடம் கிடைச்சுடுச்சி. ஆனா சாப்பாடுதான் பெரிய பிரச்னை. ஏற்கெனவே நான் ஒல்லி. இதுல பலநாள் சாப்பிடாம கண்கள், கன்னம் எல்லாம் குழிவிழுந்து ஏலியன் மாதிரி ஆயிட்டேன். அசிஸ்டெண்ட் டைரக்டரா இருந்த என் நண்பர் ஒரு வழி கண்டு பிடிச்சி என்னை அழைச்சுக்கிட்டுப் போனார். 'நம்மளை மாதிரி நிறைய சினிமாக்காரங்களுக்கு சோறு போடுறது இந்த மாதிரி கல்யாண மண்டபம்தான்'னார். நான் பெரிய டைரக்டரா ஆகி எனது முதல் படத்துல 'என்னை வாழ வைத்த சென்னை திருமண மண்டபங்களுக்கு நன்றி'ன்னு' கார்டு போடுவேன்னு சொன்னார். ஆனா எனக்கு மனசாட்சி இடம் தரலே. சென்னை வந்த தொடக்கத்துல நடிகர்கள் தேவைன்னு பேப்பர்ல வந்த நாலுவரி விளம்பரத்தை எடுத்துக்கிட்டு போனேன். விளம்பரம் கொடுத்தவர் ஒரு குடிசையில தையல் மிஷின் வெச்சி, தைச்சுகிட்டு இருந்தார். வெளியில ஒரு துருப்பிடிச்ச தகரத்துல 'சாம்ராஜ்யம்' படத்துக்கு நடிகர்கள் தேவைன்னு சுண்ணாம்பால எழுதிப் போட்டிருந்தார். அவரைப் பார்த்ததும் எனக்கு சிரிப்பு வந்துடுச்சி... எங்கிட்ட இருந்த பத்து ரூபாயில அஞ்சு ரூபாயக் கொடுத்து டீ குடின்னு சொல்லிட்டு வந்துட்டேன்... இப்போதான் சின்னச் சின்ன வேஷங்கள் கிடைக்குது. ஆனா ஜெயிக்காம விடுறதில்லே!

கொட்டாச்சி:

என்னடா பேரு இப்படி இருக்கேன்னு நினைக்காதீங்க. என் சொந்த ஊர் பொள்ளாச்சியில கொட்டானியம்மன், கொட்டாச்சின்னு சாமி இருக்கு. அதோட பேரைத்தான் எனக்கு வெச்சாங்க. எனக்கு நடிப்பு ஆசை வந்ததுக்குக் காரணம் நம்ம ஊருதான். பொள்ளாச்சிலேயும், அதச் சுத்தியும் வருஷம் முழுக்க படப்பிடிப்பு நடக்கும். வேடிக்கை பார்ப்பேன். அப்பா அம்மா இறந்துட்டாங்க. நம்மளப் பத்தி கவலைப்பட யாரும் இல்லே. இந்த நேரத்துல ஊருக்கு வர்ற சினிமாக்காரங்க, 'நீ சென்னைக்கு வந்து முயற்சி பண்ணு'ன்னு தைரியம் கொடுத்தாங்க. அப்புறம்தான் இங்கே வந்தேன். முதல்ல சாப்பாடுதான் முக்கியம்னு ஓட்டல், பெயிண்டிங், எலக்ட்ரிக்கல்ஸ், பிளம்பிங் இப்படி நிறைய வேலை பார்ப்பேன். இடையிடையே வாய்ப்பும் தேடிக்குவேன். வந்த புதுசுல தங்க இடம்

• 'இரணியனி'ல் காந்தராஜ்



கிடையாது. அதனால வாகினி ஸ்டூடியோ பின்னாடி ப்ளாட்பார்ம்ல படுத்துக் குவேன். கொசு தூங்க விடாது. அப்போ கொசு

மிமிக்ரி தெரியுமா?

எப்படியெல்லாம் விதவிதமா கத்துதுன்னு கேட்டு, அதை அப்பிடியே 'மிமிக்ரியா' செஞ்சு காட்டுவேன். அப்புறம் இங்கிலீஷ் படங்கள் நிறையப் பார்த்து, டயனோசர், வைரஸ் மாதிரி நடிச்சுக் காட்டுவேன். என்னோட நடிப்பைப் பார்த்த டைரக்டர் எழில் எனக்கு பெரிய கேரக்டர் கொடுத்துருக்கார். 'பெண்ணின் மனதைத் தொட்டு' படம் வந்துட்டா பெரிய ஆளா வந்துடுவேன்!

காந்தராஜ்:

எனக்கு சேலம்தான் சொந்த ஊர். ஊருல சுப்ரமணிங்கிற என் நண்பன் நாடகம் போட்டுக்கிட்டு இருந்தான். அப்புறம் சினிமாவுல அசிஸ்டெண்ட் டைரக்டரா ஆக சென்னைக்கு வந்துட்டான். அவன் இருக்கான்கிற தைரியத்துல நானும் வந்துட்டேன். வந்து பார்த்ததும்தான் தெரிஞ்சது, இங்க என்ன நிலைமைன்னு! ஒரு நாள் நானும் நண்பனும் காலை, மதியம் சாப்பிடலை. அந்த நேரத்துலயும் நடிப்பு தாகம் அடங்காம, ஒரு டைரக்டரைப் பார்க்கப் போனோம். ஆனா வீடு பூட்டி இருந்தது. அவர் வீட்டுக்குப் பக்கத்துல பெரிய பிள்ளையார் கோவில்.



• காந்தராஜ்



• குமார்

நிறையப் பேர் வந்து ஒரு தொட்டியில சிதறு தேங்காய் உடைச்சுட்டுப் போனாங்க. பசி தாங்கலை! முடிஞ்ச வரைக்கும் சிதறு தேங்காய் சாப்பிட்டு வயித்த நிரப்பினோம்.

அதே போல இன்னொரு முறை பசியோட அடையாறுலேர்ந்து வடபழனிக்கு பஸ்ல வந்துகிட்டு இருந்தேன். அப்போ வெள்ளை உடையில ஒரு ஐம்பது வயசு அம்மா பக்கத்துல இடமிருந்துச்சு; உட்கார்ந்துட்டேன். பேசவும் ஆரம்பிச்சுட்டேன். என் கஷ்டத்தைக் கேட்டதும் என் கூட வான்னு அழைச்சுகிட்டு போயி ஞானஸ்நானம் கொடுத்து சாப்பாடும் போட்டாங்க.. நானும் ஆண்டவருக்கு தோத்திரம்ன்னு சொல்லிட்டு, சாப்பிட்டு வந்துட்டேன்... இது மாதிரி தினசரி வாழ்க்கையே பெரிய காமெடியா இருக்கு... அதனாலதான் காமெடியா நடிக்க முடியுது. அது சரி, 'இரணியன்'ல என்னை கவனிச்சீங்க இல்லே?



• கொட்டாச்சி

— விஷுவல்தாசன்

கலா+கலா

குயின் மேரீஸ் கல்லூரி மாணவி கலாவும் அவரது (10–ம் வகுப்பு படிக்கிற) தோழி சசிகலாவும் சந்தித்து, நமக்காக ஒரு





ஸ்பெஷல் அரட்டை அரங்கம் நடத்தினார்கள். விசு இல்லாமலே கல கலப்பாக இருந்த அதிலி ருந்து ஒரு பகுதி இங்கே. (முழுசையும் வெளியிடுவ தென்றால், ஆக்ஸ்போர்டு டிக் ஷனரி அளவுக்குப் போய் விடும்!)

"ஹாய்... கலா ஏன் இவ்வளோ லேட்?"

"சாரிடி... எங்க காலேஜ்ல உலக அன்னையர் தினவிழா நடந்துச்சு; அதான்!"

"சிறப்பு விருந்தினர் நல்லா பேசினாங்களா?"

"ஓ... சூப்பரா பேசி னாங்க..."

"அவங்க பேசினதுல உனக்கு ரொம்பப் பிடிச்ச இடம் எதுன்னு சொல் லேன்...?"

"வணக்கம். இத் துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்னு சொன் னது."

"கடிக்கறியா? இந்தக் கடி தாங்குவியா பார்க்கறேன். நடிகர் நடிகைகளுக்கு இந்த வெயிலைப் பத்தி கவலையே இல்லை, எப்படிச் சொல்லு?"

"எப்படி?"

"அவங்க பின்னால்தான் ஃபேன்ஸ் எப்பவும் சுத்தி கிட்டே இருக்காங்களே!"

"அப்படிப் போடு. தண்ணியிலேர்ந்து மின் சாரம் எடுக்குறாங்களே, அது

ஏன்?"

"ப்பூ... இது தெரியாதா... அப்படி எடுக்கலேன்னா அதைக் குடிக்கும்போது ஷாக் அடிச்சுடுமே!"

"அரசியல் கட்சியெல்லாம் ஏன் அடிக்கடி பொதுக்குழு கூட்டறாங்க...?"

"கூட்டலேன்னா குப்பை சேர்ந்துடாது!"

"அய்யோ... தாங்க முடியலை..."

"சரி சரி... இப்போ போட்ட மத்திய பட்ஜெட்டைப் பத்தி என்ன நினைக்கிறே?"

"துண்டு விழுந்த பட்ஜெட்..."

"சின்ஹா பைஜாமா ஓவர் கோட்டுல்ல போட்டுருந்தார்? துண்டு எப்போ விழுந்தது?"

"மண்ணாப் போச்சு... இந்தியாவோட பணவீக்கத்தைக் குறைக்க இந்த பட்ஜெட்ல எதுவுமே உருப்படியா செய்யல...!"

"ஜண்டுபாம், அயோடெக்ஸ் செலவுன்னு கொஞ்சம் சேர்த்துக்க வேண்டியது தானே!"

"நீ ப்ளஸ் டூ முடிச்சதும் டாக்டருக்குப் படி, நாடு நோய் நொடி இல்லாம சுபிட்சமா இருக்கும்!"

"இப்போ என்னத்தை தப்பா சொல்லிட்டேன்?"

"பின்னே என்னடி... கேஸ் சிலிண்டர், பெட்ரோல், டீசல்னு முக்கியமான பொருட்களோட விலைய ஏத்திட்டாங்க. விலைவாசி ஏறினா, பஞ்சப்படி, அகவிலைப்படி போதாதுன்னு அரசு ஊழியர்கள் சம்பளத்தை உயர்த்திக் கேட்டுப் போராடுவாங்க... வேலை நிறுத்தம் பண்ணுவாங்க..."

"நிறுத்து நிறுத்து! சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கிறது ரொம்ப சுலபம் தெரியுமா?"

"என்னடி சொல்றே...?"

"சம்பளம் கொடுக்கிறபோது... ஒரு ஸ்டூல் மேல ஏறி நின்னு கொடுக்கணும்."

"நல்ல கண்டுபிடிப்பு... சிவனேன்னு அமர்தியா சென்னுக்கு அசிஸ்டெண்டா சேர்ந்துடு."

"நீ பெட்ரோல் விலை ஏறிடுச்சின்னு சொன்னேல்ல? அது சம்பந்தமா ஒரு கேள்வி."

"இல்ல இல்ல... கேள்வியை நான்தான் கேட்பேன்!"

"சரி கேளு..."

"இந்தியாவில பெட்ரோல் எங்கெங்கே கிடைக்குது?"

"எல்லா பெட்ரோல் பங்குலேயும்தான்..."

"மிலெனியத்தின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு இதான்!"

"தாங்ஸ்டி..."

"என்ன தாங்ஸ்டி? வெயில் உன்னை ரொம்பவே பாதிச்சிருக்கு. இந்த சம்மருக்கு நீ சென்னையில இருந்தா சரிப்படாது. அதனால பெங்களூர்ல இருக்கற உங்க பெரியப்பா வீட்டுக்குப் போயிடு."

"நீ ஒருத்தி... நான் லீவுக்கு அங்கே வரேன்னு லெட்டர் போட்டதும் அவங்க எல்லாம் கிளம்பி இங்கே வந்துட்டாங்க...."

"பரவாயில்லையே, ரொம்ப புத்திசாலியா இருக்காங்க."

"அவங்களை விடு. இப்போ உன்னோட அறிவை

கலகலகலா



சோதிக்கப் போறேன்."

"நான் ரெடி..."

"ஆறோடு ஆறு சேர்ந்தா என்ன வரும்?"

"பன்னிரண்டு"

"இல்லை... வெள்ளம் வரும்!"

"டீ கப்புல கைப்பிடி எந்தப் பக்கம் இருக்கும்?"

"வலது கைப் பக்கம்"

"இல்லே வெளிப் பக்கம்...."

"அம்மா தாயே! உனக்குத்தான் கடிக்கத் தெரியும்னு நினைக்காதே."

'வினோத' மனிதர்!

சுந்தரம் ஃபாஸனர்ஸின் சி.ஈ.ஓ. சுரேஷ் கிருஷ்ணாவை விருதளித்துக் கௌரவித்திருக்கிறது டோக்யோவில் இயங்கும் ஆசிய உற்பத்தி அமைப்பு. (Asian Productivity Organisation) உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் நூதனமான யோசனைகளைக் கையாண்டதற்காக இவ்விருது. இவ்விருதைப் பெற்றுள்ள முதல் இந்தியர் சுரேஷ் கிருஷ்ணா.



"சராசரித் தன்மையைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டு விடுகிறோம்; அதனால் உயர்வு அரிய விஷயமாகத் தோன்றுகிறது; மேன்மை என்பதோ வினோதமாகவே மாறிவிடுகிறது!" என்கிறார் அவர்!

நன்றி: பிசினஸ் லைன்

"எங்க ஒரு ஜஸ்ஜ கடி சொல்லு..."

கறுப்பு சட்டை, கறுப்பு ஜீன்ஸ், கறுப்பு கண்ணாடி போட்ட கறுப்பான ஆளு ஒருத்தர் வந்துகிட்டு இருந்தார். அப்போ வழியில கறுப்புக் கலர் பெயின்ட் அடிச்சு... கறுப்புக் கலர் கதவு போட்டிருந்த வீட்டில போய்க் கதவைத் தட்டினார். ஏன்?"

"ஏன்னா அது அவர் வீடு."

"அதான் இல்லே... அந்த வீட்ல காலிங்பெல் இல்லே..."

"ஹ்யூமர் கிளப்புக்குத் தலைவர் ஆகிற தகுதி உனக்கு இருக்குடி..."

"ஏய்... போன வாரம் சென்னை ஹ்யூமர் கிளப் இண்டர்நேஷனலுக்கு போன அனுபவத்தைச் சொல்றேன் கேளு..."

"என்னாச்சு? உன் கடியைக் கேட்டு எல்லாரும் வயித்தை சுத்தி பதினாலு ஊசி போட்டுக்கிட்டாங்களா?"

"அட நீ ஒண்ணு. ஹ்யூமர் கிளப்புல கடவுள் வாழ்த்து என்ன தெரியுமா? எல்லாரும் எழுந்து நின்னு ஹ... ஹாஹான்னு ரெண்டு நிமிஷம் சிரிக்கணும்!"

"நிஜமாவா?"

"அங்க நான் கேட்டு சிரிச்ச வாய் சுளுக்கின ஜோக்கை கேளு..."

"ஆரம்பத்துலேயே கவனிச்சேன்... முகத்துல புதுசா ஏதோ மாற்றம் தெரியுதேன்னு. சரி சொல்லு..."

"ஆபரேஷன் முடிஞ்சு டாக்டர்கிட்டே ஒருத்தர் கேட்டிருக்கார், 'டாக்டர் எப்பவும் நாம நினைக்கிறது ஒண்ணு நடக்கிறது ஒண்ணுன்னு ஏன் சொல்றீங்க?' – இதுக்கு டாக்டர் பதில் : "பாருங்களேன்... நீங்க மனித உடலோட மயங்கி கிடந்தப்போ ஆபரேஷனை ஆரம்பிச்சேன்... ஆனா ஆபரேஷன் முடியும்போது ஆவியா மாறி பேச ஆரம்பிச்சுட்டீங்க!"

"இதைவிட பெரிய ஆவி ஜோக் எங்கிட்ட ஸ்டாக் இருக்கு."

"ஏய்... ஏய்... சொல்லுடி?"

"முன்னே பின்னே தெரியாத ஊருக்கு ஒருத்தர் முதல் தடவையா போயிருக்கார். போய்ச் சேரும்போது இருட்டாயிடுச்சி. பாதையே தெரியலை. எதிர்த்தாப்போல ஒருத்தர் வந்தார். அவர்கிட்ட இந்தப் பக்கம் ஆவி நடமாட்டம் இருக்கிறதா பேசிக்கிறாங்க, உண்மையான்னு கேட்டார். அதுக்கு அவர், 'அட நீங்க வேற. நான் செத்துப் போயே அஞ்சு வருஷமாச்சு'ன்னு பதில் சொன்னாராம்."

"அறதப் பழசா ஒரு ஜோக்கை சொன்னா அதுக்கு நான் சிரிக்கணுமா?"

"இப்போ பாரு. நீ சிரிக்கிற மாதிரி ஒரு ஜோக்..."

"தமிழ் சேனல்ல மலையாளப் பாட்டுப் போடுறாங்களே அது ஏன்?"

"நேயர் விருப்பமாக இருக்கும்..."

"இல்லே, நாயர் விருப்பம்."

"மறுபடியும் கடியா...?"

"மண்டையில இருக்கிற முடியெல்லாம் கொட்டுற மாதிரி ஒரு கடி போடட்டுமா?"

"அதுலதான் உனக்கு டாக்டர் பட்டமே கொடுக்கலாமே. போட்டுத் தொலை."


"சில பேருக்கு தலைலேர்ந்து முடியெல்லாம் ஏன் இலை மாதிரி உதிருது...?"


"தெரியலியே..."

" 'மர'மண்டை; அதான்!"

தொகுப்பு : **வால்பையன்**


அட்டை வண்ணப்படம், படங்கள் **வெங்கடேஷ்**







ஜில்லுன்னு என்ன இருக்கு?

—கிச்சா






"நல்ல வத்தல் அச்சு! நீங்க காயாம வத்தலை மட்டும் காய வைக்கலாம்!"


அம்பயர்: "ஸ்டார் பேட்ஸ்மேனா இருக்கலாம்! அதுக்காக இதையெல்லாம் அனுமதிக்க முடியாது!"
செல்வம்

அச்சு அசலாய் உங்கள் கண்கள், அவள்
முக்கிய அங்கங்கள் வளருவது



அறிமுகமாகிறது

PediaSure WITH TCM

டாரைன்
கார்னிடின்
மீடியம் செய்ன் ட்ரைக்ளிஸரிட்ஸ்

சமச்சீரான, ஊட்டச்சத்துள்ள ஆரோக்கிய பானம், சரியாக சாப்பிடாத குழந்தைகளுக்கு.

ஊட்டச்சத்துகளை சிறப்பாக உறிஞ்ச உதவுகிறது

கண் மற்றும் மூளையின் வழக்கமான வளர்ச்சிக்கு உதவுகிறது

எல்லா வகையான வளர்ச்சியையும் நிச்சயப்படுத்துகிறது

துருதுருப்பும், குடுகுடுப்பும் குழந்தையின் கூடவே பிறந்தவை. சாப்பாடு விஷயத்தில் அடம்தான். என்ன சாப்பிடுவது, எதை வேண்டாம் என்பது எல்லாம் அவர்கள் மூடுதான் தீர்மானிக்கும். இதன் காரணமாக சரியான ஊட்டச்சத்து குழந்தைகளுக்கு கிடைக்காமல் போய் விடுகிறது.




விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் பிற ஊட்டச்சத்துகொண்ட ஆரோக்கிய பானத்தை நீங்கள் உங்கள் குழந்தைக்கு கொடுக்கிறீர்கள். ஆனால் அவைகள் எல்லாம் முழுமையான உணவா ? மருத்துவரீதியாக நிருபிக்கப்பட்ட தயாரிப்பை நீங்கள் நாட வேண்டிய வாய்ப்பு வந்து விட்டது.

பீடியாசூர் – வளரும் உங்கள் குழந்தைக்குமருத்துவ ரீதியாக போஷாக்கு தருகிறதுனை திருபணமானது

முழுமையான ஆகாரமான பீடியா சூர் பள்ளி பருவத்திற்கு முந்தைய மற்றும் அதற்கு மேற்பட்ட பருவ குழந்தைகளுக்கு விசேஷ போஷாக்கு தேவைகளுக்கென உருவாக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்கு உதவும் சமச்சீரான ஃபார்முலா



தகவல் : ஜே எம் டயட் அஸோஸ 1991; 91:1233-1236

பீடியாசூர் கிடுகிடு வளர்ச்சிக்கு உதவும் எம்சிடிகள் கொண்டு வளமூட்டப்பட்டது

பீடியாசூர் மீடியம் செய்ன் ட்ரைக்ளிஸரிட்ஸ் (எம்சிடிகள் கொண்டு தயாரிக்கப்பட்டது ஆகும் இதில் உள்ள எம்சிடிக்கள் போஷாக்குகளை உறிஞ்ச உதவுகிறது என்றும், குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையான சக்தியை விரைவாகவும், மிருதியாகவும் வழங்குகிறது எனவும் மேலை நாட்டில் மருத்துவரீதியாக



பகவான் விஷ்ணுவினிடத்திலே வேதவான்மயமானது நமக்கு வேண்டியதையெல்லாம் பிரார்த்திக்கிறது. என்ன கேட்க வேண்டும் பகவானிடத்திலே என்பதை யக்ஞப் பிரகரணத்திலே நமக்கு விளக்குகிறது.

நாமாகக் கேட்டோமானால் சரியாகக் கேட்கத் தெரியாது நமக்கு. நிறைய கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு போவோம். அங்கே போனவுடனே கேட்கத் தோன்றாது. கேட்டாலும் சாமான்ய விஷயத்தையே கேட்போம். சிற்றறிவானதனாலே அல்பமான அறிவு படைத்தவர்களாக நாம் இருப்பதனாலே அல்பமான கோரிக்கைகள்தான் நம்மிடத்திலே இருக்கின்றன. அதனால் நாம் என்ன கேட்க வேண்டும் என்பதை வேதம் சொல்கிறது :

யக்ஞத்திலே அக்னி ஜொலிக்கிறது. அக்னியைப் பிரார்த்தித்து அதிலே ஆவாகிதனாய் விளங்கும்படியான விஷ்ணுவினிடத்திலே ஏகப்பட்ட கோரிக்கைகள் வைக்கிறது - முந்நூறுக்கும் மேலான

குறைவ



ன்றுமில்லை 64

கோரிக்கைகள்.

விஷ்ணு புராணத்திலே பராசர மஹரிஷி சொல்கிறபோது, நாமாகக் கேட்டோமானால் என்ன கேட்போம் என்று விவரிக்கிறார். ஒரு கற்பக விருக்ஷத்தினிடத்திலே கௌபீனத்துக்கு வஸ்திரம் கேட்கிற மாதிரிதான் நமது கோரிக்கை இருக்குமாம்!

கற்பகவிருக்ஷம் என்னென்னவோ கொடுக்கக்கூடியது. அதனிடம் போய் அல்ப வஸ்திரத்தைக் கேட்கலாமா?

அதற்காகத்தான் பகவானிடத்திலே என்ன கோரிக்கை வைக்கலாம் என்று வேதமே கற்றுத் தருகிறது. 'எல்லோரும் சௌக்யமாக இருக்க வேண்டும்' என்றே பிரார்த்திக்கிறது. லோகமெல்லாம், எந்தப் பக்கம் திரும்பினாலும் மங்களமாக இருக்க வேண்டும். 'மங்களமான விஷயங்கள் காதிலே விழ வேண்டும்; கண்ணிலே தென்பட வேண்டும். அதிகாலை நேரத்தில் சில சில விஷயங்கள் காதிலே ஒலிக்க வேண்டும்' என்றெல்லாம் பிரார்த்தனை.

அதிகாலை நேரத்தில் காதிலே கோயில் மணியோசை கேட்க வேண்டும் என்கிறது ஒரு மந்திரம். அதன் ஒலி கேட்டால், மணியை அடித்து விட்டால் ஏற்படக்கூடிய ரீங்காரம் போலவே சப்திக்கும்.

மணியோசை கேட்காவிட்டால் வேத சப்தம் காதிலே விழ வேண்டும், அதிகாலை வேளையில். அதே மாதிரி உயர்ந்த பக்ஷிகளுடைய சப்தம், கருடத்வனி; பசு கத்தும்படியான 'அம்பா' என்கிற சப்தம்; வீணையிலிருந்து வரக்கூடிய த்வனி, ஸ்த்ரீகள் பாட்டு பாடிக் கொண்டே கையிலிருக்கிற மங்களமான வளைகள் சப்திக்க, மத்தினால் ஓசைப்படுத்தும் சப்தம். 'தயிரரவம் கேட்டிலையோ?' என்றாள் ஆண்டாள்!

இவையெல்லாம் பிராத : காலம் கேட்க வேண்டும் என்பது பிரார்த்தனை.

மங்களமே, மங்களமான த்வனியே காதிலே விழ வேண்டும். மங்களமே நாம் பார்க்க வேண்டும். எந்த திக்கிலும் சுமங்கலமாக இருக்க வேண்டும் என்று உலகுக்கே மங்களத்தைப் பிரார்த்திக்கிறது வேதம்.

அதனால்தான் பகவானையே மங்களத்தின் இருப்பிடமாகச் சொல்லியிருக்கிறது.

மங்களம் பகவான் விஷ்ணு :

அவன் மங்களப் பிரதன். மங்களமானவன் அவனே! மங்களமாக இருக்கிற காரணத்தினாலே, சர்வ பதார்த்தங்களிலேயும் இருந்துகொண்டு ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் அழகைக் கொடுத்து, மங்களத்தையும் கொடுக்கிறான் விஷ்ணு.

அந்த மங்களத்தை வேதமானது எடுத்துக் காட்டுகிறது.

விஷ்ணு என்று ஏன் அவனுக்குப் பெயர்? மஹாத்மாவான எம்பெருமான் விஷ்ணுவினுடைய சக்தியினாலே எல்லாம் அவனிடத்திலே உறைந்து நிற்கிறது. எல்லாவற்றிலும் அவன் நிறைந்து நிற்கிறான். அதனால் அவன் விஷ்ணு என்று அழைக்கப்படுகிறான்.

'விச' என்ற தாதுவுக்குப் பிரவேசித்து இருத்தல் என்று அர்த்தம். உட்பிரவேசித்திருத்தல். எல்லா வஸ்துக்களிலேயும் பிரவேசித்து இருப்பதனாலே அவன் விஷ்ணு.


விஷ்ணு காயத்ரி என்னும்படியான மந்திரத்தில் மூன்று நாமாக்கள் – நாராயணன் என்கிற நாமா, வாசுதேவன் என்கிற நாமா, விஷ்ணு என்கிற நாமா. இந்த மூன்று நாமாக்களுடன்கூடிய உயர்ந்ததான விஷ்ணு காயத்ரி இது.

நாராயணன் என்று ஏன் அவனுக்குப் பெயர் – நாரங்கள் என்றால் தீர்த்தம். எவ

■ முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார் ■

அருள்வாக்கு

ஸமூஹத்தில் உள்ள அத்தனை பேரும் ஒரு காலணா அரையணாவாவது போட்டு எல்லோருமாகச் சேர்ந்தே பொதுக் கார்யங்களுக்கான செலவுகளை ஏற்க வேண்டும். பணக்காரன் பணம் மட்டும் கொடுத்துவிட்டு, சரீரத்தால் உழைக்காமலிருந்தான் என்று இருக்கக் கூடாது; ஏழை சரீரத்தால் மட்டும் உழைத்து விட்டுப் பணம் கொடுக்காமல் இருந்தான் என்றும் இருக்கக் கூடாது. பணக்காரன்



ரூபாய் தருவதும், ஏழை சரீர கைங்கர்யம் செய்வதும் பெரிய த்யாகமில்லை. பணக்காரன் ஏழைகளோடு வந்து நின்று கொண்டு மண்வெட்டி எடுத்து வெட்ட வேண்டும்; ஏழை தன் கூழுக்கு ஒரு மிளகாய் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாகக் காலணா டொனேஷன் கொடுக்க வேண்டும். அதுதான் பெரிசு. ஸோஷல் ஸர்வீஸ் பண்ணும்போதே பண்ணுகிறவர்கள் மனஸில் உயர்ந்து வளர வேண்டுமானால் செலவு, உழைப்பு இரண்டிலுமே ஒவ்வொருத்தனுக்கும் பங்கு இருக்க வேண்டும். ச்ரமதானத்துக்கு பலஹீனர்கள் மட்டுமே எக்ஸப்ஷன்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

னொருவன் ஜலத்திலே படுத்திருக்கிறானோ அவன் முழு முதலானவன் - முழுவேழ் உலகுக்கும் நாதன். ஆலமர் வித்து - முழு பீஜம் அவன்! தீர்த்தத்திலே படுத்திருப்பவன் நாராயணன்.

நாரங்கள் என்றால் சேதனம் - அசேதனமான பதார்த்தங்கள். சித்து - அசித், சரம் - அசரம் என்றும் பொருள். இவற்றில் யார் இருக்கிறானோ, எவன் உறைகிறானோ அவன் நாராயணன்.

பஹுவ்ரீஹி சமாஸம், தத்புருஷ சமாஸம் என்று இரண்டு சொல்வார்கள் - தமிழில் அன்மொழித் தொகை, வேற்றுமை புணர்ச்சி என்று சொல்பவை.

பஹுவ்ரீஹி சமாஸம் மூலமாக நாராயண சப்தத்துக்கு அர்த்தம் பார்த்தால் எல்லா சராசரங்களிலேயும் உறைபவன் என்று கொள்ளலாம்.

தத்புருஷ சமாஸம் மூலமாகப் பார்த்தால், சராசரங்கள், சேதனா அசேதனங்கள் - இவையெல்லாம் இல்லாத இடத்திலேயும் அவன் இருக்கிறான் என்று பொருள் கிடைக்கும்.

இதைத்தான் நாம் கவனிக்க வேண்டும் - இவையெல்லாம் இல்லாத இடத்திலேயும் தாண்டியும் அவன் இருக்கிறான்! ஓர் அளவு பட்டு நிற்பானா பரமாத்மா?

அளவுபடாதவன், தேச, கால, வஸ்துக்களையெல்லாம் கடந்தவன் என்றல்லவா ஆசார்யர்கள் விளித்தார்கள் அவனை!

காலத்தால் அளவு, தேசத்தால் அளவு, வஸ்துவினால் அளவு என்று பகவானை அளக்க முடியாது.

இந்தத் தேசத்தில் இருக்கிறான் அந்த தேசத்தில் இல்லை என்பது உண்டோ? இந்தக் காலத்தில் இருக்கிறான் அந்தக் காலத்தில் இல்லை என்பது உண்டோ? இந்தப் பொருளில் இருக்கிறான் அந்தப் பொருளில் இல்லை என்பது உண்டோ?

ஆகையினால் வஸ்து, காலம், தேசம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவன். அந்தத் திருநாமம் - அஷ்டாக்ஷரத்தில் இத்தனையும் அடங்கி நிற்கிறது.

வாசுதேவ சப்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள் - 'வாசுதேவாய தீமஹி' என்று உபநிஷத் சொல்கிறது.

பிரும்மண்யோ தேவகி புத்ர : - தேவகி புத்ரன்தான் பரப்ரும்மம். பிரும்மண்யோ மதுசூதன : மதுசூதனன்தான் பரப்ரும்மம். பிரும்மண்யோ புண்டரீகாக்ஷ : கமலநயனன் இருக்கிறானே அந்த தாமரைக் கண்ணன் - அவன்தான் பரப்ரும்மம். பிரும்மண்யோ விஷ்ணுருச்யதே - அவன்தான் விஷ்ணுவென்று அழைக்கப்படுகிறவன் என்று உபநிஷத்தே எடுத்துக்காட்டுகிறது.

தேவகி புத்ரனான வாசுதேவனுக்குப் பல நாமங்கள்.

கிருஷ்ணன் என்கிற சப்தத்தைச் சொல்ல வேண்டும் - அதில் எத்தனை அக்ஷரங்கள் என்று பார்த்தோமானால் க்ரு, ஷ, ண என்று மூன்று சொல்வோம் நாம். ஆனால் சாஸ்திரம் அப்படிச் சொல்லவில்லை.

'ஷ'வுக்குக் கீழே ஒரு 'ட' இருக்கிறது. ட ஒலிக்காது. ஆங்கில மொழியிலே கூட இப்படிப்பட்ட ஒலிக்காத அக்ஷரங்கள் உண்டு. அந்த மாதிரி இங்கேயும் டகாரம் ஒலிக்காமல் 'கிருஷ்ண' என்கிறோம்.

'கறுப்பாய் இருக்கிறவன் கிருஷ்ணன்' என்பது சாமான்ய பொருள்.

'க்ருஷி' வாசகத்தை பூ வாசகம், தன்னிவ்ருதி வாசகம் என்றும் சொல்வதுண்டு.

க்ரு என்பதற்கு பூமி என்று அர்த்தம். ந : என்றால் நிவ்ருத்தி – விடுவித்தல் என்று அர்த்தம். இந்த பூமியிலிருந்து நம்மை விடுவித்து மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவன்! க்ருஷ்ண சப்தத்துக்கு, மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியவன் என்று அர்த்தம்.

அதே போல் வாசுதேவ சப்தத்தை எடுத்துக் கொண்டோமானால், எல்லாவற்றினுள்ளும் அவன் உறைகிறான் என்ற உண்மை கிடைக்கிறது.

நாராயண சப்தமானது, எல்லாவற்றிலும் அவன் உறைகிறான் எல்லாம் அவனிடத்தில் உறைகின்றன என்று இரண்டு அர்த்தங்கள் காட்டும்; வாசுதேவ சப்தம், எல்லாவற்றிலும் அவன் இருப்பதைக் காட்டும்.

விஷ்ணு காயத்ரியில் வரும் மூன்றாவது நாமா விஷ்ணு : இதுவும் சர்வ வியாபகத்தையே காட்டும். எல்லாவற்றிலும் அவன் அந்தர்யாமியாய் இருப்பதைக் காட்டும்.

விஷ்ணு என்பது ஒரு தேவதையைக் குறிக்கிறது. அது மட்டுமல்லாமல், சர்வாந்தர்யாமி – அந்தர்யாமி என்பதையும் விஷ்ணு சப்தத்தினாலே தெரிந்து கொள்கிறோம்.

விஷ்ணு காயத்ரி என்றுதான் சொல்கிறோமேயொழிய வாசுதேவ காயத்ரி என்றோ நாராயண காயத்ரி என்றோ சொல்வது கிடையாது!

அப்படிப்பட்ட விஷ்ணு காயத்ரியினால் ஸ்மரிக்கப்படுகிற விஷ்ணுவானவன்தான் சர்வ சராசரங்களிலும் இருந்து கொண்டு நமது கோரிக்கைகளை உடனுக்குடன் கொடுத்தருள்கிறான்.

அவனுடைய அந்தர்யாமித்வத்தை வேதம், சப்தபரமாக உணர்த்துகிறது. இதற்காகவே ஆறு சூத்திரங்கள் பிரும்மசூத்திரத்திலே இருக்கின்றன.

அந்தர்யாமியாய் பரமாத்மா இருக்கிறான், அவன் செயல்படுத்துகிறான், எல்லோரையும் ரக்ஷிக்கிறான். அவன் இருப்பது சத்யம் என்று வேதம் வலியுறுத்துகிறது. பிரஹத்தாரண்யக உபநிஷத்தில் இதற்கென்றே ஒரு பிரகரணமும் வருகிறது.

(தொடரும்)

Read it!

ஆல்மோஸ்ட் அமெரிக்கவாசியாகிவிட்ட எழுத்தாளர் இரா. முருகன் சமீபத்தில் சென்னை வந்திருந்தபோது பில்கேட்ஸின் மைக்ரோஸாஃப்ட் நிறுவனத்தின் அற்புதக் கண்டுபிடிப்பான **'Talk it!'** என்கிற சாஃப்ட்வேரை நமக்கு அறிமுகப்படுத்தினார்.

பேச்சு மொழியை எழுத்து வடிவில் இறக்கும் சாஃப்ட்வேர்கள் ஏற்கெனவே உண்டு. இந்த **'Talk it!'** ஸாஃப்ட்வேர், நாம் எழுதும் விஷயத்தைப் பல குரலில் பேசுகிறது!

உதாரணமாக, ''என்னாச்சு முருகா! எழுதறதை அம்போன்னு விட்டுட்டு அமெரிக்காவுக்குப் பூச்சி பிடிக்க போயிட்டீங்க?'' என்று டைப் செய்த மறுகணம். (ஆங்கில லிபியில் அடிக்க வேண்டும்; அவ்வளவுதான்) குழந்தையின் குரல், பெண்ணின் குரல், கட்டைத் தொண்டை ஆண் குரல், ரோபோ குரல் (இதில் ஆண் ரோபோ, பெண் ரோபோ என இரு வெரைடி!) என சுமார் இருபது விதமாக நாம் **'feed'** செய்ததை ஒலிபரப்புகிறது.



• இரா. முருகன்

இதைவிடப் பிரமாதம், பாட்டுப் பாடும் பெண்ணின் குரல் ஒன்றுண்டு. ''ஏ...ன்னாச்...சு முருகா...'' எனத் தொடங்கி, சுத்ததன்யாசிக்கு ஒன்றுவிட்ட சித்தப்பா ராகத்தில் அமெரிக்க உச்சரிப்பில் அழகுத் தமிழில் பாடுகிறது! ('ழ' மட்டும் கொஞ்சம் உதைக்கிறது.)

''இந்த சாஃப்ட்வேரை எதற்கு உபயோகிக்கிறீர்கள்?'' என்று கேட்டதற்கு முருகனின் பதில் :

''ரோபோ குரலில் 'அச்வின்! கெட் அப்!' என்று மிரட்டினால்தான் என் பையன் காலை டயத்துக்கு எழுந்து கொள்கிறான்!''

– கிருஷ்

பொறுப்பு

முத்துராமன்

இன்றைக்கு எப்படியும் தண்ணீர் எடுத்தாக வேண்டும். குடிப்பதற்கு, சமையலுக்கு என மூன்று குடங்கள் கிடைத்தால் போதும். மற்ற தேவைகளுக்கு போர் பம்ப்பில் இராத்திரி அடித்துக் கொள்ளலாம்.



அவளுக்கும் தண்ணீருக்கும் உள்ள நெருக்கம் ஒவ்வொரு முறையும் தலைவலி மாத்திரையில் போய் முடிகிறது.

வாரி வருமா என்று பார்த்துக் கொண்டு தெருமுனையில் நின்றிருந்தாள். தலைசுற்றுவது போலிருந்தது.

கிணற்றிலும் தண்ணீர் வற்றி விட்டது. இரண்டு நாட்களுக்கு முன்பு வாளி, நிலத்தைத் தட்டிப் படுத்துக் கொண்டது. மேலே வரும்போது பாதியளவு வந்த தண்ணீரும் கலங்கலாக - களிமண் குழம்பு போல - வண்டலோடு...

போர் பம்ப்பில் கிடைக்கும் தண்ணீருக்கும் வரிசையில் குடத்தை வைத்துக் கொண்டு அரைமணி நேரமாவது நிற்க வேண்டும். நின்று பிடித்துக் கொண்டு வருவது என்பது அவளுடைய கணவனுக்குத்தான் சரிப்படுகிறது. இரண்டு குடங்களிலும் தண்ணீர்ப் பிடித்து, ஒரு நைலான் கயிற்றின் இணைப்பினால் சைக்கிளில் தொங்கப் போட்டுக் கொண்டு வந்து விடுவான்.

அவன் தண்ணீர் கொண்டு வரும்போதெல்லாம் அவனும் வீட்டுப் பொறுப்புகளை உணர்வதாக நினைத்துக் கொள்வான். அவளுக்குத் தானும் எல்லா விஷயத்திலும் மிகுந்த அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று தோன்றும்.

இரவில் படித்துக் கொண்டே தூங்கிவிடுகையில் புத்தகத்தையும் கண்ணாடியையும் எடுத்து வைக்கும் போது, படிக்கட்டில் இரண்டு குடங்களைத் தூக்கிக் கொண்டு படி ஏறுகையில் குடங்களை வாங்கி ஊற்றி விட்டுத் தரும்போது, அப்பாவும், மகனுமாக ஒரே வாளியில் குளிக்கும்போது, கரைந்துவிட்ட அழிப்பானைத் தேடி எடுத்துத் தரும்போது, படிக்கும் மகளை பள்ளியிலிருந்து அழைத்து வருவது... இதுபோன்ற இரண்டு குவளைகள் தருவது. வரும்போது, அவனோடு விளையாடும் கடமை சந்தோஷமாக இருக்கும். சில கவனிப்புகளில் செய்யும் குழந்தையின் ஞாபகம் வந்து விட்டது.

உடனே அவளுக்குக் குழந்தையின் ஞாபகம் வந்து விட்டது. பள்ளி விட்டு வந்து, யூனிஃபார்ம் கூடக் கழற்றியிருக்க மாட்டான். அப்படியே கீழ் வீட்டுக்கு விளையாடப் போயிருக்கும். நினைத்தே பார்த்திராத சமயத்திலெல்லாம் தண்ணீர் வாரி வந்து நின்று விடுகிறது. அடுத்த பத்துப் பதினைந்து நிமிடங்களில் மொத்தத் தண்ணீரும் தீர்ந்து விடுகிறது. அரைமணி நேரப் போராட்டம். பிடிப்பது, தள்ளிவிட்டுப் பிடிப்பது என போட்டி போட்டுக் கொண்டு பிடித்து வைக்கப்பட்ட குடத்திற்கு யாரோ திருடர்கள் வேறு வந்து விடுகிறார்கள்.

அன்று தண்ணீர் வாரி வரவில்லை. அலுப்புடன் காத்திருந்து விட்டு, மாடிப்படிகளில் மெதுவாக ஏறினாள். வாசலில், யூனிஃபார்ம் டிராயரோடு இன்னும் பேப்பர் விளையாடலாம். வாக, பூனிஃபார்ம் டிராயரோடு இன்னும் கொஞ்சம் ஏறி நின்றிருந்தான்.

"வாக என்ன பண்ணிட்டிருக்கே?"

டிராயரை ஒரு கையால் பிடித்துக் கொண்டே சொன்னான், "தண்ணி வண்டி வருதான்னு பாக்கறேம்மா."





One & Only

சிரிப்புச் சிகிச்சை!

“என்னோட வாழ்க்கையில தொடக்கத்தில இருந்தே ரொம்பக் கஷ்டத்தை சந்திச்சுட்டேன்.

அசல் தரேன்னு சொன்னானா?



நம்மதான் சிரிக்க முடியலை; மத்தவங்களை யாவது சிரிக்க வைப்போம்னு நினைச்சு நகைச்சுவை உணர்வை வளர்த்துக்கிட்டேன்”என்கிறார் டாக்டர் மாத்ருபூதம்.

‘நீங்க சினிமாவில் நடிக்கலாமே’ன்னு முன்பு நிறையப் பேர் கேட்டாங்க. கவுண்டமணி, செந்தில், விவேக், வடிவேலுன்னு ஒரு பெரிய பட்டாளத்தோட சாபத்தை சம்பாதிச்சுக்க விரும்பலை... அதனால ஒரு சில படங்களில் கேரக்டர் ரோல் பண்றேன்...

தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும் தைரியத்துல ஷர்மிளா தான் எனக்கு ரோல் மாடல்! நாளைக்கு கல்யாணம் செய்துகிட்டு, புருஷன் வீட்டுக்குப் போய் வாழணும் கிற சூழ்நிலையில, ஒரு பெண்ணோட தைரியத்துக்கு முன்னால நான் சிம்பிள்! குறிப்பா எங்க நிகழ்ச்சிக்கு ஆரம்பத்துல பெரிய எதிர்ப்பு. எம்.பிஏ படிச்ச ஒரு பெரிய தொழில் அதிபர், ஒரு லெட்டர் போட்டிருந்தார்; ‘இந்த மாதிரி ஒரு புரோகிராம் நடத்தறதுக்கு புளூபிலிம் காட்டலாம்னு.’

‘உங்க ஆசையை எல்லாம் நாங்க தீர்த்து வைக்க முடியாதுன்னு’ நான் பதில் சொன்னேன். பாலியல், மனநலம் இந்த இரண்டு பிரச்னைகளுக்குமே நகைச்சுவையா சிகிச்சை கொடுத்தா சீக்கிரம் சரி செய்துடலாம். அனுபவபூர்வமா எனக்கு வெற்றி கிடைச்சிருக்கு... என்னோட ஜோக்கைக் கேட்டுட்டு எங்கிட்ட வர்ற பேஷண்டுகளும், ரொம்ப காமெடியா பேசுவாங்க...



“உடம்பு ரொம்ப குண்டான ஒருத்தர் கிளினிக் வந்தார். ஏன் உடம்பு குண்டாச்சுன்னு கேட்டேன். என்னால ‘உண்டாக’ முடியாது; அதனால தான் குண்டானேன்னு உடனே ஜோக் அடிச்சார்.


அப்புறம் ஒரு லேடி போன் செஞ்சு பூதம் இருக்காரான்னு கேட்டாங்க... உங்களுக்கு என்ன பிரச்னைன்னு கேட்டேன். உடம்பு பூதம் மாதிரி உப்பிப் போச்சுன்னாங்க... அதுக்கு நான் என்ன செய்யணும்னு கேட்டேன். உடம்பு இளைக்கிறதுக்கு ஒரு நாளைக்கு எத்தனை வேளை மாத்திரை சாப்பிடணும், சாப்பாட்டுக்கு முன்னாடியா பின்னாடியான்னு கேட்டாங்க.... சாப்

பிடவே கூடாதுன்னு பதில் சொன்னேன்... டெலிபோன் பூதம் பயந்து போய் கட் பண்ணிடுச்சி!

“கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஃபைனான்ஸ் கம்பெனியெல்லாம் ஏமாத்தின சமயம்; அதுல பணம் போட்ட ஒரு ரிட்டையர்டு பர்சனுக்கு ஒருவிதமான ‘மேனியா’ வந்துடுச்சி. அழைச்சுட்டு வந்தாங்க. ஏன் பணம் போட்டீங்கன்னு கேட்டேன். முப்பது பர்சண்ட் வட்டி தரேன்னு விளம்பரம் கொடுத்தான். அதான்னார். ‘ஃபைனான்ஸ்காரன் அசலைத் திருப்பித் தருகிறேன்’ன்னு எங்கயாவது விளம்பரம் கொடுத்தானான்னு கேட்டதும் சிரிச்சுட்டார். அவரை அன்னைக்கே சரி பண்ணி அனுப்பிட்டேன்!

எங்கிட்டே அடிக்கடி ஒரு பேஷண்ட் வந்துகிட்டிருப்பார். அஞ்சு நிமிஷத்துக்கு மேல அவர் உட்கார மாட்டார்... சரியான

• ஷர்மிளா: செமை தைரியம்!



படம்: பிரவீன்குமார்

அவசர குடுக்கை. திடீர்னு, ‘டாக்டர் நேரமாயிடுச்சு; சீக்கிரம் எழுதிக் குடுங்க’ன்னார். அந்த நேரம் பார்த்து பேனா எழுதலை... உடனே என் உதவியாளரைக் கூப்பிட்டு பீரோலேர்ந்து ஒரு புது பேனா கேட்டு வாங்கி எழுதிப் பார்த்தேன்... அதுக்குள்ள நான் எழுதிக் கொண்டிருந்த பிரிஸ்கிரிப்ஷன் சீட்டை அந்த பேஷண்ட் பிடுங்கிக்கிட்டுப் போயிட்டார்... கொஞ்ச நேரங் கழிச்சு திரும்பி வந்தார்... ‘டாக்டர் நீங்க எழுதிக் குடுத்த மாத்திரை எந்த மருந்து கடையிலேயும் கிடைக்கலே’ன்னார். ‘பேனா எழுதுதான்னு கிறுக்கிப் பார்த்ததைப் பிடுங்கிட்டுப் போனா இப்படித்தான்’னேன்!”

சந்திப்பு: **ஆர்.சி.ஜெ.**
படம்: **வெங்கடேஷ்**



ஹலோ, சமைக்க வர்றீங்களா!

“ஓரே ஒரு அடுப்பு. பாத்திரம் கழுவ இடம்–இது இருந்தால் போதும் நீங்க கேட்கிற விருந்தை உங்கள் வீட்டுக்கே வந்து தயார் செய்து பரிமாறிவிடுவேன்” என்கிறார் ட்ஸ¬ஷ¬யி கோகுரே! ஜப்பானில் இவருக்கு ஏகப்பட்ட கிராக்கி! தொலைபேசியிலோ ஈ.மெயில் மூலமோ தேவையைத் தெரிவித்தால் காய்கறி, மளிகை, பாத்திரங்கள் சகிதம் தமது காரில் வந்து சேர்கிறார். சமைத்து, பரிமாறி, சுத்தம் செய்து, ஏரகட்டி விட்டு, கட்டணம் வாங்கிக் கொள்கிறார்!

ஹோட்டலில் வேலை செய்து அலுத்துப் போனதால் இந்தப் புது முயற்சியில் இறங்கினாராம் கோகுரே.

எட்டு வருடங்களாக இந்தத் தொழிலை மணம் மணக்கச் செய்து வருபவர். விமானக் கட்டணம் தந்தால் வெளிநாட்டிலும் சர்வீஸ் வழங்கத் தயாராம்!

ஈமெயில் முகவரி:
kogure@msc.biglobe.ne.jp

நான் நாத்திகனில்லை – 14

தந்தை பெரியார் என்னுள் ஏற்படுத்திய தாக்கம், வள்ளலாரின் சமரச சன்மார்க்க உணர்வு இவற்றோடு பாபா சாகேப் அம்பேத்கரின் நூல்களும் என்னை மேலும் மேலும் செழுமைப்படுத்தின. அதன் விளைவாக, இந்திய தத்துவ தரிசனங்களை நான் ஏற்றுக் கொள்பவனாக இருந்தாலும் இந்து மதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

வேதாந்தம் உள்பட இந்திய தத்துவ தரிசனங்களில் எங்குமே வலியுறுத்தப்படாத வர்ணபேதங்கள் - அதாவது பிறப்பினாலேயே ஒருவன் உயர்ந்தவனாகி விடுகிறான் என்கிற வர்ணபேதம் இந்து மதத்தில் கடைப்பிடிக்கப்படுவதை என்னால் துளியும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உயர்ந்த குறிக்கோள்களை உடையவன் பிராமணன் என்கிற தத்துவ நிலையை மாற்றி, அவன் என்ன மாதிரியான குணங்களையுடையவனாக இருந்தாலும் என்ன மாதிரியான ஈனத் தொழில்களைச் செய்பவனாக இருந்தாலும் தனது பிறப்பினாலேயே அவன் பிராமணனாகி விடுகிறான் என்கிற ஒரு மோசமான நிலையை ஏற்படுத்தி, அதைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிற ஒரு நிறுவனமாகத்தான் இந்து மதத்தை என்னால் பார்க்க முடிந்தது. அதனால் இந்து மதத்தை எதிர்த்துப் பேச வேண்டிய அவசியமும் எனக்கு ஏற்பட்டது.

இப்படி ஒருபுறம் இந்துமதத்தை எதிர்த்துப் பேசிக் கொண்டே மறுபுறம் நான் என்ன மதம் என்று சொல்ல வேண்டிய ஓர் அவசியம் ஏற்படுகிறபோது, 'நான் ஓர் இந்து' என்று சொல்லிக் கொள்வதும் விண்ணப்பங்களில் எழுதுவதும் எனக்குச் சரியாகப்படவில்லை. 'கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு' என்பார் வள்ளுவர். ஒன்றைச் சொல்வதும் பிறிதொன்றைச் செய்பவனுமாயிருக்கிற ஒருவனுடைய தொடர்பு கனவிலும் கூடத் துன்பம் தரும் என்கிற நிலையில், நானே எப்படி இந்துமதத்தை எதிர்த்துக் கொண்டு இந்து என்றும் சொல்லிக் கொண்டிருக்க முடியும்? அப்படிச் சொல்வது எனக்கு வெட்கமாக இருந்தது.

சரி, அதற்காக கிறிஸ்துவ மதத்துக்கோ, இஸ்லாமிய மதத்துக்கோ நான் மாறிவிட முடியுமா?

புத்தம் சரணம் கச்சாமி...



அதுவும் முடியாது. அப்படிச் செய்வது பேய்க்கு பயந்து கொண்டு பிசாசுக்கு வாழ்க்கைப்பட்ட கதையாகத்தான் இருக்கும். காரணம், இந்து மதத்தை நான் வன்மையாக எதிர்த்தாலும் இந்திய தத்துவ தரிசனங்களில் எனது கால்களை பலமாக ஊன்றி நின்றிருக்கிறேன் என்பதுதான். கிறித்துவம், இஸ்லாம் போன்ற மதங்களிலுள்ள சில நல்ல விஷயங்களை ஏற்றுக் கொள்ள முடிந்ததென்றாலும் அவற்றின் முக்கிய கொள்கையான படைப்புக் கடவுள் உண்டு என்

பதில் எனக்குத் துளியும் உடன்பாடில்லை என்பதால் அங்கும் என்னால் போக முடியாத நிலை.

இந்தக் காலகட்டங்களில் தான் நான் புத்த தத்துவத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். குறிப்பாக பாபாசாகேப் அம்பேத்கர் கடைசியாக எழுதியிருந்த 'புத்தரும் அவர் தம்மமும்' என்கிற நூல் என்னை மிகவும் கவர்ந்தது. அதை நான் படித்தேன் என்பதை விட, அதையே நான் உண்டு, செரித்து என் ரத்தமும் சதையுமாக ஆக்கிக்



சரணம்!

கொண்டேன் என்பதுதான் உண்மை.

நான் என்ன முடிவுக்கு வந்திருந்தேன்? படைப்புக் கடவுள் என்று ஒன்று இல்லை. பிறப்பிலே உயர்வு தாழ்வு இல்லை; ஜாதி வேற்றுமையோ தீண்டாமையோ இல்லை. பெண்ணடிமை என்பது கூடவே கூடாது என்பதுதான். பெரியார் எத்தனையோ போராட்டங்கள் நடத்தினார். எத்தனையோ பேசினார். ஆனாலும் இரண்டே இரண்டு விஷயங்களுக்குத்தான் அந்த மாபெரும் மேதை கூட உணர்ச்சிவசப்பட்டார். 'என்னமோ கடவுள் இருக்குது இருக்குதுன்னு சொல்றாங்களே... அந்தக் கடவுள் உண்மையிலேயே இருந்தா, இந்தப் பெண்ணடிமைத் தனத்தையும் தீண்டாமையையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிற இந்த நாட்டை, ஒரு பூகம்பத்தாலயோ, எரிமலையாலோ அழிக்காமல் இருப்பானா?' என்று பெரியாரே மிகவும் உணர்ச்சிவசப்பட்டுச் சொல்லியிருக்கிறார்.

இப்படி பெரியாரே மிக மிக முக்கியத்துவம் கொடுத்த பெண்ணடிமைத் தனத்தையும் தீண்டாமையையும் ஒழிக்கிற மருந்து புத்த சமயத்தில் இருப்பதை அம்பேத்கரின் அந்த நூலைப் படித்ததன் மூலம் உணர்ந்து கொண்டேன். நானோ பெரியாருக்கு தாசன். பெரியாருக்கே இந்த இரண்டுதான் முக்கியமான முதல் எதிரி என்றால் எனக்கு மட்டும் வேறு எது எதிரியாக இருந்து விட முடியும்?

'சாதியாவது ஏதடா மதங்களாவது ஏதடா' என்கிற சித்தர்கள் பாடல்களும் வள்ளலாரின் சமரச சன்மார்க்கமும் வெறும் தத்துவக் கேள்விகளாகவும் போதனைகளாகவுமே தெரிந்த எனக்கு, பௌத்தம்தான் அதைக் குணப்படுத்துகிற மருந்தாகத் தெரிந்தது. சுமார் 2,600 ஆண்டுகளுக்கு முன்பே பெண்ணடிமைத்தனத்தையும் தீண்டாமையையும் ஒழிப்பதற்கு ஒரு சமயம் (இயக்கம்) இருந்திருக்கிறது; ஒரு தலைவன் இருந்திருக்கிறார். அதுதான் பௌத்தம். அந்தத் தலைவர்தான் புத்தர் என்பதை அந்த நூலில் உணர்ந்து கொண்டேன். அதனால்,

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

பேராசிரியர் பெரியார்தாசன்

நம் பணம்!

“குழந்தையா இருந்தப்போ பாக்கெட்மணி வாங்கினதில்லை. வீட்டிலே எல்லாருக்கும் பொதுவா ‘பணப் பானை’ ஒண்ணு இருக்கும். சினிமாவுக்குப் போகணும்னாலும் பிட்ஸா சாப்பிடணும்னாலும் அதிலேயிருந்துதான் பணம் எடுக்கணும். நாம செய்யற செலவு குடும்பத்துல மத்தவங்களையும் பாதிக்கும்ங்கிற பொறுப்புணர்வு எப்பவும் இருக்கும். அதனால ‘என் பணம்’னு யோசிக்கப் பார்த்ததே இல்லை... என் பணம்னு நினைச்சா நமக்காக மட்டுமே செலவழிக்கத் தோணும். மனிதாபிமானத்தோட, புத்திசாலித்தனத்தோட அதைப் பலருக்குப் பயனாகும்படி உபயோகிக்கத் தோணாது.”

-இருபத்தெட்டு வயதில் இப்படிப் பொறுப்போடு பேசுபவர் ஸ்ரீநிஜா ஸ்ரீநிவாஸன். அமெரிக்காவில் வளர்ந்து, படித்து இப்போது ‘யாஹூ’ இணைய நிறுவனத்தின் தலைமை எடிட்டராகவும், வைஸ் பிரெசிடெண்டாகவும் இருப்பவர்.



• ஸ்ரீநிஜா

என்று அந்தச் சமயத்தை ஏற்றுக் கொண்டு விட்டேன். (புத்தராம் அறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்; தம்மமாம் அறத்திடம் புகுகிறேன் அடைக்கலம்; சங்கமாம் துறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்) சேஷாசலம் என்கிற எனது பெயரை எனது சொந்தச் செலவிலேயே சாகடித்துக் கொண்டு சித்தார்த்தன் ஆனேன். சட்டப் படி என் பெயரைச் சித்தார்த்தன் என்றும் என் சமயத்தை (Religion) பவுத்தம் என்றும் பதிவுசெய்து கொண்டேன்.

அதன் பிறகு, ‘புத்தமும் அவர் தம்மமும்’ என்கிற அம்பேத்கரின் நூலை நான் தமிழில் மொழிபெயர்த்தேன். ஐந்நூறு பக்கங்களுக்கு மேற்பட்ட அந்த நூல் தைவான் நாட்டில் (பத்தாயிரம் பிரதிகள்) அச்சிடப்பட்டு, இங்குள்ள பலருக்கும் இலவசமாகவே வழங்கப்பட்டது.

இப்போது நான் ஜாதியற்றவனாக வாழ்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன். என்னை விட மகிழ்ச்சியாக என் மகன்களும் என் மனைவியும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது இன்னும் எனக்குப் பெருமகிழ்ச்சியாக இருக்கிறது.

சரி, இந்துமதத்தவனாக நான் இருந்த போது, எனது ஜாதி பிற்படுத்தப்பட்ட ஜாதி. அதில் இருந்தால், எனது மகன்களுக்குச் சில அரசுச் சலுகைகள் கிடைக்குமே. பௌத்த சமயத்தவனாக நான் ஆகிவிட்டதால் அந்தச் சலுகைகள் கிடைக்காமல் போய்விடுமே. இதுபற்றி எனது மகன்கள் ஏதாவது வருத்தப் படுகிறார்களா அல்லது பிற்காலத்தில் வருந்துகிற ஒருநிலை ஏற்படுமா? அதற்கு நான் வழிவகுத்தது சரியா? எனது கொள்கைகளை எனது மகன்களின் மீது திணிப்பது சரியா என்று சிலர் கேட்கலாம். இதுபோன்ற கேள்விகளை அன்றைக்கு எனது நண்பர்கள் சிலரும் கேட்டார்கள்.

இதுபற்றியெல்லாம் எனது குடும்பத்தாருடன் நான் விவாதிக்காமலில்லை. நிறைய விவாதித்தேன். அவர்கள், ஜாதியற்ற மனிதர்களாக வாழ்வதில் இருக்கிற பேரானந்தத்துக்கு முன்னால், அரசாங்கத்தின் சிறு சிறு சலுகைகளெல்லாம் ஒன்றுமேயில்லை என்பதை மனப்பூர்வமாகச் சொன்னார்கள்.

நானும் பெரியார்தாசனாக - வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்துக்கு உடன்பட்டவனாக - இந்திய தத்துவ தரிசனங்களை ஏற்றுக் கொண்டவனாகவே பௌத்த சமயத்தில் இருக்க முடியுமா என்பதை ஒருமுறைக்குப் பலமுறை பௌத்த தத்துவங்களை ஆழ்ந்து படித்துப் படித்து உணர்ந்த பிறகுதான் சித்தார்த்தன் ஆனேனே தவிர, கண்ணை மூடிக் கொண்டு மாறிவிடவில்லை.

என்னை இந்த அளவுக்கு மாற்றிய அந்த பௌத்தத்தில் அப்படி என்னதான் இருக்கிறது? மற்ற சமயங்களெல்லாம் நிறுவனங்களைப் போல் ஆகிவிட்டன என்றால், அதிலிருந்து பௌத்தம் மாத்திரம் எப்படி வேறுபட்டிருக்க முடியும் என்கிறீர்களா?

(தொடரும்)

பொன்னியின் செல்வன்

பூர்வகதை

இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு விஜயாலய சோழன் இரண்டாவது சோழ சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினான். சோழ நாட்டின் சேனா வீரர்கள் நாலு திசைகளிலும் படை எடுத்துச் சென்று வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து சோழ சாம்ராஜ்யத்தின் எல்லையை விசாலப்படுத்தி வந்தார்கள். சுந்தர சோழ சக்கரவர்த்தியின் காலத்தில் மதுரைப் பாண்டிய குலத்தின் கடைசிப் பிரதிநிதியான வீரபாண்டியன் கொல்லப்பட்டான். பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தில் முற்றிலும் ஐக்கியம் அடைந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மூத்த புதல்வனும் வீர பாண்டியனுடைய தலை கொண்டவனுமான ஆதித்த கரிகாலன் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசனாக முடி சூட்டப் பெற்றான். வடதிசைச் சைன்யத்துக்கு மாதண்ட நாயகனாகிக் காஞ்சியைத் தன் இருப்பிடமாகக் கொண்டான். காஞ்சியில் புதிதாகப் பொன்மாளிகை கட்டித் தன் தந்தையை அங்கு வந்து இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, பழைய வாணர்குடியில் பிறந்த வந்தியத்தேவன் என்னும் வீரனிடம் ஓலை கொடுத்து அனுப்பினான்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி அரண்மனையில் பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டு நடமாட்டமின்றிப் படுத்த படுக்கையாக இருந்தார். உடல் நோயைக் காட்டிலும் அதிகமாக மன நோயினால் சுந்தரசோழர் பீடிக்கப்பட்டிருந்தார்.

இளம்பிராயத்தில் ஈழ நாட்டை அடுத்திருந்த ஒரு சிறு தீவில் சுந்தர சோழர் தங்கியிருக்க நேர்ந்தபோது கரையர் குலத்தைச் சேர்ந்த ஊமைப்பெண் ஒருத்தியினால் கரடியின் வாயிலிருந்து காப்பாற்றப்பட்டார். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டார். சில காலம் இருவரும் அத்தீவில் ஆனந்த வாழ்க்கை நடத்தினார்கள்.


அப்போது சுந்தரசோழர் தாம் ஒரு காலத்

அமரர் கல்கி

தில் சக்கரவர்த்தியாகக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை: அவர் பாட்டனாரான புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி அனுப்பிய வீரர்கள் அவரைத் தேடிப் பிடித்து அழைத்துப் போனார்கள்.

பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் இராஜாதித்தர் தக்கோலத்தில் இரட்டை மண்டலச் சைன்யத்துடன் நடந்த பெரும் போரில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருக்கு அடுத்த கண்டராதித்தருக்கு அச்சமயம் மக்கள் இல்லை. அவருக்கு இளையவரான அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளாகிய அழகிற் சிறந்த கலியாணியை மணம் செய்துகொண்டிருந்தார். அவர்களுடைய ஏக புதல்வர் சுந்தரசோழர். பராந்தக சக்கரவர்த்தி மரணத் தறுவாயில் தமக்குப் பின் கண்டராதித்தரும் அவருக்குப் பிறகு சுந்தர சோழரும் சிம்மாதனம் ஏற வேண்டுமென்று திட்டமிட்டுக் காலமானார்.

சிவநேசச் செல்வரான கண்டராதித்தர் பட்டத்துக்கு வந்த பிறகு செம்பியன் மாதேவி என்று சரித்திரப் புகழ்பெற்ற மழவரையர் மகளை மணந்தார். அவர்களுக்கு மதுராந்தகன் என்னும் மகன் பிறந்தான். ஆயினும் கண்டராதித்தருக்குப் பின்னர், அவருடைய சகோதரர்





அரிஞ்சய சோழர் ஒரு வருஷம் ஆட்சி புரிந்து இறந்த பிறகு சுந்தரசோழர் சிம்மாதனம் ஏறினார்.

பாட்டனாரின் விருப்பத்தின்படியும் மற்றும் இராஜ குடும்பத்தினர் அனைவருடைய சம்மதத்தின் பேரிலும் சுந்தரசோழர் சக்கரவர்த்தியானார். அவர் திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்தார். அவர்களுக்கு இரு வீரப் புதல்வர்களும் ஓர் அருமை மகளும் பிறந்தார்கள். சுந்தரசோழரின் சாம்ராஜ்யம் விரிந்தது போலவே அவருடைய புகழும் நாலா திசையிலும் பரவியது. ஆனாலும் அவர் மனத்திற்குள் மதுராந்தகனுக்குப் பட்டமில்லாமல் செய்த குற்றம் உறுத்திக்கொண்டிருந்தது. நோய்வாய்ப்பட்டுப் படுத்த பிறகு அவருடைய மனச்சாட்சி அவரை அதிகமாகத் தொந்தரவு செய்தது. இது போதாது என்று, ஈழத் தீவைச் சேர்ந்த ஊமைப் பெண் ஆவி வடிவத்தில் வந்து அவரைத் துன்புறுத்துவதாக எண்ணிப் பிரமைகொண்டிருந்தார். இந்தக் காரணங்களினால் அவர் தமது குமாரர்களாகிய ஆதித்த கரிகாலனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் சமாதானம் கூறிவிட்டு மதுராந்தகனுக்கே தமக்குப் பின்னால் பட்டம் கட்டி விட்டால் நல்லது என்று கருதத் தொடங்கினார்.

விஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் பழுவேட்டரையர் வம்சத்தினர் மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கி வந்தனர். சுந்தரசோழரின் காலத்தில் பெரிய பழுவேட்டரையர் சோழ நாட்டின் தனாதிகாரியாகவும் சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் தளபதியாகவும் பதவி வகித்து வந்தார்கள்.

அவர்களிடம் சுந்தரசோழர் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார். அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்ய அவர் விரும்பவில்லை.

பழுவேட்டரையர்களும், மற்றும் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும், முரட்டுச் சுபாவம் கொண்டவனாகிய ஆதித்த கரிகாலனை வெறுத்தார்கள்.

கரிகாலனுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் சகோதரன் அருள்மொழிவர்மனும் சோழ நாட்டு மக்களின் அன்பைப் பூரணமாகக் கவர்ந்திருந்தார்கள்.

இதனால் அவர்கள் பேரிலும் சிற்றரசர்கள் அசூயை கொண்டிருந்தார்கள். இக்காரணங்களினால் சிற்றரசர்கள் குலமுறைச் சட்டத்தை அனுசரித்து மதுராந்தகத்தேவனைச் சிம்மாதனத்தில் ஏற்ற விரும்பினார்கள். கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் அந்தரங்கக் கூட்டம் நடத்தி அவ்விதம் தீர்மானம் செய்தார்கள். இந்த அந்தரங்கக் கூட்டத்தின் நடவடிக்கைகளை வாணர் குலத்தைச் சேர்ந்த வந்தியத்தேவன் என்னும் வீரன் தெரிந்து கொள்ளும்படி நேர்ந்தது.

சுந்தரசோழ சக்கரவர்த்தியிடம் வந்தியத்தேவன் கரிகாலருடைய ஓலையைச் சேர்ப்பித்து விட்டுப் பழையாறையில் இளையபிராட்டி குந்தவையைச் சந்தித்தான். முற்பிறவியின் தொந்தத்தினால் அவர்களுடைய உள்ளங்கள் ஒத்து ஒன்றாயின. குந்தவையின் விருப்பத்தின்படி அவளுடைய தம்பி அருள்மொழிவர்மனை அழைத்து வர வந்தியத்தேவன் இலங்கை சென்றான். பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண் அவனைப் படகிலேற்றிக்கொண்டு போய் ஈழ நாட்டில் சேர்த்தாள். இலங்கையில் அநுராதபுரத்துக்கு அப்பால் வந்தியத்தேவன் அருள்மொழிவர்மனைச் சந்தித்துக் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான். அதில் "பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்கு அபாயம் நேர்ந்திருக்கிறது. உடனே திரும்பி வரவும்" என்று எழுதியிருந்தது.

அருள்மொழிவர்மன் குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் தாய் தந்தையருடன் உல்லாசப் படகிலே சென்றுகொண்டிருந்த போது தவறி நதியின் வெள்ளத்தில் விழுந்து விட்டான். விழுந்த சமயத்தில் அதைப் படகில் இருந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை. கரையிலேயிருந்த பெண் ஒருத்தி நதி வெள்ளத்தில் பாய்ந்து குழந்தையைக் காப்பாற்றிப் படகிலிருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு உடனே மறைந்துவிட்டாள். காவேரி அன்னைதான் அவ்வாறு இளவரசனைக் காப்பாற்றி மறைந்தாள் என்று பலரும் கருதினார்கள். இதன் காரணமாக, அருள்மொழிவர்மனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது.

பிற்காலத்தில் இராஜ ராஜசோழன் என்று சரித்திரப் பிரசித்தி அடைவதற்கிருந்த பொன்னியின் செல்வன் அப்போது ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்தான். மகிந்தன் என்னும் இலங்கை மன்னன் போரிலே தோற்று ஓடி மலைப் பிராந்தியத்தில் ஒளிந்துகொண்டான். புத்த பிக்ஷுக்களில் ஒரு பகுதியார் அருள்மொழிவர்மனை இலங்கை அரசனாக மணிமகுடம் சூட்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள். பொன்னியின் செல்வன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான்.

"அருள்மொழிவர்மன் ஈழநாட்டிலிருந்த போது, காடுகளில் பிச்சியைப் போல் திரிந்துகொண்டிருந்த ஊமைச் செவிட்டு ஸ்திரீ ஒருத்தியைப் பார்த்தான். அவள் இளவரசனைச் சில அபாயங்களிலிருந்து காப்பாற்றினாள். அவளே தன்னைப் பொன்னி நதியின் வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் என்றும் அறிந்துகொண்டான். அவள் சித்திரங்களின்

மூலம் தன்னுடைய பழைய வரலாற்றைத் தெரிவித்தாள். அதிலிருந்து மந்தாகினிக்கும் சுந்தரசோழருக்கும் இளம்பிராயத்தில் ஏற்பட்டிருந்த இணையில்லாத அன்பைக் குறித்து இளவரசன் அறிந்துகொண்டான்.

இப்போது வந்தியத்தேவனும் அந்த ஸ்திரீயை ஈழ நாட்டில் பார்க்க நேர்ந்தது. அவளுக்கும் பெரிய பழுவேட்டரையரின் இளையராணி நந்தினிக்கும் உருவப் பொலிவில் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவன் வியந்தான். அதைப் பொன்னியின் செல்வரிடமும் தெரியப் படுத்தினான்.

நந்தினி என்பவள் குழந்தைப் பிராயத்தில் பழையாறையில் ஆலய பட்டர் வீட்டில் வளர்ந்தாள். அவளிடம் ஆதித்த கரிகாலன் பிரியம் கொண்டான். குந்தவையோ அவளுடைய அழகைக் கண்டு அசூயைகொண்டாள். செம்பியன்மாதேவியின் கட்டளையினால் நந்தினி குழந்தைப் பருவத்திலேயே பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்டாள்.

ஆதித்த கரிகாலன் இறுதியான பாண்டியர் யுத்தத்தில் வீரபாண்டியனைத் தேடிச் சென்று வைகை நதிக்கரையில் நந்தினி வாழ்ந்த சிறிய குடிசையில் கண்டுபிடித்தான். நந்தினி வீரபாண்டியன் உயிரைக் காப்பாற்றும்படி இரந்து மன்றாடினாள். கரிகாலன் அதைக் கேளாமல் வீரபாண்டியனுடைய தலையை வெட்டிக் கொன்றான்.

பின்னர், நந்தினி வயது முதிர்ந்த பெரிய பழுவேட்டரையரை மணம்புரிந்துகொண்டாள். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த ரவிதாஸன், ரேவதாஸன், சோமன் சாம்பவன், கிரமவித்தன் முதலிய சதிகாரர்கள் வீரபாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்கும் பொருட்டுச் சுந்தர சோழரின் குலத்தை அடியோடு கருவழிப்பதாகச் சபதம் செய்திருந்தார்கள். அவர்களுக்குப் பழுவேட்டரையரின் இளைய ராணியாகிய நந்தினி இரகசியமாக உதவி புரிந்து வந்தாள்.

கொள்ளிடக் கரைக் காட்டில் சதிகாரர்கள் கடைசிமுறை இரகசியமாகக் கூடிப் பாண்டிய குலத்துச் சிறுவன் ஒருவனுக்குப் பட்டமும் கட்டினார்கள். ஆதித்த கரிகாலனைக் கொல்லும் பொறுப்பை நந்தினியே ஏற்றுக் கொண்டாள். அதேசமயத்தில் சுந்தர சோழரையும் பொன்னியின் செல்வனையும் கொன்று விட வேண்டும் என்றும் சதிகாரர்கள் முடிவு செய்தார்கள்.

பொன்னியின் செல்வன் ஈழ நாட்டிலிருந்து கோடிக்கரைக்குப் பிரயாணமாகி வந்தபோது நடுக்கடலில் கப்பல் சுழிக்காற்றில் அகப்பட்டு முழுகியது. அருள்மொழியும் வந்தியத்தேவனும் பூங்குழலியினால் உயிர் தப்பிக் கரை ஏறினார்கள். ஆனால் ஈழ நாட்டில் அப்போது பரவியிருந்த கொடிய தொற்று சுரம் பொன்னியின் செல்வனைப் பற்றிக்கொண்டிருந்தது. கரை ஏறும்போது அவன் பிரக்ஞை அற்றிருந்தான். அவனைப் பூங்குழலியும் அவளுடைய இன்னொரு அத்தை மகனாகிய சேந்தன் அமுதனும் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும் நாகைப்பட்டினத்துக்கு வந்து சூடாமணி விஹாரத்துக்கு அருகில் கால்வாய்க் கரையில் இருந்த நந்தி மண்டபத்தில் அருள்மொழியைச் சந்தித்தார்கள். சோழ நாடெங்கும் சதியும் குழப்பமுமாக இருப்பதால் இன்னும் சில நாள் சூடாமணி விஹாரத்திலேயே தங்கிப் பூரண உடல் வலிவு பெறும்படி குந்தவை அருள்மொழியைக் கேட்டுக் கொண்டாள். சகோதரியிடம் எல்லையற்ற மரியாதை வைத்திருந்த பொன்னியின் செல்வன் அதற்கு இணங்கினான்.

ஊமை ஸ்திரீ மந்தாகினி உயிரோடிருப்பதை அறிந்த குந்தவை அவளை எப்படியாவது சுந்தர சோழரிடம் சேர்ப்பிக்க விரும்பினாள். மந்தாகினி பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்காகக் கோடிக்கரை வந்தாள். முதன் மந்திரி அநிருத்தரின் கட்டளைப்படி அவளைப் பலவந்தமாகக் கைப்பற்றித் தஞ்சைக்கு அழைத்துச் சென்றார்கள். தஞ்சைக்கு அருகில் அவள் தப்பி ஓடிவிட்டாள். சதிகாரர்களான ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் பழுவூர் அரண்மனையில் புகுவதைப் பார்த்து மந்தாகினி அவர்களைப் பின்தொடர்ந்தாள். பொக்கிஷ நிலவறை வழியாகச் சுந்தர சோழர் அரண்மனையை அடைந்தாள். அவர் தூங்குகிறார் என்று எண்ணி அருகில் நெருங்கினாள். சுந்தர சோழர் அவளை மந்தாகினியின் ஆவி உருவம் என்று எண்ணி விளக்கை எடுத்து அவள் மீது எறிந்தார். குந்தவையும் மற்றவர்களும் ஓடி வந்து அவருக்கு உண்மையைத் தெரிவித்தார்கள். சுந்தர சோழர் அவள் மீண்டும் தம் வாழ்க்கையில் வந்ததை விரும்பவில்லை.

இருப்பினும் முதன் மந்திரி பிரமராயர், நந்தினிக்கும் மந்தாகினி தேவிக்கும் உள்ள முகஜாடை ஒற்றுமையை எடுத்துச் சொல்லி, ஒருவேளை நந்தினி, சுந்தரசோழரின் மகளாகவே இருக்கலாம் என்று தாம் ஐயப்படுவதை வெளிப்படுத்தியதும், பழுவேட்டரையரும் நந்தினியும் ஊர் திரும்பும் வரை மந்தாகினி அரண்மனையிலேயே இருக்க சம்மதித்தார். அன்றிரவு மந்தாகினி தேவி, குந்தவையை எழுப்பி சிற்ப மண்டபத்துக்கு அழைத்துச் சென்றாள். ஆங்கோர் உருவம், சுரங்க நுழைவாயிலருகே அசைவது போலிருக்கக்கண்டு, குந்தவை, திடுக்கிட்டாள். பிரமையோ என்றும் ஐயம் கொண்டாள்.

முப்பத்து ஏழாம் அத்தியாயம்

கடம்பூரில் கலக்கம்

ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்கு வந்ததிலிருந்து அம் மாளிகையில் நிரந்தரமாக வசித்தவர்களும் விருந்தினராக வந்தவர்களும் முள்ளின் மேல் நிற்பவர்கள் போலவும் நெருப்பின் மேல் நடப்பவர்கள் போலவும் காலங் கழிக்க வேண்டியிருந்தது. இளவரசரின் நாவிலிருந்து எந்த நிமிஷத்தில் எந்தவிதமான அஸ்திரம் புறப்படும் என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. ஆகையால் எல்லாரும் தவியாய்த் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சோழ சிம்மாசனத்தில் மதுராந்தகனை ஏற்றி வைப்பதற்குச் செய்யப்படும் சதியாலோசனை பற்றிக் கரிகாலன் அடிக்கடி ஜாடைமாடையாகக் குறிப்பிட்டு மற்றவர்களைத் துடிதுடிக்கச் செய்துவந்தான். பழுவேட்டரையரால் இதைப் பொறுக்க முடியவில்லை. சிற்றரசர்களின் அபிப்பிராயத்தைக் கரிகாலனிடம் வெளிப்படையாகச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று சம்புவரையரிடம் வற்புறுத்தினார். சம்புவரையரோ, "கொஞ்சம் பொறுங்கள். எப்படியும் நமது விருந்தாளியாக வந்திருக்கிறான். வெறும் முரடனாகவும் இருக்கிறான். ஒன்று நினைக்க வேறொன்றாக முடிந்தால் என்ன செய்வது? நல்ல சமயம் பார்த்துச் சொல்வோம்'' என்று தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தார்.

எப்படி அந்தப் பேச்சை ஆரம்பிப்பது என்ற தர்மசங்கடத்தை அவர்களுக்கு வைக்காமல் ஆதித்த கரிகாலரும் சேர்ந்திருந்த சமயத்தில் பட்டவர்த்தனமாக அதைப் பற்றிக் கேட்டு விட்டான்.

"பழுவூர்ப் பாட்டனிடமும் கடம்பூர் மாமனிடமும் ஒரு முக்கியமான யோசனை கேட்பதற்காகவே நான் இங்கு வந்தேன். அதைக் கேட்டு விடுகிறேன். மூன்று வருஷங்களுக்கு முன் என் தகப்பனார் என்னைச் சோழ ராஜ்யத்தின் பட்டத்து இளவரசனாக்கிப் பகிரங்கமாக முடிசூட்டினார். அதற்கு நீங்கள் எல்லாரும் சம்மதம் கொடுத்தீர்கள். இப்போது சக்கரவர்த்தி தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து முடிசூட்ட வேண்டும் என்று விரும்புகிறாராம். அதற்காகவே தஞ்சாவூருக்கு வரும்படியாக எனக்கு அழைப்புக்கு மேல் அழைப்பு அனுப்பிக் கொண்டிருக்கிறார். நானும் போகாமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறேன். எதற்காகத் தஞ்சாவூர் போக வேண்டும்? போய், என் தந்தையின் வார்த்தையை நேருக்கு நேர் ஏன் புறக்கணிக்க வேண்டும்? அதைவிடப் போகாமலிருந்து விடுவதே நல்லதல்லவா? பழுவூர்ப் பாட்டா! கடம்பூர் மாமா! நீங்கள் பெரியவர்கள். எல்லா நியாயமும் தெரிந்தவர்கள். நீங்களே சொல்லுங்கள். இராஜ்யத்தை மதுராந்தகனுக்கு விட்டுக் கொடுத்து விடும்படி என் தந்தை இத்தனை காலத்துக்குப் பிறகு என்னைக் கேட்பது நியாயமாகுமா? அதை நான் மறுதளித்தல் குற்றமாகுமா?'' என்று ஆதித்த கரிகாலன் திட்டவட்டமாகக் கேட்டதும், எல்லாருமே திகைத்துப் போனார்கள்.

பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, பதில் சொல்லச் சிறிது காலம் கடத்தலாம் என்று எண்ணி, "கோமகனே! இந்த விஷயமாகத் தங்கள் திருக்கோவலூர்ப் பாட்டனை யோசனை கேட்டிருப்பீர்களே? மலையமான் என்ன சொல்லுகிறார்?'' என்றார்.

"ஆகா! அந்தக் கிழவனாரின் இயல்புதான் உங்களுக்கெல்லாம் தெரியுமே? அவருடைய பேரப்பிள்ளை சிம்மாதனத்தை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுத்து விட அவர் சம்மதிப்பாரா? அதைக்காட்டிலும் என்னையும் என்னைப் பெற்ற தாயையும் சேர்த்து அவர் வெட்டிப் போட்டு விடுவார்! இப்போதே மலையமான் சைன்யம் சேர்க்கத் தொடங்கி விட்டார் - அவருடைய பேரனுடைய சிங்காதன உரிமையை நிலைநாட்டுவதற்காக! ஆனால் நான் அவருடைய பேச்சைக் கேட்டு மட்டும் நடக்கப் போவதில்லை. நீங்கள் எல்லாரும் எப்படிச்

சொல்கிறீர்களோ, அப்படி நடந்துகொள்வேன்!'' என்று கரிகாலன் மிக்க சாதுப் பிள்ளையைப் போல் கூறினான்.

இதனால் ஏமாந்து போன பழுவேட்டரையர், ''மலையமானைப் போல் தந்தையைத் தனயன் எதிர்க்கும்படி தூண்டி விடக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. சக்கரவர்த்தியின் கட்டளை எதுவாயிருந்தாலும் அதை அனுசரித்து நடக்க நாம் எல்லாரும் கடமைப்பட்டவர்கள். ஆனால் நியாயம் இன்னது என்பதைச் சொல்லும் பாத்தியதை நமக்கு உண்டு. சக்கரவர்த்தி இந்த விஷயமாகச் சொல்வதில் நியாயமே இல்லையென்று சொல்ல முடியாது. இந்தச் சோழ ராஜ்யத்தின் மீது மதுராந்தகத் தேவருக்கு உரிமையே கிடையாது என்றும் சொல்லுவதற்கில்லை. இளவரசே! தாங்கள் கேட்கிறபடியினால் எங்கள் மனத்தை விட்டுச் சொல்கிறோம். முடிவு தங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. இந்த விவாதத்தை வளரும்படி விடுவது இராஜ்யத்துக்கு மிக்க அபாயகரமானது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகையால், ஏதேனும் ஒரு சமரச முடிவுக்கு வருவது நல்லது. சோழராஜ்யம் இப்போது முன்னைப் போல் இரண்டு வெள்ளாறுகளுக்கு மத்தியில் குறுகிக் கிடக்கவில்லை. குமரி முனையிலிருந்து கிருஷ்ணை நதி வரையில் பரவிப் படர்ந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரித்தாலும் ஒவ்வொன்றும் பெரிய இராஜ்யமாக இருக்கும். அவ்விதம் கொள்ளிடம் நதிக்குத் தெற்கேயுள்ள ராஜ்யத்தை மதுராந்தகத் தேவருக்கும் வடக்கேயுள்ள பகுதியைத் தங்களுக்கும் உரியதென்று பிரித்துக் கொடுப்பது நியாயமாயிருக்கும். இது எங்கள் முடிவான கருத்து. தாங்கள் இதை ஒப்புக்கொண்டால் மேலே செய்ய வேண்டியதைச் செய்யலாம். சக்கரவர்த்தியை இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கச் செய்யும் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன்!'' என்றார் பழுவேட்டரையர்.

ஆதித்த கரிகாலன் அப்போது கலகலவென்று சிரித்தது பழுவேட்டரையருடைய வயிற்றில் அனலை மூட்டியது.

''பாட்டா! சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துத் தெற்கு இராஜ்யத்தில் பழுவேட்டரையர்களும் வடக்கு இராஜ்யத்தில் சம்புவரையர்களும் அதிகாரம் செலுத்துவது சரியான பங்கீடுதான். உங்கள் இரு குடும்பங்களும் என் பாட்டனுக்குத் தகப்பனார் காலத்திலிருந்து செய்து வந்திருக்கும் சேவைக்கு உரிய வெகுமதிதான். ஆனால் இராஜ்யத்தைப் பிரிப்பதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. வழிவழியாக வந்த இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்; தாலி கட்டிய மனைவியைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்! கிழவர்களாகிய உங்களுக்கு அது சம்மதமாயிருக்கலாம்! எனக்குச் சம்மதம் இல்லை!'' என்று கரிகாலன் கூறியபோது, பெரிய பழுவேட்டரையரின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் கோதிப்புடன் எழுந்து நின்றார். உடை வாளை உறையிலிருந்து எடுப்பதற்கும் ஆயத்தமானார்.

அச்சமயத்தில், கரிகாலன், ''பாட்டா! என்ன, இதற்குள் எழுந்து போகப் பார்க்கிறீர்கள்? என்னுடைய யோசனையை முழுதும் கேட்டு விட்டுப் போங்கள். சோழ ராஜ்யத்தைப் பிரிப்பதற்கு எனக்குச் சம்மதமில்லை. என் குலத்து முன்னோர்களும், நீங்களும் உங்கள் முன்னோர்களும், ஐந்து தலைமுறையாகப் பாடுபட்டு எத்தனையோ வீராதி வீரர்களின் உயிர்களைப் பலிகொடுத்துச் சோழ ராஜ்யம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரித்துச் சிறிய பகுதிகளாக்குவது பாவமாகும். வீர சொர்க்கத்திலுள்ள இராஜாதித்தர் முதலிய நம் முன்னோர்கள் நம்மைச் சபிப்பதற்கு ஏதுவாகும். ஆகையால் அந்த யோசனையை விட்டு விடுங்கள். இந்தப் பெரிய சோழ ராஜ்யம் முழுவதையும் மதுராந்தகனுக்கே விட்டுக் கொடுத்து விட நான் ஆயத்தமாயிருக்கிறேன். அதற்கு நியாயமும் உண்டு. என் பெரிய பாட்டனாரின் மகன் மதுராந்தகன். ஆகையால் என் தந்தைக்குப் பதிலாகவே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டியிருக்க வேண்டும். பராந்தகச் சக்கரவர்த்தியின் ஏற்பாட்டினால் என் தந்தை முடிசூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்தத் தவறு அவரோடு போகட்டும். 'தந்தைக்குப் பிறகு மகன்' என்ற நியதிப்படி எனக்கு இந்த ராஜ்யத்தின் பேரில் பூரண உரிமை இருந்தாலும் அதை விட்டுக் கொடுத்து விடுகிறேன். ஆனால்

அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. வடதிசையின் மீது படை எடுத்துச் செல்ல மூன்று லட்சம் போர்வீரர் கொண்ட சைன்யம் எனக்கு வேண்டும். அந்த மாபெரும் சைன்யத்துக்கு வேண்டிய தளவாடச் சாமான்களும் சாமக்கிரியைகளும் ஒரு வருஷத்துக்கு உணவுப் பொருள்களும் திரட்டித் தர வேண்டும். மாகடலில் செல்லக் கூடிய முந்நூறு பெரிய மரக்கலங்களும் வேண்டும். பார்த்திபேந்திரனைக் கப்பல் படைத் தலைவனாக்கிக் கடலோரமாக வரச் செய்துவிட்டு, நான் தரை மார்க்கமாக வடநாட்டின் மீது படை எடுத்துச் செல்வேன். கங்கை நதியின் முகத் துவாரத்தில் நானும் பார்த்திபேந்திரனும் சந்திப்போம். பிறகு மேலும் வடக்கே போவோம். என் குலத்து முன்னோன், என் பெயர் கொண்ட கரிகால் வளவன், இமய மலை மீது புலிக்கொடியை நாட்டினான் என்று கவிஞர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். என் முன்னோர் சாதித்ததை நானும் இப்போது மறுபடியும் சாதிப்பேன். என்னுடைய வாள் வலி கொண்டும், எனக்குத் துணை வரும் வீரர்களின் தோள் வலி கொண்டும் கிருஷ்ணை நதிக்கு வடக்கே நானாகக் கைப்பற்றும் நாடுகளுக்குச் சக்கரவர்த்தியாவேன். அன்றி, போரில் மடிந்தால், சோழ குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன். பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா! என்ன சொல்கிறீர்கள்? இந்த நிபந்தனையை நிறைவேற்றித் தர நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?"

இவ்விதம் கம்பீரமாகக் கேட்டு விட்டுக் கரிகாலன் நிறுத்தினான். கிழவர்கள் இருவரும் திகைத்துப் போனார்கள். பழுவேட்டரையர், தடுமாற்றத்துடன், "இளவரசே! தங்களுடைய நிபந்தனையை ஒப்புக் கொள்ள நாங்கள் யார்? எங்களுக்கு என்ன உரிமை? சக்கரவர்த்தியை அல்லவா கேட்க வேண்டும்!" என்றார்.

கரிகாலன் கொதித்து எழுந்து, இடிமுழக்கக் குரலில் கர்ஜனை செய்தான்:-





"பாட்டா! சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறீர்கள்? என்னை ஏமாற்ற முடியாது! என் தந்தையை நீங்கள் அரண்மனையில் சிறைப்படுத்தி நீங்கள் ஆட்டி வைத்தபடி ஆடும் பொம்மையாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அது எனக்குத் தெரியாது என்றா எண்ணினீர்கள்? சின்னப் பழுவேட்டரையர் அநுமதியின்றி யாராவது என் தந்தையைப் பார்க்க முடியுமா? என் தம்பியை ஈழத்திலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்கு என் தந்தை கட்டளை போட்டது சக்கரவர்த்தியின் சொந்த விருப்பத்தினாலா? உங்கள் கட்டாயத்தினாலா? தேச மக்களின் கண்ணுக்குக் கண்ணான அருமை மகனை, வீராதி வீரனை, சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி எந்தத் தகப்பனாவது இஷ்டப்பட்டுக் கட்டளையிடுவானா? அருள்மொழியைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து கடலில் மூழ்க அடித்துக் கொன்று விட்டதாக உங்கள் பேரில் இன்று சோழ நாட்டு மக்கள் எல்லாரும் ஆத்திரப்பட்டுக் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்..."

"இளவரசே! அத்தகைய அபாண்டமான பழியை யார் சொன்னது? சொன்னவனுடைய நாவைத் துண்டித்து அவனையும் கண்டதுண்டமாக்குவேன்...!" என்று பழுவேட்டரையர் அலறினார்.

"பழிசொல்லுகிறவர் ஒருவராயிருந்தால் நீங்கள் கண்ட துண்டம் செய்யலாம். பதினாயிரம், லட்சம், பத்து லட்சம் பேர் சொல்லுகிறார்கள். அவ்வளவு பேரையும் நீங்கள் தண்டிப்பதாயிருந்தால் சோழ நாடு பிணக் காடாகவும் சுடுகாடாகவும் மாறி விடும். சிவ பக்தனாகிய மதுராந்தகன் ஆட்சி புரிவதற்குச் சோழ நாடு தகுந்த இராஜ்யமாயிருக்கும்! ஆனால் பாட்டா! அந்தப் பேச்சை நான் நம்பவில்லை. மக்கள் அறிவற்ற மூடர்கள், ஆராய்ந்து பாராமல் ஒருவன் கட்டி விட்ட கதையையே மற்றவர்களும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். சோழ குலத்துக்குப் பரம்பரைத் துணைவர்களான நீங்கள் அத்தகைய படு பாதகத்தை ஒருநாளும் செய்திருக்க மாட்டீர்கள். அருள்மொழி கடலில் மூழ்கியிருந்தால் அது அவனுடைய தலைவிதியின் காரணமாகத்தான் இருக்க வேண்டும். 'மூன்று உலகமும் ஆளப் பிறந்தவன்' என்று கூறி வந்த ஜோதிடர்கள், ஆரூடக்காரர்கள், ரேகை சாஸ்திரிகள் வாயில் மண்ணைப் போடுவதற்காகவே அவன் கடலில் மூழ்கி மாண்டிருக்க வேண்டும். பாட்டா! நீங்கள் எவ்வளவு பெரிய வீராதி வீரராயிருந்தாலும் நடுக்கடலில் சுழிக் காற்றை வரவழைப்பதற்கும் கப்பலின் பாய் மரத்தின் மீது இடி விழச் செய்வதற்கும் உங்களால் கூட முடியாது. ஒரு வேளை அது பாண்டிய நாட்டு மந்திரவாதிகளின் காரியமாயிருக்கலாம். நீங்கள் அதற்குப் பொறுப்பில்லை. ஆகையால் அருள்மொழியின் கதிக்கும் நீங்கள் பொறுப்பாளியில்லை. ஆனால் 'சக்கரவர்த்தியைக் கேட்டுச் சொல்ல வேண்டும்' என்று மட்டும் இனி என்னிடம் சொல்லாதீர்கள். அப்புறம், அந்த அன்பில் பிரம்மராயனைக் கேட்டுச் சொல்ல வேண்டும் என்று கூடச் சொல்வீர்கள். சக்கரவர்த்தியும் முதன் மந்திரியும் ஏதோ அந்தப் பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் விருப்பத்தை மீறி அவர்கள் எதுவும் செய்ய முடியாது. பழுவூர் இளைய பாட்டி நந்தினிதேவியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று வேணுமானால் சொல்லுங்கள்...!"

இச்சமயம் கந்தமாறன் குறுக்கிட்டு "ஐயா! எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருப்பவர்களை..." என்று ஏதோ தடுமாற்றத்துடன் இரைந்து சொல்ல ஆரம்பித்தான்.

கரிகாலன் அவன் பக்கம் கண்களில் தீ எழ நோக்கி, முப்புரம் எரித்த சிவனைப் போலச் சிரித்து, "கந்தமாறா! இது உங்கள் வீடா? மறந்து விட்டேன்! கொல்லிமலை வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த வீராதி வீரன் நீ என்பதையும் மறந்து விட்டேன். உன் வீட்டில், அதுவும் நீ இருக்கும் இடத்தில், கொஞ்சம் பயந்துதான் பேச வேண்டும்! தவறாக என்ன சொல்லி விட்டேன்? உன் வீட்டு விருந்தாளிகளை என்ன செய்துவிட்டேன்...? கந்தமாறா! ஏன் உன் கைகால் நடுங்குகிறது? ஈழத்தில் பரவியிருக்கும் நடுக்கு ஜுரம் உனக்கும் வந்துவிட்டதா? நீ ஈழத்துக்குக் கூடப் போகவில்லையே?" என்றான்.

வந்தியத்தேவன் அப்போது, "கோமகனே! கந்தமாறனுக்கு நடுக்கு ஜுரம் இல்லை. தாங்கள் பழுவூர் இளையராணியைப் பாட்டி என்று சொன்னதில் அவனுக்குக் கோபம்" என்றான்.

கந்தமாறன் வந்தியத்தேவனைக் குரோ

தத்துடன் பார்த்துக்கொண்டு கத்தியை எடுக்கத் தொடங்கினான்.

பார்த்திபேந்திரன் அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்துக் காதோடு ஏதோ சொன்னான். கந்தமாறன் அடங்கினான். அவனுடைய உடல் மட்டும் சிறிது நேரம் நடுங்கிக் கொண்டிருந்தது.

கரிகாலன் அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு, பழுவேட்டரையர் பக்கம் திரும்பி, "பாட்டா! இளங்காளைகள் இப்படித்தான் கட்டுக் கடங்காமல் சில சமயம் துள்ளிக் குதிப்பார்கள். அவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் எனக்குப் பாட்டன் முறை; ஆகையால் இளையராணி எனக்குப் பாட்டி தானே? அப்படி நான் அழைப்பதில் என் பாட்டிக்கும் வருத்தம் இல்லை; தங்களுக்கும் வருத்தமில்லை. இந்தச் சிறு பிள்ளைகளுக்கு எதற்காக ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது? போனால் போகட்டும்! நான் ஆரம்பித்த விஷயத்தை விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டேன். என் தந்தை – சக்கரவர்த்தியின் பேரில் தாங்கள் பாரத்தைச் சுமத்த வேண்டாம். தாங்கள் சம்மதித்தால் என் தந்தையும் சம்மதித்தாற் போலத்தான். பொக்கிஷம் தங்கள் கையில் இருக்கிறது. வடபுலத்துக்குப் படையெடுத்துப் போகிறேன் என்றால், சோழ நாட்டிலிருந்து மூன்று லட்சம் என்ன, முப்பது லட்சம் வீரர்கள் போட்டியிட்டுக் கொண்டு வருவார்கள். முந்நூறு கப்பல்களைச் சேகரித்துக் கொடுப்பதிலும் கஷ்டம் ஒன்றுமில்லை. தாங்கள் சம்மதிக்க வேண்டும்; மதுராந்தகத் தேவனும் சம்மதிக்க வேண்டும்! அவ்வளவுதான்! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கரிகாலன் நிறுத்தினான்.

திணறித் திண்டாடித் திக்குமுக்காடிப் போன பழுவேட்டரையர் தொண்டையை மறுபடியும் கனைத்துக் கொண்டு கூறினார்: – "கோமகனே! தங்கள் அதிசயமான விருப்பத்துக்கு நான் சம்மதித்தாலும், மதுராந்தகத்தேவரின் சம்மதம் எப்படியும் வேண்டும் அல்லவா? சக்கரவர்த்தியிடம் விடைபெற்றுக் கொள்ளாமல் தாங்கள் திக்விஜயத்துக்குப் புறப்பட முடியுமா? ஆகையால் எல்லாருமாகத் தஞ்சாவூருக்குப் போவோம்..."

"அது மட்டும் முடியாது, பாட்டா! தஞ்சாவூருக்குப் போன பிறகு என் தந்தை வேறுவிதமாகக் கட்டளையிட்டால் என்னால் அதை மீற முடியாமற் போய் விடும். அப்புறம் அங்கே என் அன்னை மலையமான் மகள் இருக்கிறாள். என் சகோதரி இளையபிராட்டி இருக்கிறாள். அவர்களுக்கு முடிதுறந்து தேசாந்தரம் செல்வது சம்மதமாயிராது. அவர்கள் பேச்சை மீறுவதும் கஷ்டமாயிருக்கும். பாட்டா! இந்த விஷயம் இந்தக் கடம்பூர் மாளிகையில்தான் முடிவாக வேண்டும். தாங்கள் தஞ்சைக்குப் போய் மதுராந்தகனை இங்கே அழைத்து வாருங்கள். நமக்குள் பேசி முடிவு செய்த பிறகு தந்தையிடம் தெரிவிக்கலாம். படையெடுப்புக்கு எல்லாம் ஆயத்தமான பிறகு நான் தஞ்சைக்கு வந்து என் பெற்றோர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்புகிறேன். அல்லது மதுராந்தகனுக்கு இப்போதே பட்டம் கட்டிவிட்டு என் பெற்றோர்கள் காஞ்சிக்கு வரட்டும். அங்கேநான் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் அவர்களை இருக்கச் செய்து விட்டு நான் புறப்படுகிறேன்" என்றான்.

பழுவேட்டரையர் சம்புவரையரைப் பார்த்தார். சம்புவரையரோ கூரை மேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடமிருந்து உதவி ஒன்றும் கிடைப்பதற்கில்லையென்று கண்டு, பழுவேட்டரையர், "கோமகனே! தங்களுடைய கட்டளைக்கு மாறாக நான் என்ன சொல்ல முடியும்?" என்றார்.

"கட்டளை என்று சொல்லாதீர்கள், பாட்டா! சோழசாம்ராஜ்யத்தின் சேவையில் தலை நரைத்துப் போன தங்களுக்கு இந்தச் சிறுவனா கட்டளையிடுவது? என்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பதாகச் சொல்லுங்கள்!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"ஆகட்டும்" என்று சொல்லிப் பழுவேட்டரையர் கனைத்துக் கொண்டார்.

"மிக்க வந்தனம், பாட்டா! அப்படியானால் சீக்கிரமே புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்! மதுராந்தகனைப் பகிரங்கமாகவே யானை மீது ஏற்றி வைத்து இவ்விடத்துக்கு அழைத்து வாருங்கள். அல்லது பொன்ரதத்தில் ஏற்றி அழைத்து வாருங்கள். இளையபாட்டியின் மூடு பல்லாக்கு மட்டும் இந்தத் தடவை வேண்டாம்!" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் கரிகாலன்.

பின்னர் கந்தமாறன் முதலியவர்களைப் பார்த்து, "கந்தமாறா! உன் வீட்டுக்கு மேலும் விருந்தாளிகள் வரப் போகிறார்கள். சுந்தர சோழருக்குப் பிறகு சோழ நாட்டுக்குச் சக்கரவர்த்தியாகப் போகிற மதுராந்தகர் வரப் போகிறார். அவருக்குப் பட்டமகிஷியாகப் போகும் சின்னப் பழுவேட்டரையரின் மகளையும் உடன் அழைத்து வந்தாலும் வருவார். கடம்பூர் மாளிகை ஒரே கோலாகலமாகத்தானிருக்கும். பழுவூர்ப் பாட்டனார் தஞ்சைக்குப் புறப்படட்டும். நாம் வேட்டைக்குப் புறப்படலாம், வாருங்கள்! வில் வித்தையில் ஒரு காலத்தில் நான் வல்லவனாக இருந்தேன். 'அர்ச்சுனனுக்கு அடுத்தபடி ஆதித்த கரிகாலன் தான்' என்று பெயர் வாங்கியிருந்தேன். மூன்று வருஷங்களாக வில்லைத் தொடாமல் வில் வித்தையே மறந்து போய் விட்டது. மறுபடியும் பழக்கம் செய்து கொள்ள வேண்டும். பார்த்திபேந்திரா! வந்தியத்தேவா! எல்லாரும் கிளம்புங்கள். வேட்டைக்கு எங்கே போகலாம்? கொல்லிமலைக்குப் போகலாமா?" என்று பொதுப்படையாகக் கரிகாலன் கேட்டான்.

இத்தனை நேரமும் எந்தப் பேச்சிலும் கலந்து கொள்ளாமலிருந்த சம்புவரையர், "கோமகனே! கொல்லிமலை வெகு தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. வீரநாராயண ஏரியின் மேற்குக் கரையில் அடர்ந்த காடு இருக்கிறது. அதைத் 'தண்டகாரண்யம்' என்றே சொல்வதுண்டு. வேட்டைக்கு வேண்டிய காட்டு மிருகங்களும் அங்கே ஏராளமாக நிறைய இருக்கின்றன. அந்தக் காட்டிலிருந்து வேட்டையாடிக் கொண்டு வந்த மிருகங்கள்தான் நமது வேட்டை மண்டபத்திலே உள்ளவை. ஏரிக்கரைக் காடு நமது மாளிகைக்கு சமீபத்திலும் இருக்கிறது. காலையில் வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றால் இரவு வீடு திரும்பி விடலாம்!" என்றார்.

"அப்படியே செய்யலாம், ஐயா! இந்த மாளிகையில் நான் விருந்தாளியாயிருக்கும் வரையில் தாங்கள் வைத்ததே எனக்குச் சட்டம். தங்கள் குமாரி மணிமேகலையையும் வேட்டைக்கு அழைத்துப் போகலாமா? அவள் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாயிருக்கிறது!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"எனக்கு ஆட்சேபமில்லை. மணிமேகலையைக் கேட்டுப் பார்க்கலாம்!" என்றார் சம்புவரையர்.

அப்போது கந்தமாறன் "வேட்டைக்குப் போகும் இடத்தில் பெண்கள் எதற்கு? அவர்கள் பத்திரமாயிருக்கிறார்களா என்று பார்ப்பதற்குத்தான் வேலை சரியாயிருக்கும். வேட்டையில் கவனம் செலுத்த முடியாது. மேலும், நந்தினி தேவிக்கு இங்கே துணை வேண்டுமல்லவா?" என்றான்.

"ஆமாம்; ஆமாம். கந்தமாறனுக்கு எப்போதும் பழுவூர்ப் பாட்டியைப் பற்றித்தான் கவலை. மணிமேகலையை அழைத்துப் போவதில் இன்னொரு கஷ்டமும் இருக்கிறது. அவள் துள்ளிக் குதிப்பதைப் பார்த்துவிட்டு மான் துள்ளிக் குதிப்பதாக நினைத்து யாராவது அவள் பேரில் அம்பை விட்டாலும் விடுவார்கள். பெண்கள் அரண்மனையிலேயே இருக்கட்டும். நாம் வேட்டைக்குப் போகலாம். நாளை அதிகாலையில் புறப்பட வேண்டும். இன்றிரவு குரவைக் கூத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டு, அவரவர்களும் சீக்கிரமாகத் தூங்குங்கள். ஐயா! வேட்டைக்காரர்களுக்கெல்லாம் இப்போதே சொல்லி வைத்து விடுங்கள்! வந்தியத்தேவா! வா! நம்முடைய ஜாகைக்குப் போகலாம்!" என்று சொல்லி ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்பட்டான். கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் அவர்களைச் சிறிது அசூயையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

சம்புவரையர் வேட்டைக்காரர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்காகச் சென்றார். பழுவேட்டரையர் நந்தினியைத் தேடி அந்தப்புரத்துக்குப் போனார்.

முப்பத்து எட்டாம் அத்தியாயம்

நந்தினி மறுத்தாள்

பழுவேட்டரையர் சிறிது உற்சாகத்துடனேயே நந்தினியைப் பார்க்கப் போனார். கடம்பூருக்கு அவர் புறப்பட்டு வந்தபோது என்ன நம்பிக்கையுடன் வந்தாரோ, அது ஒன்றும் இது வரையில் நிறைவேறவில்லை. சிறு

பிள்ளையாகிய ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் மாளிகையிலே தருவித்து வைத்துக்கொண்டால், அவனை நயத்தினாலும் பயத்தினாலும் தம்முடைய விருப்பத்தின்படி நடக்கச் செய்யலாம் என்று அவர் எண்ணியிருந்தார். தாமும் சம்புவரையரும் சொல்வதற்கு அவன் கட்டுப்பட்டே தீர வேண்டும் என்று நம்பினார். சோழராஜ்யம் முழுவதற்கும் மதுராந்தகனுக்கு உடனடியாகப் பட்டம் கட்டுவதிலுள்ள அபாயம் அவருக்குத் தெரிந்தேயிருந்தது. வடக்கே மலையமானும் தெற்கே கொடும்பாளூர் வேளானும் அதற்கு விரோதமாயிருப்பார்கள். கரிகாலன் அவர்களுடன் சேர்ந்து கொண்டால் உள்நாட்டு யுத்தம் மூண்டே தீரும். அதன் முடிவு எப்படியாகும் என்று யார் சொல்ல முடியும்? பொதுமக்களில் பெரும்பாலோர் சுந்தர சோழருடைய புதல்வர்களின் பக்கமே இருப்பார்கள். மதுராந்தகனுடைய தாயே அவனுக்கு விரோதமாயிருக்கிறாள். காளாமுகக் கூட்டத்தாரை மட்டும் நம்பி உள் நாட்டுப் போரில் இறங்க முடியுமா? பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும், பாலாற்றுக்கு வடக்கேயுள்ள நாடுகளிலும் கலகங்கள் கிளம்பினாலும் கிளம்பும். ஆகையால் இப்போதைக்கு மதுராந்தகனுக்குப் பாதி ராஜ்யம் என்று பிரித்துக் கொண்டால், அதுவும் தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட தென் சோழ ராஜ்யமாயிருந்தால், பிற்பாடு போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம். கொடும்பாளூர் வேளானின் செல்வாக்கை ஒருவழியாகத் தீர்த்துக் கட்டிவிடலாம். பிறகு, வடக்கே திரும்பித் திருக்கோவலூர் மலையமானையும் ஒரு கை பார்க்கலாம். கரிகாலன் வெறும் முரடன். என்றைக்காவது ஒரு நாள் ஏதாவது ஏடாகூடமாக காரியத்தில் இறங்கி அற்பாயுளில் இறக்கக்கூடும். அப்படி நேர்ந்தால் எல்லாக் கவலையும் தீர்ந்தது. இப்போதைக்குப் பாதி ராஜ்யம் என்று ஏற்பாடு செய்துகொள்வது நல்லது.

இளைய ராணி நந்தினியுடனும் கலந்தாலோசித்ததின் பேரில் பெரிய பழுவேட்டரையர் இத்தகைய முடிவுக்கு வந்து, அதன் பிறகுதான் கடம்பூருக்கு வந்தார்.



கரிகாலனையும் அங்கு அழைத்து வரச் செய்தார். ஆனால் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. பெரியவர்களுக்கு அடங்கி நடப்பதற்குப் பதிலாகக் கரிகாலன் பெரியவர்களை அதட்டி உருட்டி அதிகப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தான். அவனுடைய கேலிப் பேச்சுக்களையும் இருபொருள் கொண்ட மொழிகளையும் பழுவேட்டரையரால் பொறுக்க முடியவில்லை. முக்கியமாக அவரைப் பற்றிக் கரிகாலன் அடிக்கடி வயதான கிழவர் என்று குறிப்பிட்டதும், இளைய ராணியைப் பாட்டி என்று அழைத்து வந்ததும் கூரிய விஷந்தோய்ந்த பாணங்களைப் போல் அவரைத் துன்புறுத்தி வந்தன. போதும் போதாதற்குச் சம்புவரையரின் போக்கும் அவ்வளவு திருப்திகரமாயில்லை. தமக்குப் பக்கபலமாக நின்று கரிகாலனுடைய அதிகப்பிரசங்கத்தை அடக்க முயல்வதற்குப் பதிலாகச் சம்புவரையர் பெரும்பாலும் வாயை மூடி மௌனம் சாதித்துக் கொண்டிருந்தார். ஏதாவது பேசினாலும் தயங்கித் தயங்கி வழவழா குழகுழா என்று பேசினார். கரிகாலன் தமது மாளிகைக்கு விருந்தாளியாக வந்து விட்டபடியினால் ஏதாவது ஏடாகூடமாய் நடந்து விடக் கூடாதென்று அப்படி ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கிறார் போலும்! காரணம் எதுவாயிருந்தாலும் சம்புவரையரின் போக்கு கொஞ்சங்கூடப் பழுவேட்டரையருக்குத் திருப்திகரமாக இல்லை.

இன்றைக்குக் கரிகாலன் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையான பேச்சு, எவ்வளவு தூரம் கேலிப் பேச்சு, எவ்வளவு தூரம் மனத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமான வஞ்சகப் பேச்சு என்பதைக் கண்டுகொள்வதும் எளிதாயில்லை. மதுராந்தகனையும் அங்கே வரவழைத்த பிறகு ஏதேனும் பெரிய விபரீத காரியம் செய்ய உத்தேசித்திருக்கிறானோ, என்னமோ, யார் கண்டது? மலையமானைப் பெரும் சைன்யத்துடன் படையெடுத்து வரச் செய்து கடம்பூர் மாளிகையை வளைத்துக் கொள்ளும்படி செய்தாலும் செய்யலாம் அல்லவா...?

இவையெல்லாவற்றையும் எண்ணும் போது தஞ்சாவூருக்குத் திரும்பிப் போய் விடுவதே நல்லது. சின்னப் பழுவேட்டரையன் நல்ல மதியூகி. அவனிடமும் யோசனை கேட்டுக் கொள்ளலாம். ஒருவேளை மதுராந்தகனை இங்கு அழைத்து வருவதாயிருந்தாலும், எல்லா நிலைமைக்கும் ஆயத்தமாகக் காலாந்தக கண்டனைப் பெரிய படை திரட்டிக் கொள்ளிடக் கரையில் கொண்டு வந்து வைத்திருக்கச் செய்யலாம். எது எப்படியானாலும் இளைய ராணியை இங்கே இனிமேல் இருக்கச் செய்து இந்த மூடர்களின் கேலிப் பேச்சுக்கு உள்ளாக்குவது கூடவே கூடாது. அவளை அழைத்துக்கொண்டு போய்த் தஞ்சாவூரில் விட்டு விடுவது மிக்க அவசியம். அதற்கு ஒரு வசதி இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைக் கைவிடுவானேன்?

இவ்விதம் ஒரு முடிவுக்கு வந்ததும் பெரிய பழுவேட்டரையருக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. முக மலர்ச்சியுடனே நந்தினியின் அந்தப்புரத்தை அடைந்தார். அங்கே அவர் வாசற்படியருகில் வந்தபோது உள்ளேயிருந்து கலகலவென்று சிரிப்புச் சத்தம் வருவதைக் கேட்டார். ஏனோ அந்தச் சிரிப்பின் ஒலி அவருக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. தஞ்சாவூர் அரண்மனையில் நந்தினி இவ்விதம் சிரிப்பதேயில்லை. இப்போது என்ன குதூகலம் வந்துவிட்டது? எதற்காகச் சிரிக்கிறார்கள்? அவளுடன் சேர்ந்து சிரிப்பது யார்...?

உள்ளே பிரவேசித்ததும் உடன் இருந்தவள் மணிமேகலை என்று தெரிந்தது. இதனால் அவர் மனம் சிறிது தெளிந்தது. அவரைக் கண்டதும் மணிமேகலை சிரிப்பை அடக்குவதற்காக இரண்டு கைகளினாலும் வாயைப் பொத்திக் கொண்டாள். அப்படியும் அடக்க முடியாமற் போகவே சிரித்துக் கொண்டே அந்த அறையை விட்டு ஓடிப் போனாள்.

நந்தினியின் சிரிப்பு பழுவேட்டரையரைக் கண்டதுமே நின்றுவிட்டது. அவளுடைய முகமும் வழக்கமான கம்பீரத்தை அடைந்தது.

"ஐயா! வாருங்கள்! யோசனை

முடிவடைந்ததா?'' என்றாள்.

"நந்தினி! அந்தப் பெண் எதற்காக அப்படிச் சிரித்தாள்? ஏன் சிரித்துக் கொண்டே ஓடுகிறாள்?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"அதைச் சொல்லத்தான் வேண்டுமா? சொல்லுகிறேன். சபா மண்டபத்தில் நடந்த பேச்சுக்களில் கொஞ்சம் பக்கத்து அறையிலிருந்த மணிமேகலையின் காதில் விழுந்ததாம். இளவரசர் ஆதித்த கரிகாலர் பாட்டன்களைப் பற்றியும் பாட்டிகளைப் பற்றியும் பரிகாசமாகப் பேசியதைச் சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

"ஓ! துஷ்டப் பெண்! அவளோடு சேர்ந்து நீயும் சிரித்தாயே?''

"ஆம்; அவளோடு சேர்ந்து சிரித்தேன். அவள் அப்பால் போனதும் அழலாம் என்று இருந்தேன். அதற்குள் தாங்கள் வந்து விட்டீர்கள்!'' என்று நந்தினி கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

"ஆகா! உன்னை இப்பேர்ப்பட்ட மூடர்களின் மத்தியில் நான் அழைத்துக் கொண்டு வந்தது என் தவறு. நாளைப் பொழுது விடிந்ததும் நாம் தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போகலாம். இன்றிரவு மட்டும் பொறுத்துக்கொள்!'' என்றார்.

"தஞ்சாவூருக்குப் புறப்பட வேண்டுமா ஏன்? வந்த காரியம் ஆகி விட்டதா?'' என்று நந்தினி கேட்டாள்.

அன்று சபா மண்டபத்தில் நடந்த பேச்சின் முடிவுகளைப் பழுவேட்டரையர் நந்தினிக்குத் தெரியப் படுத்தினார்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நந்தினி, "சுவாமி! தாங்கள் தஞ்சாவூருக்குப் போய் வாருங்கள். நான் வர மாட்டேன். ஆதித்த கரிகாலனுக்குப் புத்தி கற்பிக்கும் வரையில் நான் இங்கிருந்து புறப்படுவதாக உத்தேசமில்லை. அந்தக் கர்வம் பிடித்த இளவரசன் ஒன்று தங்கள் காலில் விழுந்து அவன் பேசிய பரிகாசப் பேச்சுக்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். அல்லது தங்கள் கத்திக்கு அவன் இரையாக வேண்டும்!'' என்றாள்.

"நந்தினி! இது என்ன சொல்கிறாய்? இத்தகைய பாதகமான எண்ணம் உன் உள்ளத்தில் எப்படி உதித்தது?''

"ஐயா! எது பாதகமான எண்ணம்? என்னைக் கைப்பிடித்து மணந்த கணவனை ஒருவன் நிந்தித்துப் பேசினால், அவனைப் பழிவாங்க வேண்டும் என்று நான் நினைப்பது பாதகமா?''

"இல்லை, நந்தினி! இதைக் கேள்! எங்கள் பழுவூர்க் குலம் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்புரிமை கொண்டது. அதையெல்லாம் மறந்து, அறியாச் சிறுவன் ஒருவன் ஏதோ உளறினான் என்பதற்காக நான் அக்குலத்துக்கு விரோதமாய்க் கத்தி எடுக்க முடியுமா? சுந்தர சோழரின் புதல்வனை, இன்றுவரையில் பட்டத்து இளவரசனாயிருப்பவனை, நான் என் கையினால் கொல்லுவதா? இது என்ன பேச்சு?'' என்று பழுவேட்டரையர் பதறினார்.

கரிகாலனுடைய காரசாரமான வார்த்தைகளைக் கேட்டபோது, சில சமயம் பழுவேட்டரையருக்கே உடைவாளின் மீது கை சென்றது. அப்போது சிரமப்பட்டு மனத்தையும் கையையும் கட்டுப்படுத்திக் கொண்டார். தம் உள்ளத்தில் முன்னம் தோன்றிய எண்ணத்தை நந்தினி வெளியிட்டுச் சொன்னவுடனே அவருக்கு அவ்வளவு பதற்றம் உண்டாயிற்று.

"ஐயா! தாங்கள் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்புக் கொண்டவர்கள்; உறவும் கொண்டவர்கள். ஆகையால் தாங்கள் கத்தி எடுக்கத் தயங்குவது இயல்பு. ஆனால் எனக்கு அத்தகைய உறவு ஒன்றுமில்லை. சோழ குலத்துக்கு நான் எவ்விதத்திலும் கடமைப்பட்டவள் அல்ல. ஆதித்த கரிகாலன் தங்கள் அடிபணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாவிட்டால், என் கையில் கத்தி எடுத்து நானே அவனைக் கொன்று விடுகிறேன்!'' என்றாள் நந்தினி. அப்போது அவளுடைய கண்கள் சிவந்து, புருவங்கள் நெரிந்து, முகத் தோற்றமே மாறி விட்டது.

(தொடரும்)

"ஜானு, இந்த அரை லிட்டர் பாலை பிரச்னையாக்கி காலங்கார்த்தால என் மூடைக் கெடுக்காதே! கெட்ட கோபம் வரும்!"

பொங்கினான் கோ. ராமன் – கோபக் காரராமன். இந்த ராமனுக்குப் பெரியவர் களாகப் பார்த்துச் சூட்டிய நாமகரணம் கோதண்டராமன். வில்லாயுதமின்றி சொல்லாயுதத்தால் பத்தினியுடன் மல்லுக் கட்டுவதில் மன்னன்.

"பின்ன உங்களுக்கே இது நல்லா யிருக்கா? என்னைப் பெத்தவங்க வந்தா அரை லிட்டர்தான் அதிகப்படி. உங்க அம்மா அப்பா வந்தா மட்டும் ஒரு லிட்டர் ஜாஸ்தியா? அவங்களுக்கு மட்டு மென்ன பாலபிஷேகம்?" –

ஜாடிக்கேத்த மூடி.

"பாரபட்சமில்லாம யார் வந்தாலும் ஒரே அளவு அதிகப்படிதான்! இப்ப சொல்லுங்க ஒண்ணா? அரையா?"

"எனக்கென்னவோ அரைதான்னு படுது" என்று கைகளை அவள் கன்னமருகில் காட்டியதுதான் தாமதம், ஜானு சிலிர்த்து, துவந்து யுத்தத்துக்குத் தயாராகுமுன் கண் களில் நீர்த்தேக்கம் உடைந்து பிரவாகமாக, கோ.ராமன் பேப்பரை விசிறி அடித்து விட்டு சமாதானம் கோரி அவள் பின்னே ஓட, பிள்ளைகள் புத்தகத்தை மூடிவிட்டு அவன் பின் ஓட, மிக்கி அண்ட் டோனால்ட் கார்ட்டூன் போல கட்டில், பீரோ, நாற்காலியைச் சுற்றி ஒரே ஓட்டம்!

ப்ளாட் வாசம் என்பதால் அண்டை வீடுகளிலும் இயக்கம் ஸ்தம்பித்தது. எல்லா ருக்கும் வரியின்றிக் கேளிக்கை.

இது ஒன்றும் புதுசல்ல. பத்தாண்டுகளாக நடக்கும் மெகாசீரியல். அடிக்கடி சமா தானமும் தலைகாட்டும். எல்லாம் விளம்பர ப்ரேக் மாதிரிதான்.

இந்த இரேதாயுகக் கூட்டணிக் குடும் பத்தின் எதிர் ஃப்ளாட்டில் வந்து குடியேறி னார்கள் அருண், ராதிகா. ஹைடெக் தம்பதி!

"நீ ராதிகான்னு தெரியும். நான் ஜானகி. எதிர் ஃப்ளாட். வேலை செய்றியா?"

"ம்... பாங்க் ஆஃப் அமெரிக்கா."

"அமெரிக்காலயா... இங்கியா...?"

கேட்டதும் சிரித்து விட்டாள் ராதிகா.

"அவர் என்ன பண்றாரு?"

"யாரு அருணா?"

"ஐயோ, பேர் சொல்லிக் கூப்டுவியா?" வியந்தாள் ஜானகி.

"ம்... ஒரு அட்வர்டைஸ்மென்ட் ஏஜென்ஸில வேலை செய்றார்."



அதிக 'ம்' பதிலில் வந்ததால், "என்ன ஹெல்ப் வேணுமானாலும் கேளு. புதுக் கல்யாணம், நெறைய தேவைப்படலாம்."

குறும்பாகச் சிரித்து அப்போதைக்கு விடைபெற்றாள், ஜானு.

''ஃப்ளாட் உறவு முறை இந்தியா - பாகிஸ்தானுக்குப் பாட்டன். திடீரென்று கைகுலுக்கும். மறுகணமே சுட்டுத் தள்ளும். இந்தக் கலாசாரத்தை மீறி, குறுகிய காலத்தில் ஜானகியின் பத்து வார்த்தைகளுக்கு ராதிகா இரண்டு என்ற மேனிக்கு சகஜ நண்பர்களானார்கள்.

பத்தெனக்கு!

அன்று அவசர அவசரமாக ஆபீஸ் கிளம்பிய ராதிகாவைப் பார்த்து, ''உங்கம்மாப்பா வரதா சொன்னியே, ஆபீஸா கிளம்பறே?'' என்றாள் ஜானு.

''ம்.... இத்தனை நேரம் சென்ட்ரல் வந்திருப்பாங்க. எல்லாம் அருண் பார்த்துப்பார்."

"அருணா?"

"ம்... இன்னைக்கி அவர் லீவ். காப்பி, டிபன், சாப்பாடு எல்லாம் - ஹி வில் டேக் கேர்! ஹி இஸ் எ குட் குக்!"

''அம்மா! நீ ரொம்ப லக்கி'' என்று பொறாமையோடு சொன்ன ஜானகிக்குப் பொறி தட்டியது.

"சப்போஸ், உங்க மாமியார் மாமனார் வந்தாலும் அருண்தானா?"

"நோ நோ நோ! அப்ப நான் லீவ் போட்டுட்டு எல்லாத்தையும் கவனிப்பேன். அவர் ஆபீஸ் போகணும்!"

"பிரமாதம் போ! உங்ககிட்டதான் நாங்க கத்துக்கணும் போல இருக்கு."

இதை வைத்தே கோ. ராமனை ஒரு உலுக்கு உலுக்க வேண்டும் என்று சதாப்தியாய் விரைந்தாள்.

சிறுசுகள் எப்படி அனுசரித்து வாழ்க்கை நடத்துகிறது என்று அடிக்கடி ஆச்சர்யப்படவே, அவர்களுக்கு வேண்டுமென்ற உதவிகளைச் செய்தாள் ஜானு. பரஸ்பரம் வளர்ந்தது, உறவு.

''ஜஸ்ட் ஒரு தொண்டை வலி ராதிகாவுக்கு. லீவ் போட்டாச்சு அருண். கேட்டா, ராதுவ விட வேலை முக்கியமாங்கறான்."

"ஜானு, புதுக் கல்யாணம். அப்படித்தான் இருக்கும்."

"ஹோ அப்படியோ? நமக்குக் கல்யாணம் ஆன புதுசுல நீங்க என்ன பண்ணினீங்க...?"

''உனக்குத் தொண்டை வலியே வரலியே?"

"ம்க்கும்! சவுகர்யமா மறந்தாச்சு. ஒருநாள் வயித்து வலியால துடிக்கறேன். ஆபீஸ்ல இன்ஸ்பெக்ஷன்னு ஓடியே போய்ட்டீங்க! சும்மாவா ஓடினீங்க? உங்கம்மாகிட்டே ஜானுவ பார்த்துக்கோ; ரொம்ப வலிச்சா வயித்துல விளக்கெண்ணெய் தடவுன்னு ப்ருஸ்கிருப்ஷன் வேற! கேவலம், அப்பவே



மாதுரி

எனக்குத் தெரிஞ்சு போச்சு. நான் குடுத்து வச்சது இவ்வளவுதான்."

சிறிது காலத்தில் ஜானகி, அருண் - ராதிகா சாம்ராஜ்யத்தின் ஆஸ்தான கவியாகி அவர்கள் புகழ் பாடியே கோ. ராமனை மிரட்டினாள். கேட்கக் கேட்க ராமனுக்கே பொறாமை வேர் விட்டது.

"தப்பே இல்லை! நம்ம விட வயசுல சின்னவங்களா இருந்தாலும் நல்லதை அவங்ககிட்டயிருந்து கத்துக்கலாம். அவங்க இருக்கற இடம் தெரியுதா? எதுவா இருந்தாலும் ரெண்டு பேரும் சேர்ந்து செய்யறாங்க. வேலையைப் பகிர்ந்துக்கறாங்க. ஒருத்தருக்கொருத்தர் மரியாதை கொடுத்துக்கறாங்க. வாழ்க்கைங்கற தராசை ஏத்த இறக்கம் இல்லாம ஒரு நிலைல புடிச்சுருக்காங்க பாருங்க!"

ஜானகி பொரிந்து தள்ளினாள்.

"ஜானு! தராசு கிராசுன்னு பேசுறியே, அவங்க நடத்தறது வாழ்க்கையா? வியாபாரமா?"

"ஒரேயடியா நெய்யும் வெண்ணெயுமா முழுங்கினா நீங்க வேறெப்படி பேசுவீங்க? நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்!"

"உங்கம்மா வீட்டுக்குப் போயிடப் போறியா? ஐ, ஜாலி!"

"நீங்க திருந்தவே மாட்டீங்க. நான் அவங்களைக் காப்பியடிக்கப் போறேன்."

"அய்யோ ஜானு! வேண்டாம், ப்ளீஸ். 'ப்ரோடோகால்' லைஃப் தாளாது. ரெண்டு அண்டை நாட்டுத் தூதுவர்கள் சேர்ந்து வாழ மாதிரி இருக்கும். பெரிய சித்ரவதை."

மேற்கொண்டு என்னவெல்லாமோ சொல்லிக் கதறினான். ராமன் பேச்சு அம்பலம் ஏறவில்லை. அருண், ராதிகா டிசைனுக்கு லைஃப் ஸ்டைல் மாற்றப்பட்டது.

காலை காப்பி - ராமன்
சமையல் - ஜானு
குழந்தைகள் குளியல் - ராமன்
குழந்தைகள் பள்ளிவிரட்டு - ஜானு

பிரதி சனிக்கிழமை துணிகள் இஸ்திரி. சனி மாலை பீச் - இப்படி அன்றாடம் அட்டவணைக்குள் வந்தது.

கொதித்தான் கோ. ராமன்.

"ஜானு! உனக்குப் புரியவே மாட்டேங்குது! லைஃப் ஃப்ரீயா இருக்கணும்! இப்படி இறுக்கமா இருக்கக் கூடாது. கோபம் வந்தா கத்தணும், ஜாலியா இருந்தா சிரிக்கணும், பாடணும், கொஞ்சம் சண்டை போடணும்..."

"உஷ்!" குறுக்கிட்டாள் ஜானகி.

"இது டிஸ்கஷன் டைம் இல்லை. ரீடிங் அவர்! பசங்க படிக்கறாங்க. நீங்களும் பேப்பரோ, இல்லை ஆபீஸ் ஃபைலோ எடுத்துப் படிங்க. தட்ஸ் ஆல்!"

"போற போக்குல தெளவு எடுத்தா சொறிஞ்சுக்கக் கூட சுதந்திரம் போயிடும் போல இருக்கு. காதுல விழுந்தா இதுக்கும் ஒரு டைம் ஃபிக்ஸ் பண்ணிடுவா" என்று முணுமுணுக்கத்தான் முடிந்தது!

"இப்பல்லாம் உங்க ஃப்ளாட்லேர்ந்து குக்கர் சப்தமும் ஸ்கூட்டர் சப்தமும் தவிர வேறெதுவுமே கேட்கிறதில்லையே? ஏதேனும் வேண்டுதலா, மௌனவிரதமா?" என்று அக்கம் பக்கம் கேட்கும் அளவுக்கு ஜானகி அவசர நிலைப் பிரகடனம் கொண்டு வந்துவிட்டாள்.

இரண்டு மாதமாக ராதிகா கண்ணில் படாதது ஜானகியின் நாசூக்குத் திரையைக் கிழித்துவிடும் போலிருந்தது.

ராதிகா எங்கே போனா? சொல்லாமப் போக மாட்டாளே? ஏதாவது விசேஷமா

"ஹம்பிக்குச் செல்லும் போதெல்லாம் என் மனத்தில் உற்சாகமும் பெருமிதமும் ஏற்படும். என்ஜினீயரிங் படித்து முடித்துள்ள எனக்கு அங்குள்ள சங்கீதத் தூண்களைக் கொண்ட விட்டலநாதர் கோவிலைப் பார்க்கும்போதெல்லம் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்பிகளின் திறமை நினைவு வந்து வியக்க வைக்கும். எனக்கும் மற்றவர்களைப் போல் அமெரிக்காவுக்குச் சென்று வேலை தேடிக் கொள்ள வேண்டுமென்பதுதான் விருப்பம். ஆனால் பெற்றோர்கள் இங்கேயே இருக்கச் சொல்கிறார்கள். இப்போது கூட ஆண்டுதோறும் 'ஹம்பி'யில் நடைபெறும் ரதோச்வா திருவிழாவின் போது அனைத்து மதத்தினரும் என்னுடைய அப்பாவிடம் வந்து ஆசிர்வாதம் பெறும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. அதனால் என்னுடைய முன்னோர் செய்த பல நல்ல காரியங்களுக்காகவாவது இங்கேயே தங்கி விடலாமென்று தீர்மானித்துவிட்டேன்" என்பவர், கிருஷ்ண



நான், கிருஷ்ணதேவராயன்!

தேவராயா!

29 வயதாகும் இவர் கி.பி.1556ஆம் ஆண்டுவரை விஜயநகர சாம்ராஜ்யத்தை திறுவி ஆட்சி புரிந்த கிருஷ்ண தேவராயர் வம்சத்தில் வழி வந்த பத்தொன்பதாவது தலைமுறையைச் சேர்ந்தவர். ஹாஸ்பெட்டில் பணி புரிந்து வரும் இவருக்கு இந்தியாவில் உள்ள பல அரச குடும்பத்திலிருந்து பெண் கொடுக்க முன்வந்த போதிலும் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ரத்னஸ்ரீ என்ற பெண்ணை சமீபத்தில் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்!

– மகேந்திரன்

இருக்குமோ? இதே கேள்விகளால் பல நாட்களாக டென்ஷன் தாளாமல் மனம் பதைத்தது. அருணிடம் கேட்டு விடலாம் என்று பலமுறை எண்ணி, ஒருநாள் கேட்டே விட்டாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ, அருண்!"

என்ன என்றான் அவன்.

''ராதிகா... ராதுவப் பாத்து ரொம்ப நாளாச்சு.... இருக்காளா?''

"இல்ல."

"ஏதாவது... விசேஷமா? அம்மா வீட்டுக்கு அனுப்பிருக்கியா?" – கண்களால் சிரித்தாள்.

"அம்மா வீட்டுக்குத்தான் போயிருக்கா. ஆனா விசேஷம்..." கையை விரித்தான்.

விஷயத்திற்கு வந்து விட்டபடியால் தைரியமாக, ''வெட்கப்படாதே! இன்னும் கன்ஃபார்ம் ஆகலை... அவ்வளவுதானே?''

அவன் ஒரு தபால் கவரை எடுத்துப் பிரித்துப் படித்தான்.

ராதிகாவின் லெட்டராகத்தான் இருக்க வேண்டும் என்று ஜானகி யூகிக்க,

''ராதுதான்'' என்று ஜானகியைப் பார்த்து, "கன்ஃபார்ம் ஆய்டுத்து!" சோகையாகச் சிரித்தான்.

"வெரிகுட். கங்கிராட்ஸ்!"

"கன்ஃபார்ம் ஆய்டுத்து. ரெண்டு பேரும் பிரியப் போறோம். டைவர்ஸ் பேப்பர்ஸ்."

இதைக் கேட்டதும் தலைக்குள் யாரோ படாரென்று சம்மட்டியால் அடித்த மாதிரி இருந்தது.

"விவாகரத்தா? காரணம்?"

"மனப்பொருத்தமில்லை!"

''என்ன உளர்றே அருண்? எங்களுக்கெல்லாம் பாடமாய் இருந்த உங்க ஒற்றுமைக்கு என்ன குறைச்சல்?''

"மாமி! இவ்வளவு எக்ஸைட் ஆகாதீங்க. வெளில தெரியலை. மனசுக்குள்ள ரொம்ப அடில வேற்றுமை இருந்திருக்கு போல!''

"அப்படி என்ன வேற்றுமை?''

''வேலையைப் பகிர்ந்துக்கிட்டா வாழ்க்கையைப் பகிர்ந்துக்கறதா இல்லை. மோனாலிஸா மாதிரி நிரந்தரப் புன்னகை மட்டுமே சந்தோஷம் ஆய்டுமா? மெய்யான உணர்ச்சிகளை மூடி வைக்காம வெளிப்படுத்தணும். ஜாலியா இருந்தா சிரிக்கணும், கோபம் வந்தா கத்தணும், கருத்து வேறுபாடுன்னா காரசாரமா சண்டை போடணும்...''

அருண் பேச, அதிர்ந்த ஜானகிக்கு கோ. ராமன் பேசுவதாகவே இருந்தது.

"ஆத்மார்த்தமா புரிஞ்சுக்க இதெல்லாம் தேவை போலிருக்கு. இதுல எதையுமே நாங்க செய்யலை!"

''இதுல பிரியற அளவுக்கு எங்கே பிரச்னை?'' ஆதங்கத்தோடு கேட்டாள்.

''மாமி, ஒருத்தருக்கொருத்தர் அறிவை விருத்தி பண்ண ஒத்துப் போனோம். வருமானம், வசதி விருத்திக்கு ஒத்துப் போனோம், குடும்ப விருத்தின்னு வந்த போதுதான் பிரச்னையே...''

ஜானகிக்கு கோ. ராமன் ரீ-ப்ளேயில் வந்தான்.

"ஜானு, வெற்றிகரமான தாம்பத்யத்துல, நமக்குத் தெரிஞ்ச சராசரி கணக்குப் போல ஒண்ணும் ஒண்ணும் சேர்ந்து ரெண்டு ஆயிடும். அரைகுறைல அதுவே முரண்டு பிடிச்சுக்கிட்டு, தனித்தனியா பதினொண்ணா நிக்கும். நம்பர்தான் பெரிசு!"

தன் அவசர நிலைப் பிரகடனத்தை வாபஸ் பெற அவசரமாக வீட்டுக்கு வந்தாள் ஜானகி. ●



பிச்சைக்காரி ஒருத்தி வாசலில் தன் குழந்தையைச் சற்றே உயரத் தூக்கிப் போட்டுப் பிடித்துக் கொண்டிருந்தாள். குழந்தை சிரிப்பதைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தாள். பாசமும் பொருளாதாரமும் தொடர்பற்றவையா? ஒருவேளை இரண்டுக்கும் தலைகீழ் விகிதமோ? பணம் படைத்தவள் தெருவில் தன் குழந்தைக்கு இப்படி விளையாட்டுக் காட்டுவாளா? ஆனால் அவளுக்குத் தெரு என்பதே வீடல்லவே? என்றாலும்

12



தாய்மைக்கு ஒரு தனி மகத்துவம் உண்டு என்றுதான் சுவாதி படித்த அனைத்து நூல்களும் கூறியிருக்கின்றன.

தந்தையை இழந்த தன்னைவிட பெற்றோர் இருவரையும் இழந்த முன்னாவை நினைக்கும்போதே அவளுக்கு இன்னமும் இரக்கம் தோன்றியது.

சென்னையில் தங்கியிருக்கும் இந்தக் கணத்தில் கூட 'முன்னா யார்? தனக்கு உறவா? இல்லையே. அப்பா தன் தலையில் கட்டிய சுமை. அவனுக்காகத் தன் வருங்காலத்தை எதற்குப் பலியிட வேண்டும்?'- இதுபோன்ற கேள்விகள் அவள் மனத்தில் எழவில்லை.

காரணம் சிறுவயதிலிருந்தே முன்னா அவளுடைய தோழனாக இருந்து வந்திருக்கிறான். உடம்பு சரியில்லாமல் படுத்துக் கொண்டால் "அக்காவுக்கு உடம்பு சரியில்லை. இன்னிக்கு ஹோட்டல் சாப்பாடுதான்" என்று அப்பாவிடம் அறிவித்துவிட்டு, "சாயந்திரம் அவளை மறக்காம டாக்டரிடம்



கூட்டிக்கிட்டுப் போகணும். வரும்போது நிதிக்கு ஃப்ளாஸ்கிலே ஹார்லிக்ஸ் வாங்கிட்டு வந்துடுங்க பண்டிட்ஜி" என்பான் உரிமையாக.

மனநலம் சரியில்லை என்றால் கூட அந்தக் கோளாறிலும் ஏதோ ஒரு தர்க்க அறிவு தெரிந்தது போலப் படும் சுவாதிக்கு. இதுவரை ஒருமுறை கூட அவன் தன் கோபவெறியை அவளிடம் காட்டியதில்லை. அவன் அடிக்கடி அவனை வேலை வாங்கியதில்லை என்றாலும் சொன்னவரை ஒரு நாய்க்குட்டியைப் போலப் பணிந்து விரைந்து அவற்றை ஒழுங்காக நிறைவேற்றி வந்திருக்கிறான்.

அப்பா இல்லாதபோது வீட்டின் எதிர்ப்புறமாக நின்று கொண்டு அவளைத் திருட்டுத்தனமாக ரசித்து அசிங்கமாக விவரித்த ஒருவனின் மீது முன்னா ஒரு கல்லை வீசியெறிய, அதற்குப் பிறகு அவன் பார்வையிலேயே அவன் படவில்லை.

எல்லாவற்றையும் விட இன்னொரு முக்கியமான காரணம் சுவாதியின் மனத்தை அலைக்கழித்தது. தனக்கென்று யாருமே இல்லை என்ற நிலை ஏற்பட்டபோது அம்மா உயிரோடு இருப்பது தெரியவந்தது. இப்போது முன்னாவுக்கென்று வேறு யாருமில்லாத நிலையில், போதிய சிகிச்சை அளித்து அவனது வருங்

■ அருண் சரண்யா ■

"சென்னை
யில் உள்ள பல ரவுடிகள்
எனது கோர்ட்டில் ஆஜரானவர்
கள்தான். காட்டான் சுப்பிரமணியம்,
வெள்ளை ரவி, பாக்ஸர் வடிவேலு, வீரமணி
என்று பலரது வழக்கு விசாரணை எனது கோர்ட்டில்
நடந்திருக்கிறது. பிராட்வே பஸ் நிலையத்தில் பட்டப்
பகலில் ஒருவரை வெட்டிக் கொன்ற வழக்கில் வீரமணியைக்
கைது செய்திருந்தார்கள். ஆனால் கோர்ட்டில் யாருமே சாட்சி
சொல்ல வரவில்லை. வீரமணிக்கு விடுதலை கிடைத்து விட்டது.
அவரிடம், "நீ நிரபராதி என்று விடுதலை செய்யப்படவில்லை.
அதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்" என்று கூறினேன். உடனே
ஓபன் கோர்ட்டில் கடாலென்று சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து 'இனிமே
எந்த வம்பு தும்புக்கும் போக மாட்டேன் ஐயா' என்றார்!"

– சமீபத்தில் ஓய்வுபெற்ற நீதிபதி சம்பந்தம் கூறக் கேட்டவர்: ஸ்ரீநிவாசன்
படம்: குமரன்



• நீதிபதி சம்பந்தம்

காலத்துக்கு ஒரு பாதுகாப்பை ஏற்படுத்துவது அவசியமே என்று சுவாதி முடிவெடுத்தாள்.

பலரும் நினைத்திருப்பது போல் முன்னா ஊர்பேர் தெரியாத யாரோ இல்லை. அப்பாவின் பள்ளித் தோழர் ஒருவர் குடும்பத்தோடு சில நாட்கள் டேராடூன், முசோரி பகுதிகளை சுற்றிப் பார்க்க வந்திருந்தார். "சந்துரு, இந்த இயற்கைச் சூழல் முன்னாவுக்கு ஒரு மன அமைதியைத் தரலாம்னு நம்பறேன்" என்றபடி தன் மகனின் மனநிலைக் கோளாறை அவர் கூறியபோது அப்பாவின் முகத்தில் அதிர்ச்சி.

அதைவிடப் பலமடங்கு அதிர்ச்சியான முகத்தோடு அடுத்தநாள் மாலை, கலைந்த தலையும் கசங்கிய சட்டையுமாக, வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அப்பா. கூடவே முன்னாவும். "இப்போதைக்கு இவன் இங்கேதான் இருப்பான்" என்று மட்டும் சொல்லிவிட்டு ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு எங்கோ வெறித்துப் பார்த்தபடி ஆடத் தொடங்கி விட்டார். 'இப்போதைக்கு' என்றது எப்போதைக்குமே என்றானது.

அப்பாவின் நண்பர் குடும்பத்தை சுமந்து சென்ற டாக்ஸி, சாலை விபத்துக்குள்ளாகியதில் முன்னா தப்பிவிட, அவனது பெற்றோர் இறந்து விட்டனர். முன்னாவின் உறவினர்களுக்கு அப்பா கடிதம் எழுதிப் போட்டார். சிலரைத் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டார். ஆனால் முன்னாவுக்கு மிக நெருங்கிய உறவினர்கள் என்று யாரும் இல்லாததினாலும், மனநிலை குன்றிய ஒரு சிறுவனை வளர்ப்பதில் தூரத்து உறவினர்கள் ஆர்வம் காட்டாததாலும் முன்னா இவர்களுடனேயே தங்க வேண்டி வந்தது.

இதையெல்லாம் பிமலா திதி உட்பட யாரிடமுமே கூறத் தோன்றியதில்லை சுவாதிக்கு. "ஓ, அனாதையா?" என்ற கேள்வியோ, அனுதாபமோ யாரிடமிருந்தும் அவனுக்குப் பெற்றுத் தருவதை அவள் விரும்பவில்லை.

இப்போது வேறுவிதக் குறுகுறுப்பு. சிகிச்சை சரி, பள்ளிக் கூடம் சரி, முன்னாவை விடுதியில் ஏன் சேர்க்க வேண்டும்? ஒருவேளை ஒரு 'சுமை'யைத் தள்ளிவிடப் பார்க்கிறேனோ?


மீண்டும் அவள் மனத்தில் அந்தப் படகு ஓவியம். இலக்கை அடைய வேண்டுமானால் கயிறை அறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். நாளைக்கே முன்னா குணமாகி முழு மனிதனாகி விடலாம். நானும் ஒரு சிறந்த விமானப் பணிப்பெண்ணாகப் பேரெடுக்கலாம். இரண்டுமே நிஜமாகட்டுமே. தாற்காலிகமாக அவனைப் பிரிவதுதான் இருவருக்குமே நல்லது.

அதே சமயம் எந்த தைரியத்தில், எந்தப் பொருளாதார பலமிருப்பதாக நம்பிக் கொண்டு இப்படி யோசிக்கிறோம் என்றும் தோன்றியது. இருக்கும் பணத்தை முன்னாவுக்காகக் கொடுத்து விட்டால் தான் எப்படி ஏர்ஹோஸ்டஸ் ஆக முடியும் என்ற நினைப்பும் அவளுக்குத் தோன்றாமலில்லை. ஆனால் எப்படியும், கூண்டைவிட்டு சமீபத்தில்தான் வெளியே வந்திருக்கும் தான் பறப்பதற்கு அம்மா நிச்சயம் உதவுவாள் என்ற நம்பிக்கை பிறந்திருந்தது. அதே சமயம் என்னதான் அம்மா சமூக சேவகியாக இருந்தாலும் அவளுக்கு எந்த விதத்திலும் ஒட்டோ உறவோ இல்லாத முன்னாவுக்கான செலவுகளை அவள் தலையில் கட்டுவது சரியில்லை என்றும் பட்டது.

இதையெல்லாம் தெளிவாக யோசிக்கத் தெரிந்த அவளுக்கு பிரசாதின் விஷயத்தில் மட்டும் ஏன் தெளிவு ஏற்படாமலிருக்கிறது என்பது புரியவில்லை.

'ஸ்டூல் சம்பவம்' நடந்த மூன்று நாட்களிலேயே வீட்டுத் தோட்டத்தில் அவனைப் பார்க்க நேர்ந்தது.







"சம்பந்தி! பில் கிளின்டனை உங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கலாம். அதுக்காக உங்க பையன் கல்யாணத்துக்கு கிளின்டனோட சாக்ஸபோன் கச்சேரிய ஏற்பாடு பண்ணனும்னு கண்டிஷன் போடறது கொஞ்சங்கூட நியாயமில்லை!"

— பாளை. பாலு

"என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறே சுவாதி?"

"எதுவுமில்லே."

"ஆனா உன்னைப் பற்றி நான் நிறைய நினைக்கிறேன். ராத்திரியில் கனவிலே கூட. உங்க அம்மாவுக்குக் கூட நம்முடைய திருமணத்திலே முழுச் சம்மதம் இருக்கும்."

அம்மாவைக் குறிப்பிட்டு தன் புறம் இவன் நம்மை இழுக்க நினைப்பது தற்செயலா? திட்டமிட்ட தந்திரமா?

"என்ன சுவாதி மௌனமாயிருக்கே. உன்னைப் பார்த்தப்பவே நீ எனக்காகத்தான்னு ஒரு பட்சி சொல்லிச்சு."

"பொய் பிரசாத், வங்கிக்கு என்னோடு வந்தபோதெல்லாம் நீங்க இயல்பாகவும், விளையாட்டுத்தனமுமாகத்தான் இருந்தீங்க."

"அப்படியா? பின்னே எப்போதிலிருந்து எனக்கு இந்த எண்ணம் தோன்றியிருக்கும்னு நினைக்கிறே?"

சுவாதி தடுமாறினாள். அதை நானே சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். சொன்னால் "உன்னாலும் அந்த சம்பவத்தை மறக்க முடியவில்லை பார்த்தாயா?" என்று தொடங்குவான்.

"சுவாதி, இல்லற வாழ்க்கைன்றது ஒருவர் தடுக்கி விழும்போது மற்றவர் கைகொடுப்பதாக இருக்கணும். அதற்கு ஏற்ற மாதிரி இன்றைய சம்பவம் நடந்தது தெய்வ அருள்தான்."

சுவாதி முறைக்க, "சாரி, திமிர்னு நினைச்சுக்காதே. கிண்டல் என் ரத்தத்திலேயே ஓடுகிற விஷயமாயிடுச்சு. உன் சம்மதத்தைக் கேட்கும் இந்த நிமிடம் நீ மறுத்துடுவியோன்ற பயம் எனக்கு எந்த அளவுக்கு இருக்கு தெரியுமா?"

"இந்த ஒரு வாரமாகத்தான் நான் உங்களுக்குப் பழக்கம். அதற்குள்ளே எந்த அடிப்படையில் என்னைத் திருமணம் செய்துக்க முடிவெடுத்தீங்க?"

"நீங்க சத்யா அக்காவின் மகள். அது ஒண்ணு போதாதா?" என்று ஏதோ பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்திவிட்ட பூரிப்போடு அவன் சொன்னான்.

பிரச்னையைத் தள்ளிப்போடு என்று எச்சரித்தது சுவாதியின் உள் மனது.

"இதுபற்றி அப்புறமாகப் பேசலாம். நேற்று காலையிலே உங்க சிஸ்டரைப் பார்க்க டாக்டர் மனோன்மணி வந்திருந்தாங்க..."

தொடர்ந்து, முன்னாவை அழைத்துக் கொண்டு கிளினிக்கிற்குச் சென்றது, அவனை விடுதிப் பள்ளியில் சேர்த்துவிடும் முடிவுக்கு வந்தது பற்றியெல்லாம் விளக்கமாகச் சொன்னாள்.

முன்னாவிடம் அவனுக்கு நிஜமாகவே ஒரு அக்கறை இருந்தது என்பதிலும், பொதுவாகவே மனிதாபிமானமும், உதவி செய்யும் போக்கும் அவனிடம் அதிகம் காணப்பட்டது என்பதிலும் அவளுக்கு சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால் அவளுக்கு சந்தேகம் ஏற்படும்படியான ஒரு நிகழ்ச்சி அடுத்த நாள்தான் நடந்தது.

தபால்காரர் ஒரு அஞ்சலட்டையை எடுத்துக் கொண்டு வர, அவரிடம் பேசியபடி வந்த பிரசாத் அதை வாங்கிக் கொண்டான். சுற்றுமுற்றும் சற்று கள்ளத்தனத்துடன் பார்த்துவிட்டு அதைப் படிக்கத் தொடங்கினான். பிறகு அதைக் கிழித்துத் தன் சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு நகர்ந்தான்.

(மேலும் பறக்கும்)

சிறப்புப் பகுதி

ஓர் இளைஞன் இருந்தான். அவனுக்கு ஒரே ஒரு பலவீனம் தான். சில நாட்கள், அவன் காலையில் எழுந்து இரண்டு தடவை பல் தேய்த்தது உண்டு. காரணம், அவனுக்கு காலையில் எழுந்தவுடன் ஒரு தடவை பல் தேய்த்தாகி விட்டது என்பது கூட மறந்து விடும். சில தினங்களில், சாப்பிடாமலேயே காலில் செருப்பை மாட்டிக் கொண்டு வெளியில் புறப்பட்டு விடுவான். வீட்டில் இருப்பவர்கள், "சாப்பிட்டு விட்டுப் போகக்கூடாதா?" என்று கேட்டதற்குப் பிறகு தான், தான் சாப்பிடவில்லை என்பது அந்த இளைஞனுக்கு நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு 'ஞாபகசக்தி' கொண்டிருந்தான் அந்த இளைஞன்! இன்று அந்த இளைஞன் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, நினைவாற்றலை மேம்படுத்த வகுப்புகள் நடத்திக் கொண்டிருக்கிறான். வேறு யாருமில்லை... நான்தான்!

நினைவாற்றலை வளர்த்துக் கொள்வது கஷ்டமான விஷயமே இல்லை. ஞாபகசக்தி நமக்கு ரொம்பக் குறைவு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள், முதன் முதலாக ஒரு காரியத்தைச் செய்தே தீரவேண்டும். 'எனக்கு மெமரி ரொம்ப வீக்!' என்று கொஞ்சம் பெருமை தொனிக்க மற்றவர்களிடம் சொல்லுவதை நிறுத்த வேண்டும். 'என் கிட்டே பணம் இல்லை; என்னிடம் அணிந்து கொள்ளப் போதுமான அளவு உடைகள் இல்லை! என்னிடம் ஒரே ஒரு சாதாரண செயின் தவிர, அணிந்து கொள்ள வேறு எந்த நகையும் கிடையாது; என் பையனுக்குப் படிப்பு சரியாக வராது; ஆகவே பரீட்சையில் அவன் வாங்குகிற மார்க் எப்போதும் குறைச்சலாகவே இருக்கும்' இப்படியெல்லாம் நாம் மற்றவர்களிடம் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், நாம் எப்படிச் சொல்லுவோம்? தயக்கமிருக்கும்; வருத்தம் இருக்கும்; அவமானமாகக் கூட இருக்கும். ஆனால் எனக்கு ஞாபகசக்தி குறைவு!''



டாக்டர். ஜே.என். ரெட்டி

மறக்கவே மாட்டோம்!



யாரையாவது ஒரு தடவை பார்த்துவிட்டு, மறுபடி பார்க்க நேரிட்டால், முகம் பரிச்சயமானதாகத் தோன்றும். ஆனால், பெயர் நினைவுக்கு வராது!" என்றெல்லாம் தர்மசங்கடம் ஏதுமின்றி நம்மால் சொல்ல முடிகிறது என்றால் அதற்கு என்ன காரணம்?

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், தாமஸ் ஆல்வா எடிசன் போன்ற மாபெரும் விஞ்ஞானிகள், தமது ஆராய்ச்சியில் ஒரேயடியாக மூழ்கிப் போய்விட்டதன் காரணமாக, தங்கள் பெயர் மற்றும் வீட்டு முகவரியைக் கூட மறந்து விட்டதாக நாம் படித்திருக்கிறோம். அவர்கள் ஆராய்ச்சியில் ஆழமாக மூழ்கிப் போனதால்தான் இந்த மறதி என்பதை மிகவும் சௌகரியமாக 'மறந்து' விட்டு (வேண்டுமென்றே இந்த மறதி!) அவர்களது மறதியை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்கிறோம்! இதனால், ஞாபகமறதி என்பதை அறிவுஜீவிகளின் குணநலனாக பாவித்துக் கொண்டு, தானும் ஒரு அறிவுஜீவி, ரொம்ப பிசியான ஆசாமி என்று மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக மறதியை பறை சாற்றிக் கொண்டிருக்கிறோம்!



இது முற்றிலும் தவறான அணுகுமுறை.

"யத் பாவம் தத்பவதி!" என்று சமஸ்கிருதத்தில் சொல்லுவார்கள். "நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படியேதான் நீ உருவாகிறாய்" என்பதுதான் இதனுடைய அர்த்தம். அதாவது, 'நமக்கு ஞாபகமறதி அதிகம்; நம்மால் எதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியாது' என்று சதாசர்வ காலமும் நாம் நினைத்துக் கொண்டிருந்தால், நமக்கு நினைவாற்றல் மிகவும் பலவீனமாகவே இருக்கும். ஆயுசுக்கும் அது அபிவிருத்தி அடையாது.

"நம் நினைவாற்றலை அதிகரித்துக் கொள்ள நம்மால் முடியும்" என்று உறுதியாக, பாசிடிவாக நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். நம்மால் முடியும் என்று பாசிடிவ் ஆக நினைத்துக் கொண்டு, அதற்கேற்ற பயிற்சிகளைக் கடைபிடித்தால் நிச்சயம் பலன் கிடைக்கும்.

சில சமயங்களில் போதிய அளவுக்கு முயற்சி இல்லையென்றால், பலனின்றியும் போகக்கூடும். ஆனால், நம்மால் முடியாது என்று நெகடிவ் ஆக நினைத்துக் கொண்டிருந்தால், நிச்சயம் நம்மால் நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ளவே முடியாது. நினைவாற்றல் என்று இல்லை; எந்த ஒரு விஷயம் ஆனாலும், அது குறித்து, நெகடிவ் ஆன எண்ணம் இருந்தால், அது நிச்சயம் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்!

எனவேதான், என் மாணவர்களுக்கு நான் எப்போதுமே, "உன்னால் நிச்சயம் முடியும் என்று முதலில் ஆழமாக நம்பிக்கை வை! அதுவே பாதி அளவு சாதித்ததற்குச் சமம்" என்று வலியுறுத்துவேன்.



'அது எப்படி முடியும்?' என்று இன்னமும் சிலருக்கு அவநம்பிக்கை இருக்கும். அப்போது நான் இதைத்தான் மேற்கோள் காட்டுவேன். "நமது மண்டைக்குள்ளே இருக்கும் மூளை என்பது சுமார் இரண்டு டிரில்லியன் மூளைச் செல்களால் ஆனது. அறிவுஜீவிகள், இந்த மூளையின் அபார ஆற்றலில் சுமார் பத்து சதவீதத்தை மட்டுமே உபயோகிக்கிறார்கள். 'உடம்பு முழுக்க மூளை' என்று புகழப்படுகிற ஐன்ஸ்டின் போன்ற ஜீனியஸ் கூட தனது மூளையின் முழு ஆற்றலில்



பதினெட்டு சதவீதத்தைத்தான் பயன்படுத்தியதாகச் சொல்கிறார்கள். சாமானிய மனிதர்கள் பயன்படுத்துவது வெறும் ஐந்து சதவீதம் மட்டுமே என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஆக, நாம் நமது மூளையை, ஐன்ஸ்டின் போலப் பதினெட்டு சதவீதம் இல்லாமல் போனாலும், சராசரி மனிதனைப் போல ஐந்தே ஐந்து சதவீத அளவுக்காவது பயன்படுத்த வேண்டுமில்லையா? எனவே, 'எனக்கு மெமரி ரொம்ப வீக்' என்று அனாவசியமாக, அபார ஆற்றல் கொண்ட மூளை மீது வீண் பழி சொல்லாதீர்கள்.


'மௌனமாக சப்தமிடுங்கள்' என்ற ஒரு வாசகத்தைப் நான் பயன்படுத்துவதுண்டு. அது எப்படி மௌனமாக இருந்து கொண்டு சப்தம் எழுப்ப முடியும்?

உங்கள் மனத்தில் எப்போது எல்லாம் சோர்வு ஏற்பட்டு, அவநம்பிக்கை ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் உங்களுக்கு நீங்களே, மனத்துக்குள்ளேயே, "ம்... கமான்... உன்னால் முடியும்..." என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு, நீங்களே கொடுத்துக் கொள்ளும் உற்சாக டானிக்! இது மற்றவர்களுக்குக் கேட்கவோ, தெரியவோ வேண்டிய அவசியமில்லை. மௌனமாய்ச் சப்தமிட்டு, அந்த அவநம்பிக்கையை விரட்டி அடியுங்கள். இந்த முறையைத்தான், விஞ்ஞானரீதியில், 'ஆட்டோ சஜஷன்' என்று குறிப்பிடுகிறார்கள்.

மாணவர்கள் பரீட்சைக்குப் படிக்கிற போது, ஒருவித பிரச்னையைச் சந்திப்பார்கள். படிக்கிற போது, எல்லாம் ஞாபகத்தில் இருக்கும். ஆனால் சில மணி நேரங்களுக்குப் பின்னால் படித்தது மறந்து விடும். இதனால், எவ்வளவுதான் கஷ்டப்பட்டுப் படித்தாலும், பரீட்சை எழுதுகிறபோது, படித்தது நினைவுக்கு வராது. இதனைச் சமாளிப்பது எப்படி? முதலில் ஒரு மணி நேரம் படித்தால், அடுத்த பத்து நிமிடங்களுக்கு ரெஸ்ட் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இந்த இடைவெளிக்குப் பிறகு, மறுபடி படிக்கத் தொடங்கும்போது, ஏற்கெனவே படித்தவற்றை ஒருமுறை ரிவைஸ் பண்ணிக் கொள்ள வேண்டும். அதுபோலவே, ஒரு தடவை படித்ததை, ஒரு வாரம் கழித்து, மறுபடி ஒரு மாதம் கழித்து, அடுத்து மூன்று மாதம் கழித்து, அடுத்து ஆறு மாதம் கழித்து என்று குறிப்பிட்ட இடைவெளிக்குப் பிறகு, ரிவைஸ் செய்து கொண்டே வந்தால், வருடத்தின் தொடக்கத்தில் படித்த விஷயம், வருடக் கடைசியில் தேர்வு எழுதுகிறபோது கூட நினைவில் நிற்கும்!

பொதுவாக, நினைவாற்றலை மேம்படுத்திக் கொள்ள உலகளாவிய முறையில் கடைப்பிடிக்கப்படும் டெக்னிக்கை சொல்லித் தரப் போகிறேன்.

உங்கள் நண்பர் அல்லது குடும்பத்தினர் யாரையாவது வைத்து பலவிதமான பொருட்களை – சுமார் நூறு – ரெடி பண்ணச் சொல்லுங்கள். பேனா, பென்சில் தொடங்கி, டெலிவிஷன், வரை எது வேண்டுமானாலும் இருக்கலாம். அந்த நூறு பொருட்களையும் ஒரு இடத்தில்



டாக்டர். ஜே. என். ரெட்டி, லயோலா கல்லூரியில் பேராசிரியராக இருந்தவர். மெட்ராஸ் அகாடமி ஃபார் எக்ஸலன்ஸ் என்ற அமைப்பின் இயக்குனர். சுயமுன்னேற்றப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறார். இதுவரை சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இவரது பயிற்சியின் மூலம் பலனடைந்திருக்கிறார்கள். இவரிடம் நினைவாற்றல் பயிற்சி பெற்ற மாணவர்கள் நிகழ்த்திய நினைவாற்றல் சாதனை, லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. சென்ற வருடம் சென்னையில் தேசிய நினைவாற்றல் சாம்பியன்ஷிப் போட்டிகளை நடத்தி பலரது பாராட்டைப் பெற்றவர் டாக்டர். ரெட்டி.



முறையாக வைத்து விடச் சொல்லுங்கள். அந்த அறைக்குள்ளே போய், நீங்கள் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டு, அங்கு என்னென்ன ஐட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பதைக் கூர்மையாகக் கவனித்துக் கொள்ளுங்கள். பின்னர் அந்த அறையை விட்டு, வெளியில் வந்து, ஒரு பேப்பர், பேனாவுடன் அமர்ந்து கொண்டு, சற்று முன்பு, அந்த அறைக்குள் பார்த்த பொருட்களின் பெயர்களை எல்லாம் பட்டியல் இட்டுப் பாருங்கள்.

எடுத்த எடுப்பிலேயே அங்கே வைக்கப்பட்டு இருந்த நூறு பொருட்களையும் நினைவுக்குக் கொண்டு வந்து பட்டியலிடுவது என்பது சாத்தியமில்லை. ஆனால் இதே டெக்னிக் மூலம் வேறு வேறு செட் பொருட்களை வைத்து விட்டு, மீண்டும் மீண்டும் அங்கு வைக்கப்பட்டுள்ளவைகளைப் பட்டியல் இட முயற்சி செய்யுங்கள்.

மேலே குறிப்பிட்டது போல, நூறு பொருட்களைச் சேகரிப்பது சிரமம்தான். எனவே, இதே நுட்பத்தை, வேறு ஒரு வகையிலும் பயிற்சி செய்து பார்க்கலாம். நிறைய பொருட்கள் வைத்துள்ள வீட்டின் சமையலறை, டிராயிங் ஹால் போன்ற இடங்களில் சில நிமிடங்கள் செலவு செய்து அங்குள்ளவை அனைத்தையும் நன்கு கவனித்துக் கொள்ளுங்கள். அதன்பின் அவற்றை நினைவுகூர்ந்து, பட்டியலிட முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு மிகவும் பரிச்சயமான உங்கள் வீட்டிற்குப் பதிலாக, உங்கள் அக்கம், பக்கத்தாரது வீடுகளிலோ, நண்பர்களுடைய வீடுகளிலோ கூட இந்த முறையை நீங்கள் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆரம்பத்தில், அதிகமான எண்ணிக்கையில், பொருட்களை நினைவுகூர்ந்து எழுத முடியாமல் போகலாம். ஆனால் அதற்காக மனம் தளர்ந்து விட வேண்டாம். தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.

அடுத்து 'நிமோனிக்ஸ்' என்று ஒரு டெக்னிக். ஒரு பெயரை நம் சௌகரியப்படி சிதைத்து, அதை நினைவில் வைத்துக் கொள்ளும் முறைக்குத்தான் நிமோனிக்ஸ் என்று பெயர். உதாரணமாக மும்பை கார்ப்பரேஷனில் நேர்மையாகப் பணியாற்றி, ஆன்றோரின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு, பின் தன் வேலையையே உதறிவிட்டு, இப்போது சமூகப் பணியில் ஈடுபட்டு வருகிறாரே அந்த அதிகாரி யார் என்று ஞாபகமிருக்கிறதா? கைர்நார்! அவரது பெயரை எப்படி நினைவு வைத்துக் கொள்ள...? ஊழல் பேர்வழிகளையெல்லாம் சேர்த்து கயிற்றால் கட்டித் தெருத்தெருவாக இழுத்து வந்து, அவர்களை நாற அடித்த மனிதர் என்று கொண்டு, நம் சௌகரியப்படி கயிறு, நாறு என்று சிதைத்து, அந்தப் பெயரை என்றும் நம் மனத்திலிருந்து அழியாவண்ணம் எளிதாக நினைவில் வைத்துக் கொள்ளலாம்.



நாம் சந்திக்கும் மனிதர்களை எப்படி நினைவில் வைத்துக் கொள்வது? அதற்கும் ஒரு உபாயம் சொல்லித் தருகிறேன். டெலிபோன் இன்டெக்ஸ் போல ஒரு நோட்டுப் புத்தகம் அல்லது டைரி வைத்துக் கொள்ளுங்கள். அதிலே அகர வரிசையில் பக்கங்கள் பிரித்துக் கொண்டு, அன்றாடம் நாம் சந்திக்கும் புதிய மனிதர்களைப் பற்றி அதில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். வெறும் பெயர், முகவரி மட்டுமின்றி அவரைச் சந்தித்த இடம், சூழ்நிலை மற்றும் அவரிடம் நாம் கவனித்த மிக வித்தியாச



மூட்டு வலியா! இனி கவலை வேண்டாம்!



மூட்டு வலி என்பது மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பை குறிக்கின்றது. இதனை கீழ்வாயு என்றும் அழைப்பார்கள் வாதம், பித்தம், கபம் போன்றவைகள் கூடுவதாலும், குறைவதாலும் இந்நோய் உண்டாகிறது. மூட்டு வலி பல வகைப்படும் அவைகள்:

வாதமூட்டு வலி - வாயுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. வாயுப் பொருட்கள், பயிறு வகைகள், பருப்பு வகைகள், கிழங்கு வகைகள் முதலியன. **பித்த மூட்டு வலி** - பித்தத்தை அதிகப்படுத்தும் உணவுப் பொருட்களை அதிகம் உண்பதால் உண்டாகிறது. டீ, காபி, மது, காரமான உணவு வகைகள் முதலியன. **கப மூட்டு வலி** - கபகுற்றம் மிகுதியான உணவுப் பொருட்கள் அதிகம் உண்பதால் கப மூட்டு வலி உண்டாகிறது. இனிப்பு பண்டங்கள், தயிர், இறைச்சி, நெய், எண்ணெய் பண்டங்கள் முதலியன. **இதய கீழ்வாயு** - இதயத்தை நோய் கிருமிகள் தாக்குவதால் இதய மூட்டு வலி உண்டாகிறது. இதனால் ஜுரம், முழங்கால் மூட்டுகளில் வீக்கம், வலி, சூடு போன்றன தோன்றும். சோதனை செய்து பார்க்கும்போது இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும். **மேக கீழ்வாயு** - விலை மாதர் உறவால் நோய் கிருமிகள் உடலில் பரவி மூட்டுக்களில் பாதிக்கின்றது. இதனால் மூட்டுக்களில் சீழ் பிடித்தல், வீக்கம், வலி, குத்தல், குடைச்சல் போன்றன இருக்கும்.

மூட்டு வலியின் அறிகுறிகள் - மூட்டுக்களில் வலி, குத்தல், குடைச்சல், வீக்கம், நடக்க இயலாமை, சுரம் போன்றவை காணப்படும். மேலும் எலும்பு தேய்மானம், சீழ்பிடித்தல் போன்றவையும் உண்டாகும்.

மூட்டு வலிக்கான மூலிகைகள் - வேப்பிலை, வில்வம், அத்தி, நாவல், அருகம்புல், அரசன், வாத நாராயணன், முடக்கற்றான், கீழாநெல்லி, முருங்கை போன்ற மூலிகைகளை பறித்து வந்து வெய்யிலில் உலர்த்தி பின் உரலில் போட்டு நன்கு இடித்துத் தூள் செய்து பின் சம அளவில் எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினமும் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ள வேண்டும். இவ்வாறு சுமார் மூன்று மாதம் செய்து வந்தால் எல்லா ரக மூட்டு வலிகளும் பூரண குணம் கிட்டும். சுமார் பதினைந்து நாட்களில் குணம் தெரிய ஆரம்பிக்கும்.

உணவு முறைகள் - தினம் காலை, அல்லது ஏதேனும் ஒரு வேளை பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்கள், பழ ஜூஸ்கள், வெஜிடபிள் சாலட், ஃப்ரூட் சாலட் போன்றவைற்றில் ஏதேனும் இரண்டு அல்லது மூன்று வகைகளை தேவையான அளவு உட்கொள்ளவும். உதாரணம் பப்பாளி, மா, அன்னாசி, வாழை, பேரீட்சை நாவல், கொய்யா, மாதுளை, சப்போட்டா, தர்பூசணி, நொங்கு, இளநீர், பதனீர், தேங்காய், கேரட், வெண்டை வெள்ளரிக்காய், கோவக்காய், பேரிக்காய் போன்றன உட்கொள்ளலாம். மற்ற இரண்டு நேரம் சாதாரண சமைத்த சைவ உணவுகளை உண்பது நல்லது. இதிலும் ராகி கோதுமை, பார்லி, உளுவல் போன்ற தானியங்கள் அடிக்கடி சேர்த்துக் கொள்வது நல்லது முள்ளங்கி, அவரை, கேரட், பீட்ரூட், வாழைத்தண்டு, கத்தரி முருங்கை போன்றவைகளை பொறியல் அல்லது சூப் செய்து சாப்பிடுவது நல்ல பலன் அளிக்கும்.

சத்தான உணவுகள் உண்பது - மூட்டுக்களை பாதுகாக்கின்றது. மூட்டுக்களில் வீக்கம் ஏற்பட்டால் மூட்டுக்களில் விளக்கெண்ணெய் சிறிது தடவி ஐந்து நிமிடம் கழித்து உப்பை அல்லது அரிசி தவிடு அல்லது கோதுமை தவிட்டை சூடு செய்து பின் இதனை துணியில் முடிந்து ஒற்றடம் கொடுக்கலாம். பின்னர் சுக்கை தூள் செய்து வெந்நீரில் கரைத்து பற்று போட வீக்கம், வலி, குறையும், தினமும் காலை எழுந்தவுடன் இயன்ற அளவு தண்ணீர் குடிக்கவும். வாரம் ஒரு நாள் பகல் ஒரு வேளை உணவை தவிர்த்தல் வேண்டும் ஒவ்வொரு வேளையும் முக்கால் வயிறு ஆகாரமாக உட்கொள்ள வேண்டும். புகைத்தல், மதுவகைகள், குளிர் பானங்கள், காரமான உணவு, டீ, காப்பி போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

உடற்பயிற்சி - நடத்தல், உட்கார்ந்து எழுதல், குனிந்து நிமிர்தல், கை, கால் விரல்களை, நீட்டி மடக்குதல், நின்ற இடத்தில் குதித்தல், ஓடுதல், நீந்துதல், மூச்சுப் பயிற்சி போன்றவைகள் எலும்புகளை ஒட்டுதல் முதலியன மூட்டுக்களை பலம் பெற செய்கின்றன. ஆகவே இதனை தினம் காலை, மாலை, சுமார் 20 நிமிடம் மெதுவாக செய்தல் நல்லது. சூரிய ஒளி தினமும் உடலில் படும்படி 10 நிமிடம் நிற்கவும். மேற்கூறிய முறைகளை பின்பற்றினால் எல்லாரக மூட்டுவலிகளில் இருந்தும் குணம் பெறலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன், Dr.M.சபாபதி, & Dr.M.சிவசக்தி, S/o.Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No:3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ 6424285, 6427638

குறிப்பு: சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் விபரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8-ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph: 4011589

9-ந் தேதி - பெங்களூர் : காலை 11 to 1 ஹோட்டல் பிராட்வே, கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2266374

18 & 19-ந் தேதி - புது டெல்லி: காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, ✆: 5717126, 5723651

மான அல்லது முக்கியமான விவரம் இவற்றையும் அதிலே குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, நடராஜன், ஒல்லியாய், சார்லி சாப்ளின் போன்ற உருவம்; ராஜூ, 'ஓகே. சார்! ஓ.கே. சார்!' என்று அடிக்கடி கூறுபவர், பெஞ்சமின் - சாமியார் போல மிக வித்தியாசமான காவி கலர் முழுக்கை சட்டை, பாண்ட்; ராஜேஸ்வரி! மூக்கைச் சுற்றி சிறிதாய் முகம். இப்படிக் கொஞ்சம் பர்சனலான, கொஞ்சம் ஓவரான விமர்சனமாகக் கூட இருக்கலாம்! காரணம், இது நமக்கு மட்டுமே பயன்படக்கூடிய ஒன்று அல்லவா?

மாதம் ஒரு தடவையோ, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையோ, இந்த நோட்டுப் புத்தகத்தை ஒரு புரட்டு புரட்டினால், பெயரையும் விளக்கத்தையும் படிக்கிறபோதே, மனத்திரையில் ஸ்பாட் லைட் போட்ட வெளிச்சத்தில் சம்பந்தப்பட்டவர், முகம் தெரியும்!

பெயர்களை ஞாபகம் வைத்துக் கொள்ள இன்னொரு முறையும் பரவலாகக் கையாளப்படுகிறது. ஒருவர் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது, அவரது பெயரை இந்தக் காதில் வாங்கி, அந்தக் காதில் விட்டு விடாமல், கவனமாக மனத்தில் பதியவைத்துக் கொள்வதும், அவருடன் பேசிக் கொண்டிருக்கிறபோது, அடிக்கடி அவரைப் பெயர் குறிப்பிட்டுப் பேசுவதும் ஒரு வழி. அப்படிப் பெய ரைக் குறிப்பிடுகிறபோது அவர்களுக்கு உரிய மரியாதையைத் தருவதற்கு மறந்துவிடலாகாது!

எண்களை நினைவில் வைத்துக் கொள்வது என்பது பலருக்கும் சிரமமான காரியம். ஆனால், எங்கள் 'மேக்ஸ் எக்ஸெல்' நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஒரு மாணவன், இரண்டாயிரத்து அறுபது எண்களை நினைவில் வைத்துக் கொண்டு, மடமடவென்று, ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும், அடுத்து, கடைசியில் ஆரம்பித்து பின்னோக்கியும் சொல்லி, லிம்கா சாதனை புரிந்தான்.

இது எப்படி முடியும்? இந்த முறையை விளக்குவது கடினம். வகுப்பில் நேரடி விளக்கம் மூலம் எளிதில் புரிந்து கொண்டு, பயிற்சி பெற்று, பலன் பெறலாம். இந்த முறையில், மனதுக்குள் பர்மனென்டாக ஒன்று முதல் நூறு கோப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய எண்களை, அவற்றுக்குரிய கோப்பில் வைத்துக் கொண்டு, கேட்கிறபோது, சரியாக நினைவுகூற முடியும்!

பொதுவாக நினைவாற்றலை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு இன்னொரு எளிய முறையைச் சொல்லித் தருகிறேன். காலையில் எழுந்தது முதல் என்னென்ன செய்தீர்கள் என்பதைக் காலையில் சிற்றுண்டி சாப்பிடும்போது நினைவுகூறுங்கள். பகல் சாப்பிடப் போகும் போது, காலையில் டிபன் சாப்பிட்ட பின், பகல் சாப்பாடு வரை இடைப்பட்ட நேரத்தில் நடந்தவற்றை நினைவுகூருங்கள். மறுபடி, இரவு சாப்பிடும் போது, பகல் உணவு முதல் இரவுச் சாப்பாடு வரை நடந்தவற்றை நினைவுபடுத்திப் பாருங்கள். இரவு படுக்கைக்குப் போனதும், தூங்குவதற்கு முன் காலை முதல் இரவு வரை நடந்த எல்லாவற்றையும் நினைவுகூறுங்கள். ஆரம்பத்தில் சில நாட்களுக்கு நடக்கிற எல்லா விஷயங்களையும் நூற்றுக்கு நூறு சதவீதம் நினைவுக்குக் கொண்டு வர முடியாது. ஆனால் தினமும் இந்தப் பயிற்சியைச் செய்து வந்தால், நாளடைவில் நினைவாற்றல் பெருகும்.

தியானம். இது நினைவாற்றலை அதிகரிக்க மிகவும் உதவியாக இருக்கிறது என்பது விஞ்ஞானரீதியாகவே நிரூபணமான விஷயம். தினமும் ஒரு பத்து நிமிடத்தை தியானத்துக்காக ஒதுக்கினால் மிகவும் நல்லது. இன்று நாட்டில் பலவிதமான தியான முறைகள் சொல்லித்



தரப்படுகின்றன. இவற்றில் எந்த ஒன்றையும் முறைப்படி கற்றுக் கொண்டு, தினமும் பயிற்சி செய்யலாம். இதன் பயனையும் கண்கூடாகக் காணலாம்.

நினைவாற்றல் அதிகமாக எந்தமாதிரியான உணவு அவசியம்?

உணவில் நிறைய கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். காய்கறிகள், பச்சையாகவே நிறையச் சாப்பிட்டால் நல்லது!

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**
படம் : **வெங்கடேஷ்**

பூர்வஜென்ம ஞாபகம் வருமா?

இது நிஜமாகவே ஒரு பரபரப்பான பேட்டி! இரண்டு ஆபரேஷன்களுக்கு இடையே நடந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

"டாக்டர்! ஞாபகசக்தி என்பது என்ன? அது உடல் சம்பந்தப்பட்ட விஷயமா? உணர்ச்சி (எமோஷன்) சம்பந்தப் பட்டதா? இரண்டும் இல்லாமல் மனம் சம்பந்தப்பட்டதா?"

"ஞாபக சக்தி என்பது மூளை சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். மூளை என்பது நம் உடம்பின் முக்கியமான உறுப்புகளுள் ஒன்று. எனவே, ஞாபகசக்தி என்பது, உடம்பு சம்பந்தப்பட்ட விஷயம் தான். ஆனால் உணர்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்கள், மற்ற வற்றை விட மூளையில் ஆழமாகப் பதிவாகின்றன. எனவே அவை நெடுநாள் நினைவில் இருக்கின்றன. மற்ற விஷயங்களை விட, வாழ்க்கையில் நடந்த சந்தோஷமானவை, துக்கமானவை, பாராட்டு அல்லது பழிவாங்கும் எண்ணம் இவற்றை அத்தனை சீக்கிரம் மறந்து விடுகிறார்களா? ஆக, நமக்கு நடைபெறும் ஒரு சம்பவம், அல்லது நாம் பார்க்கிற, படிக்கிற, கேட்கிற ஒரு விஷ யம், நமது மூளையில் பதிவாகிறது. பதிவாகணும்! இது ஒரு பகுதி. அதன்பின், தேவைப்படுகிறபோது, பதிவான விஷயங் களை, மறுபடி நினைவுக்குக் கொண்டு வர வேண்டும். இது இரண்டாவது பகுதி. ஆக, தகவல்களைப் பதிவுசெய்து கொள் வது, தேவைப்பட்டபோது, அவற்றை நினைவுகூறுவது இரண் டும் இணைந்ததுதான் ஞாபகசக்தி!"



"நேற்று நடந்த ஒரு விஷயம் சட்டென்று நமக்கு நினைவுக்கு வருவதில்லை. ஆனால், பல வருடங்களுக்கு முன்பு நடந்தது, நன்றாக நினைவில் இருக்கிறதே! ஏன் இந்த முரண்பாடு?"

"ஞாபகசக்தி மூன்று விதமானது. உதாரணம் சொல்கிறேன். ஒருவருக்கு ஆக்ஸிடென்ட் ஆகிவிடுகிறது. அடிபட்டவர், ஒரு டெலிபோன் நெம்பரைச் சொல்லி, அங்கு தகவல்



சொல்லும்படிச் சொன்னவுடன், அந்த நெம்பர் அப்போது நினைவில் இருக்கும். ஆனால் இரண்டு நாள் கழித்து, நினைத்துப் பார்த்தால், ஞாபகம் வராது. அது அவசியம் இல்லை என்று கூடச் சொல்லலாம். உபயோகம் முடிந்தவுடன், நினைவிலிருந்து அழிந்துவிடக்கூடிய இதுபோன்றவற்றுக்கு 'உடனடி நினைவாற்றல்' (இமிடியட் மெமரி) என்று பெயர். அடுத்தது குறுகிய கால நினைவாற்றல். சில விஷயங்கள், நம் நினைவில், ஒன்றிரண்டு வாரங்கள் நினைவில் நிற்கும். அதன்பின் நினைவிலிருந்து மறைந்து போய்விடும். மூன்றாவது வகை, நீண்ட கால நினைவாற்றல். இந்த வகையில் 'புரோட்டீன்கள்' என்கிற ரசாயனம் உருவாகி, மூளையில் விஷயங்களை அழுத்தமாகப் பதிவுசெய்கின்றன. சுவரில் ஆணியடித்து, போட்டோ மாட்டி வைக்கிறாற்போல என்று சொல்லலாம்.

உணர்ச்சிகரமான விஷயங்கள் – 'அன்றைக்கு என்னைப் பற்றி தவறாகப் பேசினானே, என்று அறுபது வருஷம் கழித்தும் கிழவனார் சொல்லிக் கொண்டிருப்பார். சின்ன வயதில் ஊக்கம் தந்த பாராட்டு, குழந்தையின் அன்பு, மனைவியின் பரிவு என்று... இவையெல்லாம் ஆழமாய்ப் பதிந்து, நீண்ட நாள் ஞாபகத்தில் இருக்கின்றன.''

"நினைவாற்றல் என்பது பிறவியிலேயே உருவாகும் குணமா? பயிற்சி மூலமாக மேம்படுத்திக் கொள்கிற திறமையா?''

''அடிப்படையில் நினைவாற்றல் என்பது பிறவியிலேயே இருக்கிற குணம். இது மனிதர்களுக்கு மட்டுமில்லை, ஆடு, மாடு... புழு, பூச்சிகளுக்குக் கூட நினைவாற்றல் உண்டு. ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்க்கையும் அதனதன் நினைவாற்றலைச் சார்ந்தே அமைந்துள்ளது.''

''ஆனால், மனிதர்களை எடுத்துக் கொண்டால், அனைவருக்கும் ஒரே மாதிரியான நினைவாற்றல் இருப்பதில்லையே? இது ஏன்?''

''அனைவருக்கும் மூளை ஒரே மாதிரிதான் இருக்கிறது என்று பொதுவாகக் கூறினாலும், அவரவர் மரபு அணு (ஜீன்ஸ்)க்கு ஏற்ப மூளையில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். அதற்கேற்பவே, நினைவாற்றலும் அமைகிறது. சில பேர், எதையும் ஒரே ஒரு தடவை சொன்னால் போதும். கற்பூரம் போலப் பிடித்துக் கொள்வார்கள். சிலருக்கு நாலைந்து தடவை சொன்னால்தான் மூளையில் ஏறும். இன்னும் சிலருக்கு பல தடவை சொன்னாலும், அத்தனை பலன் இருக்காது.

ஆனாலும் கூட, பயிற்சியின் மூலமாக, நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியும்.''

''வயதுக்கும், நினைவாற்றலுக்கும் என்ன தொடர்பு? வயதாக, வயதாக மறதி அதிகரிக்கிறதே?''

''முதுமைக்கும், ஞாபகமறதிக்கும் தொடர்பு இருக்கிறது. வயதாக, வயதாக, மூளையில் உள்ள ஞாபகசக்திக்குரிய செல்கள் சுருக்கமடைகின்றன. இதனால் ஞாபகசக்தி ஓரளவுக்குக் குறைகிறது. ஆனால், அவர்களுக்குக் கூட பழைய விஷயங்கள்



நரம்பியல் நிபுணர் டாக்டர். பி. ராமமூர்த்தி பேட்டி

நினைவில் இருக்கும். ஆனால், லேட்டஸ்ட் நடப்புகள் ஞாபகமிருக்காது. இதற்கு என்ன காரணம்? பழைய விஷயங்கள், புரொட்டீன்கள் உதவியால் மூளையில் ஆழமாக பதிந்து விட்டதுதான்.''

''அம்னீஷியா என்றால் என்ன?''

''ஒரு விபத்தில், மூளையின் ஒரு பகுதியில் சிதைவு ஏற்பட்டுப் போகலாம். அதனால், அந்தப் பகுதியில் உள்ள ஞாபகசக்தி புரொட்டீன்கள் பாதிக்கப்பட்டு, அதில் பதிவான விஷயங்கள் பாதிக்கப்படலாம்.''

''அம்னீஷியாவில் மறந்த விஷயங்களை திரும்ப நினைவுக்குக் கொண்டு வருவது சாத்தியமா?''

''அம்னீஷியா மூலம் மறந்த விஷயங்களை மறுபடி பெறுவது சாத்தியம்தான். தொடர்ந்த சிகிச்சை, பயிற்சி இரண்டினாலும் சுமார் தொண்ணூறு சதவீதம் வரை பழைய விஷயங்களை மறுபடி நினைவுக்குக் கொண்டு வந்து விட முடியும். ஆனால், இதற்குக் காலகெடு விதிக்க முடியாது.''

''இன்று மார்க்கெட்டில் ஏராளமாக நினைவாற்றல் அபி விருத்தி மாத்திரைகள் விற்கப்படுகின்றனவே. இவையெல் லாம், எவ்வளவு தூரம் உண்மையில் பயனுள்ளதாக இருக் கின்றன?''

''நினைவாற்றலை அபிவிருத்தி செய்யும் மூலிகைகள் பற்றி வேதங்களில் கூட சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றைக் கொண்டு இந்த மாத்திரைகளைத் தயாரிப்பதாகத்தான் சொல் கிறார்கள். ஆனால், இந்த மாதிரியான நினைவாற்றல் அபி விருத்தி மாத்திரைகள் எல்லாருக்கும் பயன்தரும் என்று விஞ் ஞானரீதியாக நிரூபிக்க மிகக் குறைந்த ஆதாரங்களே இருக் கின்றன. எல்லாருக்கும் நிச்சயம் பயன்தரும் என்று எப்படி உறுதி யாகச் சொல்ல முடியாதோ, அதே போலவே இவற்றால், பயனே இல்லை என்றும் அலட்சியப்படுத்திவிட முடியாது. வேறு எந்த வகையிலும் பலன் கிடைக்காத போது, இதனாலாவது கிடைக் கட்டுமே என்கிற நோக்கில் நான் கூட என் பேஷண்ட்களுக்கு நினைவாற்றல் அபிவிருத்தி மாத்திரைகளைச் சாப்பிடுவதற்கு, பரிந்துரை செய்து கொண்டிருக்கிறேன்.''

''மது அடிமைகளை மீட்க, மூளையில் ஏதோ ஒரு அறுவைச் சிகிச்சை செய்கிறார்களே! அது போல, ஞாபக மறதிக்காரர்களுக்கு, ஏதாவது ஆபரேஷன் செய்து, நினை வாற்றலை அதிகரிக்க முடியுமா?''

''நினைவாற்றல் குறைவு என்பது, மூளையில் கட்டி வந்து, அதன் காரணமாக ஏற்பட்ட பிரச்னை என்றால், கட்டியை ஆபரேஷன் செய்வதன் மூலமாக, அதனைத் தீர்ப்பது சாத்தியம். மற்றபடி, நினைவாற்றல் செல்கள் பலவீனமடைவதால், நினைவு மழுங்குவதற்கு அறுவைச் சிகிச்சை செய்து சீர் செய்ய முடியாது.''

''பூர்வஜென்ம நினைவுகள் பற்றி சினிமாக்களில் காட்டு கிறார்கள். அவ்வப்போது செய்திகள் கூட வருகின்றன? இதற்கு விஞ்ஞானரீதியில் சாத்தியம் உண்டா?''

''இல்லை! துளியும் இல்லை.''

சந்திப்பு : **கௌதம்**

படம்: **வெங்கடேஷ்**




ஏப்ரல் 12 முதல் 18 வரை




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

மதிப்பு உயரும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் அதிகமா இருக்கும். அதுக்காக ஓவரா போயிடாதீங்க. நிதானமா செயல்படுங்க. பண விஷயத்துல பிரச்னை இல்லை. கலைத்துறை, சினிமா, சங்கீதம், நாட்டியம் போன்ற துறைகளில் இருக்கிறவங்க முன்னேற்றத்தைக் காண்பாங்க. கணவன், மனைவி உறவு சீரா இருக்கும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். வெயில்ல ரொம்ப அலையாதீங்க. உஷ்ண நோய் ஏதாவது வரலாம். இந்த வாரம் மட்டும் வெளியூர் பயணத்தை ஒத்திப் போடுங்க.



ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசிரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க திட்டங்கள், எண்ணங்கள் பிரச்னைகளை சமாளிக்கிற ஆற்றல் கூடும். புதியவங்க உங்களுக்கு உதவ முன்வருவாங்க. வெளிநாட்டுத் தொடர்பால நன்மை கிடைக்கும். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுக்கெல்லாம் நல்ல நிலைதான். அரசியல்வாதிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும். மதிப்பு கூடும். பெண்களுக்கு இது நல்ல காலம். நினைச்சது நடக்கப் போகுது. ஒரு சில சின்ன சின்னப் பிரச்னைகள் வரும். கவனமா இருங்க. கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை அவசியம். பக்கத்துல யாராவது வம்பு பண்ணிட்டிருந்தாங்கன்னா மெதுவா அங்கிருந்து கழன்றுடுங்க.




மிதுனம் : *(மிருகசிரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்தவாரம் புனிதமான காரியங்கள்ல பங்கு பெற சந்தர்ப்பம் கிடைக்கும். உங்க திறமை, சாமர்த்தியம் எல்லாம் வெளிப்படுற நேரம் இது. நல்ல வரவேற்பும் பாராட்டும் கிடைக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற துறைகள்ல வெற்றி கிடைக்கும். புது சொத்துக்கள் சேரலாம். பண நடமாட்டத்துக்குப் பிரச்னையே இல்லை. வருமானம் பல வழிகளில் வரும்.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரத்தை உங்களுக்கான வெற்றி வாரம்னு சொல்லலாம். எந்தக் காரியத்துல இறங்கினாலும் சக்ஸஸ் ஆகும். பெயர், புகழ், பாராட்டு கூடும். சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற துறைகள்ல உள்ளவங்க முன்னணிக்கு உயருவாங்க. எதிர்ப்புகள் போயிடும். புதியவங்ககிட்ட எச்சரிக்கையா பழகுங்க. கணவன் மனைவிக்குள்ள சின்னச் சின்ன பிரச்னை வரலாம். விட்டுக் கொடுத்துப் போங்க. எதிலயும் அவசரப்படாதீங்க. இந்த வாரம் மட்டும் வெளியூர் பயணத்தை ஒத்திப் போட்டுடுங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

எடுத்த காரியம் நிறைவேறும். கவலையை மூட்டை கட்டி வச்சுடுங்க. பெரியவங்க ஆதரவு கிடைக்கும். இதுவரை இருந்த எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. பொருளாதாரப் பிரச்னை இருக்காது. கொடுக்கல் வாங்கல் இனங்கள்ல லாபம் காணலாம். ஆன்மீகவாதிகள், பக்தி மார்க்கத்தில் உள்ளவங்களுக்கெல்லாம் செழிப்பான நிலை உருவாகும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். புது ட்ரஸ், நகைகள் வாங்க சான்ஸ் இருக்கு. உஷ்ண சம்பந்தமான பாதிப்பு வரலாம். கவனமா இருங்க.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் கவனமா இருக்கணும். புதிய முயற்சி, புதிய துறைகளில் பிரவேசிக்க வேண்டாம். மாமூலான காரியங்கள்ல கூட தடைகள் முளைக்கும். பயணத்தைத் தவிர்த்துடுங்க. முக்கியமா இரவுப் பயணத்துக்கு முழுக்குப் போட்டுடுங்க. அலுவலகத்துல பிரச்னைகள் வரலாம். தினமும் தியானம் பண்ணிட்டு வெளியே போனா நல்லது. கூடுமானவரை எங்கயும் வாயைத் திறக்காதீங்க. பிற மொழி, மத இனத்தவர்களால நன்மை உண்டாகலாம்.


நடக்குமென்பார்



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

நீங்க போட்ட ப்ளான் எல்லாம் இந்த வாரம் நிறைவேறலாம். உங்க சாமர்த்தியம் திறமை பத்தி எல்லோரும் பேசுவாங்க. புகழ், பாராட்டுக்குப் பஞ்சம் இருக்காது. பொரு

ளாதாரம் சீரா இருக்கிறதால பண நடமாட்டத்துக்குப் பஞ்சம் இருக்காது. நீங்க எதிர்பார்த்த பணம் இப்ப வரலாம். சினிமா, சங்கீதம் போன்ற துறைகளை சேர்ந்தவங்களோட திறமைக்கானப் பலன் கிடைக்கும். ஏற்றுமதி, இறக்குமதியால லாபம் வரும். வீடு, நிலம், வாகனம் வாங்கறதா இருந்தா இந்த வாரம் வேண்டாம். புதியவங்களோட தொடர்பைத் துண்டிச்சுக்கிடறது நல்லது. வீண் அலைச்சலை தவிர்த்துடுங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்களுக்கு இந்த வாரம் நிறைய பாராட்டுக் கிடைக்கலாம். எடுத்த காரியங்கள் நிறைவேறும். எதிர்ப்புகள் விலகிப் போகும். வழக்கு விவகாரம், கோர்ட் இந்த வகையில் அனுகூலமான திருப்பம் ஏற்படலாம். இருந்தாலும் வெற்றி உங்களுக்குத்தான். ரியல் எஸ்டேட் பிசினஸில் லாபம் கிடைக்கும். புதிய சொத்துக்கள் சேர வாய்ப்பு



மகர ராசிக்காரரான ரஜினிகாந்துக்கு வாரக் கடைசில சில நன்மைகள் நடக்கப் போகுது!

இருக்கு. வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வரும். குடும்பத்துல மகிழ்ச்சி நிறைஞ்சு இருக்கும். திடீர்னு சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம். அவசரப்படாதீங்க. பொருளாதார விஷயங்களில் எச்சரிக்கை அவசியம்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

மனசுக்கு இன்பமான சம்பவங்கள் நடக்கும். எப்பவும் ரொம்ப ஜாலியா இருப்பீங்க. குடும்பத்துல சின்னச் சின்ன பிரச்னை வந்தாலும் சமாளிச்சுடுவீங்க. வெளியே இருந்து வரும் லெட்டர் நல்ல தகவல் ஒன்றைக் கொண்டு வரும். சினிமா, நாடகம், சங்கீதம், சிற்பத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு இந்த வாரம் கவலையே இல்லை. நல்ல முன்னேற்றம் இருக்கும். பார்ட்டிகளில் கலந்து கொள்ள அழைப்பு வரும். பொருளாதாரப் பிரச்னை இல்லை. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் இருக்கு. புதியவங்க கிட்ட பழகும்போது கவனம் தேவை. எதையும் அவசரம் அவசரமா முடிக்காதீங்க.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க மனசுக்குப் பிடிச்ச பொருள்கள் கிடைக்கும். சந்தோஷமா இருக்கலாம். நண்பர்கள், உறவினர்களால பிரச்னைகள் வரலாம். கவனமா இருங்க. கலைத் துறையை சேர்ந்தவங்களுக்கு நல்ல யோகம் வரும். குடும்ப நலம் சீராகத்தான் இருக்கும். கணவன் மனைவிக்குள்ள பிரச்னை வரலாம். விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. அரசியல்வாதிகள் அரசு பணியாளர்களுக்கு நல்ல காலம். வார முன் பகுதியை விட பின்பகுதியில நன்மை கூடும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*


நடக்கும்!

உங்க திறமை பளிச்சிடும். எந்தக் காரியத்தையும் அட்டகாசமா செஞ்சு முடிப்பீங்க. எதிரிகள்லாம் ஓடி ஒளிவாங்க. கோர்ட், வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்கு சாதகமான திருப்பம் வரலாம். விளையாட்டு, பந்தயங்களில் வெற்றியும் பரிசும் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவ வருவாங்க. கலைத் துறையை சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய சொத்துக்கள் வாங்க நல்ல நேரம் இது. கொடுக்கல் வாங்கல்ல மட்டும் கவனமா இருங்க. ஆடம்பர செலவுகளை தவிர்த்துடுங்க. சிக்கனம் அவசியம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்களோட செல்வாக்கும் மதிப்பும் கூடும். பண நடமாட்டத்துக்குப் பிரச்னை இல்லை. இதுவரை இருந்த எதிர்ப்புகள் விலகி ஓடும். பல வழிகளில் இருந்து பணம் வந்து பையை நிரப்பும். கலைத் துறையை சேர்ந்தவங்களுக்கு நல்ல நிலை ஏற்படும். வீட்ல சுப காரியம் நடக்க வாய்ப்பு இருக்கு. அரசியல்வாதிகள் திடீர் மாற்றங்களை சந்திக்க நேரிடலாம். வியாபாரிகள் அகலக் கால் வைக்கக் கூடாது. எதையும் திட்டமிட்டு செயல்பட்டீங்கன்னா நன்மைதான்.



ஏறும் விலைவாசி
போலுந்தன் அழகு
என்றைக்கும் குறையாதடி — தினம்
மாறும் உலகத்தில்
எல்லாமே மாறும்
என்காதல் மாறாதடி.

நாளும் அறிக்கைகள்
கொடுக்கும் உன்கண்கள்
அரசியல் வேடிக்கைகள் — சில
காலம் உன்னோடு
வாழ்ந்தால் அதுபோதும்
வேறில்லை கோரிக்கைகள்.

மார்கழிக் கோலத்தை
மனசுக்குள் இட்டுநீ
கண்காட்சி நடத்துகின்றாய் — இடைத்
தேர்தல் வருமுன்னே
எதிர்க்கட்சி வேட்பாளன்
போலென்னைக் கடத்துகின்றாய்

ஊழல் வெட்கத்தை
உன்னிடம் கண்டுநான்
வழக்குகள் தொடுத்துவைப்பேன் — நீ
வாழும் இடம்விட்டு
வேறெங்கு சென்றாலும்
சம்மனை அனுப்பி வைப்பேன்!

— யுகபாரதி

Registered with the Registrar of Newspaper of India under No. 104157 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 16.4.2000

